2652

சிவஸ்ரீ பூணைக்தசந்திர குருக்கள்

சிவஸ்ரீ பூரணசந்திர குருக்கள்
(பிரதமகுரு)

P. Seethachandy Kurukkal
Koundasgnam Kovil
Kopay

# யாழ்ப்பாணம் - கோப்பாய்,
# ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில்

## - ஓர் ஆய்வு. -


**செல்வி மகிந்தினி சீவகாருணியம்**

பதிவிலக்கம்: 96/A/SPI/305

சுட்டிலக்கம்: A/8264


இந்து நாகரிக சிறப்புக் கலைமாணித் தேர்வின்இறுதியாண்டுப் பரீட்சையின்ஒரு பகுதித் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக இவ் ஆய்வுக்கட்டுரையானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது – 2001


இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்பாணம்,
இலங்கை.

2002.

# பொருளடக்கம்

| பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|

சிவஸ்ரீ பூரணகீதசந்திர குருக்கள்
(பிரதமகுரு)
கந்தசாமி கோவிலடி
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

முன்னுரை

நன்றியுரை

அத்தியாயம் ஒன்று :- ஆலய அமைவிடமும் சூழலும் 1-18

1.1:- வலிகாமக்குப் பிரதேசம் ஓர் அறிமுகம்

1.2:- கோப்பாய் ஓர் அறிமுகம்

1.3:- பெயர் விளக்கம்

1.4:- கோப்பாய் மக்களின் பண்பாடும் பாரம்பரியமும்

அத்தியாயம்இரண்டு :- ஈழத்தில் முருகவழிபாடும் கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயவரலாறும் 19-47

2.1:- ஈழத்தில் முருக வழிபாடு

2.2:- யாழ்ப்பாணத்தில் முருக வழிபாடு

2.3:- ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயவரலாறு

அத்தியாயம் மூன்று :- கோயில் கிரியை மரபு 48-64

3.1:- நித்தியக்கிரியை

3.2:- நைமித்தியக் கிரியை

3.3:- காமியக்கிரியை

அத்தியாயம்நான்கு :- ஆலய நுண்கலைகளின் வளர்ச்சி 65-86

4.1:- கட்டடக்கலை

4.2:- சிற்பக்கலை

4.3:- ஓவியக்கலை

4.4:- இசைக்கலையும் நடனக்கலையும்

4.5:- அலங்காரக்கலை

# அத்தியாயம் ஒன்று

## ஆலய அமைவிடமும் சூழலும்

### 1.1 வலிகிழக்குப் பிரதேசம் ஓர் அறிமுகம்

ஈழவள நாட்டின் வடபால் விளங்குவது "ஈழத்தின் நறுநுதற்றிலக மென்றதை தர நின்றதும்", "சீர்புகழ் படைத்த ஆறுமுக நாவலர் ஏறுபோற் சைவம் இன்றமிழ் என்றிவை வளர்த்த பொன்னொடுமாய் மன்னு யாழ் நாடாகிய யாழ்ப்பாணமாகும். இந்த யாழ்ப்பாணத்தின் சிறப்பை,

"பொன்சேரிலங்கைச் சிரமெனவே வரும்
புன்னிய மோங்கிடும் யாழ்ப்பாணம்"

என நவாலியூர் சோமசுந்தரப் புலவர் மிக அழகாகப் பாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஒரு நீண்ட வரலாற்றுப் பெருமை உடையது. இது இயற்கை எழில் விஞ்சி நிற்கும் நாடு. ஸ்ரீவிராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடநாடிக்கு ஸ்தானம் என்று சாந்தோக்கியம் முதலான இடங்களிலே எடுத்தோதப்படுகிறது, இவ் இலங்கைத் தீவு. இது "தொடுகடலுடுத்த நிலமகட்கு முகமென மிளிரும் பரத கண்டத்தின் தென்பால் இந்து சமுத்திரத்தில் முத்துப்போன்று விளங்குவது. யாழ்ப்பாணம் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு குடாநாடு.

மணற்றியென்னும் பெயரோடு விளங்கிய பகுதியைத் தென்னிந்தியாவிலிருந்து வந்த வீரராகவன் என்னும் அந்தகன் யாழிசை மூலம் பாடிப் பரிசிலாகப் பெற்ற காரணத்தால் யாழ்ப்பாணம் எனும் பெயர் வழங்கலாயிற்று. யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண வைபவ கௌமுதி, யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாண இடப்பெயர் வரலாறு ஆகிய நூல்கள் குடாநாட்டின் வரலாற்றைத் தெளிவு

படுத்துவனவாகும்.[1] யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம் எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறியுள்ளார். ஆதியில் யாழ்குடாநாடு வடமராட்சி தென்மராட்சி எனப் பிரிக்கப்பட்டிருந்தது.[2]

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குப் பகுதியில் 42, சதுரமைல் பரப்பளவையுடையது, வலிகாமம். இப்பிரதேசத்தின் பௌதிக வளங்களான தரைத்தோற்றம், மண்வளம், தரைக்கீழ் நீர் என்பன பெரும்பாலான பிரதேசங்களில் சிறப்புற்றதாய் அமைகின்றது. வல்-விளை-கமம் வலிகமம் என்பது வலிகாமம் விளைந்து கமம் செய்கின்ற பகுதி வலிகாமம் என்பர். வலிகாமம் பகுதி நிர்வாக அடிப்படையில் வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தெற்கு, யாழ்ப்பாணம் என 5 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக அமைந்த வலிகாமம் பகுதியில் 12½ சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது வலிகாமம் கிழக்கு. இப்பகுதியில் கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி, ஊரெழு, உரும்பராய் ஆகிய உள்ளூராட்சிப் பிரதேசங்கள் அடங்கியுள்ளன.

## 1.2 கோப்பாய் ஓர் அறிமுகம்

கோப்பாய் யாழ்ப்பாணத்திற்கு வடகிழக்குத் திசையில் 5கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 6 சதுரமைல் பரப்பளவைக்கொண்ட இக்கிராமத்தை கோப்பாய் - பருத்தித்துறை பிரதான வீதியும், கோப்பாய் சந்தியூடாக கைதடி, மானிப்பாய் வீதியும் ஊடறுத்துச் செல்கின்றன.

இக்கிராமத்தின் வடக்கு எல்லையாக நீர்வேலியும், தெற்கு எல்லையாக இருபாலையும், கிழக்கு எல்லையாகக் கைதடியும், மேற்கு எல்லையாக உரும்பராயும் அமைந்துள்ளன. இவ் எல்லைகளுக்குட்பட்ட நிலம் பத்தாயிரத்து இருநூற்றிருபது கெக்டேயர் விஸ்தீரணமுடையது.[3]

இக்கிராமம் கடல்மட்டத்திலிருந்து 20 அடி உயரமான பரந்த தரையாகக் காணப்படுகின்றது. உப்பாறு கடனீரேரி இக்கிராமத்தின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளது. ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். வளங் கொழிக்கும் இவ்வூரின் மேற்குப் பகுதி முல்லை நிலத்தையும் கிழக்குப் பகுதி மருதமும் நெய்தலும் மயங்கிப் பொலியும் நிலத்தையுமுடையதாய் விவசாயம், கைத்தொழில் ஆகிய இரு துறைகளிலும் சிறப்புடன் மிளிர்கின்றது.[4]

பல்வகைச் சிறப்புக்களும் மிக்க இம்மண்ணில் யாழ்ப்பாணத் தமிழரசரின் கோட்டை ஒன்று இருந்ததனை நினைவூட்டும்கோட்டை வாய்க்கால், கோட்டைப்பனை எனும் இடப்பெயர்களுண்டு. பழைமையான கட்டட இடிபாடு களும் இக்கிராமத்தின் பழமையை விளக்குவனவாக உள்ளன. இவை கோப்பாய்க் கோட்டையை நினைவுபடுத்தும் சின்னங்களாக இன்றும் உள்ளன.[5]

இக்கிராமத்தில் தற்போது ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். (அண்மைக்கால சனத்தொகைக் கணிப்பீட்டின்படி) இவர்கள் பேசும் மொழி தமிழ் தாய்மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் உள்ளன. இங்கு இந்துக்கள் பெருந்தொகையினராகவும், உரோமன் கத்தோலிக் களும், ஏனைய கிறிஸ்தவர்கள் சிறுதொகையினராகவும் உள்ளனர். இவர்கள் பலதரப்பட்ட தொழிலில் ஈடுபட்டாலும் விவசாயத் தொழிலை மேற்கொள்வோரே எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர்.

புகழ்பூத்த பெரியார்கள் பலர் வாழ்ந்த மண் இது. பிரதேச செயலகத்தையும், சிறப்புமிகு ஆலயங்களையும், அறிவுப் பசிக்கு அருவிருந்தளிக்கும் பாடசாலைகளையும், வைத்தியசாலைகளையும், பொதுநிறுவனங்கள்பலவற்றையும் தன்னகத்தே கொண்டு உன்னதம் மிக்க எழில் வாய்ந்த ஒரு கிராமமாக இக் கோப்பாய்கிராமம் மிளிர்கின்றது.

## 1.3 பெயர் விளக்கம்

கோப்பாய் என்னும் பெயர் காரணப் பெயராகக் கொள்ளப் படுகின்றது. கா. வேலுப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பெற்ற "வடமாகாணங் களின இடப்பெயர்களின் வரலாற்றில் கோப்பாய் என்ற பெயருக்குக் கூறப் பட்டுள்ள காரணம் தற்போதுள்ள சமூக, பொருளாதார அம்சங்களுக்கு இணைந் ததாகக் காணப்படுகின்றது. அவர் கூறிய விளக்கப்படி, இப்பெயர் முன்பு சிங்கள வடிவத்தில், 'கொவிபாய' என்றும். அது காலப்போக்கில் மருவிக் 'கோப்பாய்' என்று வந்திருக்கலாம் என்றும் கருதக் கிடக்கின்றது. 'கொவிய' என்ற சிங்களச்சொல் வேளாளரைக் குறிப்பதால் இது வேளாளர் குடியிருப்பு என்று பொருள்படுகிறது.[6]

இந்த அடிப்படை தவிர, வரலாற்று ரீதியில் இப்பெயருக்கு விளக்கம் கற்பிக்க முற்படுவோர், சங்கிலி மன்னன் காலத்து வரலாற்று நிகழ்ச்சியுடன் இதனைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களின் படையெடுப்புக்களுக்குப் பயந்த சங்கிலி மன்னன் கோப்பாயிலமைந்த தனது கோட்டைக்குள் சென்று ஒளிந்திருந்ததாகக் கூறப் படுகின்றது. அரசன் போர்த்துக்கேயருக்கு எதிர் நிற்காது பின்வாங்கிக் கோப்பாய்க்குச் சென்றான் என்று வரலாறு கூறப்படுகின்றது. இதன் காரணமாக கோவ்பாய், கோப்பாய் எனப் பெயர் வந்ததாகக் கொள்ளலாம். அரசன் பாய்ந்து ஓடிய இடம் என்ற புகழ் இப்பெயருக்குள் பொதிந்து காணப்படுகிறது. சங்கிலி மன்னன் காலத்தில் நல்லூர் இராசதானிக்கும் வடமராட்சிப் பகுதிக்கு மிடையேயுள்ள போக்குவரத்துத் தொடர்புகளில் கோப்பாய் முக்கிய இடம் பெற்றிருப்பதாகவும், கோப்பாயில் அக்காலத்துத் தலைமைக் காரன் போக்கு வரத்துப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தான் என்றும் அறியப்படுகிறது. இவ்வாறு தமிழரசர்களின் கோட்டையாக இருந்த இடத்திற்குக் குதிரைப்படையோ, குதிரையோ பாய்ந்து வந்து போவதால் 'கோப்பாய்' எனப் பெயர் வந்ததென்பாரும் உளர்.[7]

வரலாற்று ரீதியாக நோக்கும்போது இலங்கையை அந்நியர் ஆட்சி செய்ய முன்புள்ள காலப்பகுதியிலும் கோப்பாய் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளதாகவும் அறியப்படுகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாறு கோப்பாயுடன் நெருங்கிய தொடர்பு பெற்றிருந்தமைக்குப் பல ஆதாரங்கள் உள்ளன. 'கோப்பாய்' பெயர்க் காரணம் வரலாற்று அடிப்படையில் அமைந்ததற்கு இன்றும் சான்றுகள் உள்ளன. சங்கிலி மன்னனுக்கே கோப்பாயில் ஒரு கோட்டை இருந்ததென்றும் அதுவே அவருடைய முக்கிய மறைவிடமாக அமைந்ததென்றும் கூறப்படுகிறது. கோப்பாய்ச் சந்தியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் கிழக்குப் புறமாகச் சந்தியிலிருந்து இருபத்தைந்து யார் தொடக்கம் இருநூறு யார்வரை அமைந்த பகுதிகள் பழைய கோட்டை என்ற பெயரால் இன்றும் வழங்கப்படுகின்றன. இப்பகுதி ஏறத்தாழ மூன்றுமைல் சுற்றளவு கொண்ட பகுதியாகப் பரந்துள்ளது. பெரும்பாலும் தோட்டங்களும், குடியிருப்புகளும் இன்று இப்பகுதியில் அழிபாட்டுச் சின்னங்களை மறைக்கும் வகையில் அமைந்துவிட்டபோதும் அப்பகுதிக்குரிய பழையகோட்டை என்ற விலாசமும் "கோட்டை வாய்க்கால் பனை" என்று வழங்கப்படும். அழிக்கப்படாத நிலையிலிருந்த பனந்தோப்புக்களும், ஆங்காங்கு காணப்படும் கட்டட எச்சங்களான செங்கற்களும் பழைய வரலாற்றைப் பகர்ந்து கொண்டிருக்கின்றன. இப்பகுதியில் எங்கு அகழ்ந்தாலும் செங்கற்களும், கட்டட இடிபாடுகளும் மண்ணுள் புதைந்து காணப் படுவது கோட்டையை நிலைப்படுத்தும் சின்னங்களாக உள்ளன. இங்கு கிடைக்கும் செங்கற்கள் இப்பிரதேசத்திற்கு உரியவை என்று எவ்வகையிலும் கொள்ள முடியாது. ஏனெனில் இப்பிரதேசம் நரை மண்ணைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு நோக்குமிடத்துக் கோப்பாய்ப் பகுதி முந்திய யாழ்ப்பாண இராச்சிய காலப்பகுதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது என்பது பெறப்படுகின்றது.[8]

## 1.4 கோப்பாய் மக்களின் பண்பாடும் பாரம்பரியமும்

இயற்கை அழகும் இனிமையும் இழைவெனக் காட்ட இயற்கை அன்னை தேர்ந்தெடுத்த இடமாக கோப்பாய்க் கிராமம் மிளிர்கின்றது. இவ் அழகிய கிராமத்திலே ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் இந்துமதத்தைச் சேர்ந்தவர்களாகவும், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இருப்பினும் இந்துக்கள் தொகையே அதிகளவில் காணப்படுகின்றது. இக் கிராமத்தில் வாழும் மக்கள் தம் பண்பாடு பாரம்பரியங்களைக் கட்டிக்காப்பதில் மிகவும் அக்கறையுடையவர்களாகத் திகழ்கின்றார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கும் இம் மக்கள் தம் அன்றாட வாழ்க்கையோடு ஆன்மீகத்தையும் வளர்ப்பதில் முன்நிற்கின்றனர். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலெனக் காணப்படும் இயற்கை வளத்தை உடைய இம் மண்ணில் விவசாயப் பெருமக்களே அதிகளவில் வாழ்கின்றனர்.

### 1. கமத் தொழில்

கோப்பாய்க் கிராமம் முல்லை, மருதம், நெய்தல் எனும் சிறப்பு மிகு நிலப்பரப்புக்களைக் கொண்டதாக விளங்குகின்றது. பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலமே இங்கு பெருமளவு காணப்படுகின்றது. கிராமத்தின் கிழக்குப் பகுதி வயல் வேளாண்மைக்கு ஏற்றதாகக் காணப்படுகின்றது.

யாழ் - பருத்தித்துறை வீதிக்குக் கிழக்குப் புறமாய் கைதடி-மானிப்பாய் வீதியின் இருமருங்கும் வயல் நிலங்கள் நிலத்தை உழுது பண்படுத்தி வைத்திருந்த மாரிகால ஆரம்பத்தில் புரட்டாதியில் கறுப்பன் (மொட்டைக் கறுப்பன் முதலிய நெல்லினங்களிலொன்றை விதைப்பர். தெற்கில் குளக்கரையை அண்டிய இடங்களில் மாத்திரம் ஆழமாத நெல் பெரு நெல் விதைப்பர். "ஆடி விதை தேடி விதை" என்பது அக்காலத்திற்கான பழமொழி. மாரிகாலத்தில்

வழிந்தோடும் வெள்ள வாய்க்கால் பலவின் மூலமும் வரும் நீரும், வயல்களை நிரப்பும் வெள்ளத்தின் கூட்டம் கூட்டமாக நின்று பெண்கள் களை பிடுங்குவதும் வெற்றிடங்கட்கு நாற்று நடுவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மார்கழி - தையில் வீதியின் இருமருங்கும் பச்சைப் பசேல் என்று காட்சியளிக்கும்.[9]

தைபிறந்தால் வழி பிறக்கும் என்பது அக்கால வேளாண்மைப் பழமொழி. தைப்பொங்கலுக்குப் புதிரெடுத்துப் பொங்குவர். மாசியில் அருவடை செய்து சூடு மிதிப்பர். ஆள்வசதிக்கும் தேவைக்கும் தக்கபடி மாடுகளை இணைத்துச் சூடு மிதிக்கும்போது "பொலி, பொலி" என்று சொல்லி மாடுகளை அழைப்பதும், மலி தூற்றும்போது 'வாதராசா பொலி' என்று சொல்லி வாயுதேவனை வரவழைப்பதும் வழக்கம். தூற்றியவுடன் நெல்லை முதலில் குவித்தால் அள்ளிக் கோயிலுக்கென வைப்பர். குவித்தால் அள்ளி, சாக்குகளில் இடும்போது ஒரளவு நெல் மிஞ்சியிருக்கும். அதனை வந்து நிற்கும் கம உதவியாளருக்கும், வழியவர்க்கும் குவித்தாலேயே அள்ளிக் கொடுப்பர். யாவும் நல்லபடியாகவும், வந்தவர்கள் மனம் குளிரவும் நடக்கும். "வேளாண் செய்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்பதனையும் குறிக்கும் போதும் பொங்கலின்போதும் அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.[10] நெல் அருவடை முடிந்ததும் சிறு தானியங்களும், சில மரக்கறிகளும் பயிரிடுவர்.

கோப்பாய் மண் பயிர்ச்செய்கைக்கு உகந்த மண்ணாக இருப்பதால் இங்கு வாழைப்பயிர் செழிப்பாக வளருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வாழைப் பயிர்ச் செய்கைக்குப் பிரசித்தி பெற்றவொரு இடமாகக் கோப்பாய் நீண்டகாலமாகக் கருதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இங்கு நரை மண் பிரதேசத்தில் நெல், தென்னை, மற்றும் காய்கறிவகைகளும், வாழையும், செம்மண் பிரதேசத்தில் உப உணவுப் பயிர்களுடன் புகையிலை, திராட்சை போன்ற பணப்பயிர்களும் விசேடமாகப் பயிரிடப்படுகின்றன.[11] சுவைதரு முக்கனி மரங்களும், வானுற ஓங்கி வளர்ந்த காமதேனுவாம் கற்பகதருக்களும் ஊருக்கு எழில் சேர்ப்பனவாகக் காணப்படுகின்றன. ஊற்றுக்கு என்பது விதைத்தினர் இங்கு விவசாயிகளே.

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

எனும் பொய்யா மொழிக் கிணங்க இவர்கள் விவசாயத்தையே தமது சீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.[12] இங்கு விளைவிக்கப் படும் பயிர்கள் இவர்களின் உணவுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்கின்றது.

"நீர்வேலி கோப்பாய் நிறைசெல்வம் ஆகும்" என்ற ஆன்றோர் வாக்கு இப்பிரதேசத்தின் செழிப்புக்குச் சான்றாக அமைகின்றது.

விவசாயத்துக்கு அடுத்த படியாக பாரம்பரியத் தொழிலாக இப்பிரதேசத்தில் காணப்படுவது பனம்பொருள் உற்பத்தித் தொழிலாகும். இப்பிரதேசத்தின் இயற்கை வளமாகிய பனையைச் சீவல் தொழிலாளர் பயன்படுத்தி அதிகவருமானம் பெற்று வருகின்றனர். கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள பனம் பொருள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் இவர்களுக்கு ஐக்கியமேர்ந்த உதவி வருகின்றது. நூற்றுக்கணக்கான சீவல் தொழிலாளர் இதனால் நன்மை பெற்று வருகின்றனர்.

விவசாயம் தவிர்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடத் தக்க மற்றொரு முயற்சி சிறுகைத்தொழில்கள் எனலாம். இப்பகுதி மக்களுள் ஏறத்தாழ ஐந்து சதவீதத்தினர் சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். பானை சட்டி வனைதல், தச்சு வேலைகள், வாகனம் திருத்துதல், உடைகள் தயாரித்தல், நெசவு நெய்தல் போன்றவற்றுடன் சுருட்டு, பீடி ஆகிய கைத் தொழில்களும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. மேலே குறிப்பிட்ட தொழில் களில் ஈடுபட்டவர்கள் தவிர ஏறத்தாழப் பதினைந்து சதவீதத்தினர் அரச உத்தி யோகங்களில் ஈடுபடுவோராகக் காணப்படுகின்றனர்.

## 2. கல்வி

### கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

"பண்டொருநாள் வடகோவை யாழ்ப்பாணத்தின் சரஸ்வதி பீடமாக விளங்கியது" எனக் கூறுவதிலிருந்து இக் கிராமத்தின் கல்விச் சிறப்பை நாம் எடைபோடலாம்.[13] மாணவச் செல்வங்களின் அறிவுப் பசிக்கு அருவிருந்தளிக்கவென முன்பள்ளிகளும், ஆரம்பப் பாடசாலைகளும், சாதாரண வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளும் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளும் நிலைப்பட்டுள்ளன. கோப்பாய் பகுதியில்ள சுமார் பத்துப் பாடசாலைகளுள் பிரபல்யமான கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக இப்பாடசாலை திகழ்கின்றது. கிறிஸ்தவ கல்லூரி என்ற பெயரோடு இலங்கினாலும் தற்போது இங்கு கிறிஸ்தவ மாணவர்களைக் காட்டிலும் இந்து மாணாக்கர்களின் தொகையே அதிகமாகக் காணப்படுகின்றது.

### நாவலர் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

நல்லைநகர் ஆறுமுக நாவலரின் நாமத்தைக் கொண்ட பாடசாலை ஒன்றும் இங்கு தனது கல்விப் பணியை நன்கு ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். ஆதியிலே பிரபல்யம் மிக்க சிரேஷ்ட பாடசாலையாக விளங்கி கோப்பாய் மண்ணுக்குப் பல அறிஞர்களை ஈன்றெடுத்த பெருமையும் இந்த நாவலர் பாடசாலைக்குரியது. ஆங்கிலக் கல்வி மோகத்தால் சைவமும், தமிழும் கோப்பாயில் முற்றாக அழிந்தொழியும் ஆபத்து ஏற்பட்டபோது அவ் அழிவிலிருந்து சைவத்தையும் தமிழையும் கட்டிக் காத்தபெருமை இப்பாடசாலைக்கே உரியது என்றால் அது மிகையாகாது. இன்று இப்பாடசாலை "நாவலர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை" என்ற பெயரோடு விளங்குகின்றது. அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கமைய தரம்பிரிக்கப்பட்டபோது 1972ல் கனிஷ்ட பாடசாலை

யாக்கப்பட்டது. மேல் வகுப்புக்கள் இல்லாமல் போனது பெரிய இழப்பு என்றாலும் இப்பாடசாலை அரும்பணியாற்றி வருகின்றது என்பதை மறுக்க முடியாது. "கடுகு சிறிதாயினும் காரம் பெரிது" என்பதுபோல இப்பாடசாலை சிறியதாயினும் அதன் தரம் சிறப்பு மிக்கதாகப் புகழ்பரப்பி வருகின்றது. ஐந்தாம் தரத்தில் நிகழ்த்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சையில் இப்பாடசாலை யாழ் நகர்ப் பாடசாலைகளுக்கு சமனாக வெற்றியீட்டி வருவதும் குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

கிறிஸ்தவ கல்லூரியும், நாவலர் வித்தியாலயமும் உட்பட இங்கு பத்துப் பாடசாலைகள் தம் பணியை செவ்வனே ஆற்றி வருகின்றன. இங்கு வாழும் மக்களும் தம்பிள்ளைகளை இப்பாடசாலைகளுக்கே அனுப்பி தம் ஊரின் பெருமையை உலகறியச் செய்வதில் முன்நிற்கின்றனர். இங்கு பாடசாலைகளை விட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும், கல்விக் கல்லூரியும் கிராமத்தின் ஒளிவிளக்கெனத் திகழ்கின்றன. இக்கல்விச் சாலைகளுக்குப் பல்வேறுபட்ட இடங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயில்கின்றனர். தனியார் கல்வி நிலையங்களும் நூல் நிலையங்களும் மாணவர்களின் மேலதிக கல்வித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

## 3. தமிழ் சைவம் வளர்த்த பெரியார்கள்

செந்தமிழுக்கும், சைவத்திற்கும், சமூகத்திற்கும் அரும்பெரும் தொண்டாற்றிய செம்மல்கள் பலர் இம் மண்ணிலே வாழ்ந்து மறைந்துள்ளனர். வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய சீரிய சிந்தனைகளும் நேரிய போக்கும் மக்களை வளம்படுத்தி வாழ்வித்துக் கொண்டிருக்கின்றன. இவர்கள் வரிசையில் வித்துவான் சபாபதி நாவலர் சேனாதிராய முதலியார், பண்டிதர் ச.கந்தையா பிள்ளை, குருமணி, வே.சிதம்பரப்பிள்ளை, அ. அம்பலவாண பண்டிதர், இந்து போட் இராசரத்தினம், திரு.மு. சுவாமிநாதன், வைத்திய கலாநிதி சி.சுப்பிரமணியம், அ.வி.மயில்வாகனம், எஸ்.ஆர் கனகசபை, சேர். கந்தையா

வைத்தியநாதன்; சித்தாந்த பானு சோ. சுப்பிரமணியக்குருக்கள், இன்னும் பலர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.

## சபாபதி நாவலர்

திருவாவடுதுறை ஆதீனத்தில் வித்துவானாகப் பணியாற்றியவரும் தமது சொல்வன்மைத் திறத்தால் "நாவலர்" என்ற பட்டத்தையும் பெற்றுப் புகழ்பெற்றவருமாகிய சபாபதி நாவலர் அவர்கள் கோப்பாய்க் கிராமத்தின் வடபகுதியைச் சேர்ந்தவர். வடகோவைச் சபாபதி நாவலர் என்றும் வழங்கப்படும் அப்பெரியார் ஆரம்பகாலக் கல்வியைக் கோப்பாயிலேயே பெற்றார் என்பதால் அவர் வாழ்ந்த காலமாகிய ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் கோப்பாய்ப் பகுதியின் கல்வி நிலை நன்றாக இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கப்படுகின்றது. அவர் ஆதாரக் கல்வியைக் கோப்பாயில் பெற்றுக் கொண்ட திறமையினால்தான் "செந்தமிழ் நாடெங்கணும் பைந்தமிழின் வரலாறு பரப்பிய பெருமை மிக்க திராவிடப் பிரகாசிகை" எனும் அரிய நூலைப் படைக்க முடிந்தது. தமிழிலக்கண, இலக்கிய சாஸ்திரங்களையும் அவற்றின் வரலாறுகளையும் மிகத் திறம்பட எடுத்துரைக்கும் இந்த நூல் பண்டிதர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும், பட்டப்படிப்புக்கென்று தமிழை விசேட நெறியாகப் பயில்வோருக்கும் கலங்கரை விளக்கம் போல உதவுகின்றது. நூலின் பெருமை அதன் ஆசிரியரையும், அவரின் ஊராகிய வடகோவையையும் கல்வித் துறையில் பெருமை கொள்ள வைக்கின்றது. இதை நன்குணர்ந்த வடகோவை வாசிகள் அன்னார் பெயரில் சனசமூக நிலையம் ஒன்றினை அமைத்து அதைப் பேணி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.[14]

## சேனாதிராய முதலியார்

சபாபதி நாவலரைத் தோற்றுவித்த அதனால் கோப்பாய் வடக்குப் புகழ்பெற்றதுபோன்று சேனாதிராய முதலியார் என்ற பெரும்புகழ் படைத்த கவிராயரைத் தோற்றுவித்துப் பெருமை பெற்றது கோப்பாயின் தென் பகுதியிலுள்ள இருபாலை என்னும் பதியாகும். இங்கு செல்வாக்குள்ள உயர்குலத்

பிறந்து கல்வி கேள்விகளில் வல்லவராகி, அரசாங்கத்தில் உத்தியோகமாக இருந்ததுடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுக்கு அக்காலத்தில் தமிழ் கற்பித்த ஆசானாகவும் விளங்கினார். இக்கிராமத்தில் கல்வி மேம்பாட்டிற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாக அமைகின்றார் சேனாதிராய முதலியார்.

**பண்டிதர் அம்பலவாணர்**

சேனாதிராய முதலியாரின் நன்மாணக்கருள் ஒருவராக விளங்கியவர் பண்டிதர் அம்பலவாணர் என்பவர். இவர் கோப்பாய் அருவும்பல முதலியாருடைய புத்திரராவார். சேனாதிராய முதலியாரிடம் இலக்கண இலக்கியங்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்த இவர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழைக் கற்பித்தவர். தனிப்பாடல்கள் பலவற்றை பாடியது மாத்திரமன்றி தனது ஆசிரியராகிய சேனாதிராய முதலியார் பாடிய "நல்லை வெண்பா" போன்றவற்றைத் தேடித் தொகுத்து அச்சிட்டார் எனவும் அறியப்படுகின்றது.

**வேறுசிலர்**

கோவியின் தென்பகுதியில் வாழ்ந்த மற்றுமோர் அறிஞர் பண்டிதர் கந்தையா என்பவராவார். சுவாமி விபுலானந்தர் அவர்களுக்கு ஆசிரியராக இருந்த இப்பேரறிஞர் அரசினர்ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இவர் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று தமிழும், சைவமும் வளர அரும்பணியாற்றியவர். இவரின் பெரிய அளவிலான உருவப்படம் ஒன்று கிராம நாதபுரம் சேதுபதி மகாராசா அரண்மனையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வடகோவைப் பகுதியில் வாழ்ந்தவரும், கோப்பாய் வடக்கு சரவணபவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியருள் ஒருவருமான ஸ்ரீமான் வே. சிதம்பரப்பிள்ளை அவர்கள் ஓர் வரகவி. கவி பாடுவதில் காளமேகம் போன்ற வல்லவர். புகழ்பெற்ற கவியாகிய கல்லடி வேலுப்பிள்ளையுடன் சொல்வழக்காடியவர். கும்மி, கோலாட்டம் ஆகியவற்றை எளிய தமிழில் ஆக்கித் தம்முடன் கலைகளையும் வளர்த்தவர். தமது வாரிசுகளாகக் கவிபாடும் பலசீடர்களையும் படைத்தவர். அவரின் கல்விப் பணியைப் போற்றி அவர் முன்னின்று நிறுவிய சரவணபவானந்தா வித்தியாலயத்தில் அன்னாரின் பெயரில் சிறந்த வெளி அரங்கு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரபு முறைக் கல்வி பெற்ற அண்மைக்காலப்பகுதியில் சைவசித்தாந்தக் கருத்துக்களில் ஆழ்ந்த புலமையும் வடமொழி, தென்மொழிகளில் பரந்த அறிவும் பெற்றவராக வாழ்ந்து கொண்டிருப்பவர் வடகோவை சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள். 1971ம் ஆண்டில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனத்தார் அன்னாருக்குச் "சித்தாந்தபானு" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள். இத்தகைய பெருமைக்குரிய அறிஞர்க்குக் கோப்பாய் வடக்கு மக்கள் பெருவிழா எடுத்துக் கௌரவித்தனர்.

இவர்களைப்போன்று இன்னும் பல அறிஞர்கள் தம் பணியை மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றியுள்ளனர். இத்தகைய பேரறிஞர்களைத் தோற்றுவித்து, மரபுமுறைக் கல்வியில் மேம்பாடு பெறச் செய்ததுடன் நம்நாட்டிலும், இந்தியாவிலும் புகழ்பரப்ப வைத்த பெருமையுடைய பதி கோப்பாய் ஆகும். இப் பெரியார்கள் மீது கொண்ட ஆரா அன்பினால் இவ்வூர் மக்கள் இவர்களுக்கு ஆண்டு தோறும் விழா எடுப்பது இவர்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பறை சாற்றுகின்றது எனலாம்.

### 4. பல்துறைக் கலைஞர்கள்

கலைத்துறைக்குப் பெருமை சேர்த்த பல கலைஞர்களையும் கொண்டதாக இம்மண் விளங்குகின்றது. அந்தவகையிலே இம் மண்ணின் மைந்தனான அமரர். ப. தியாகராஜாவும் விளங்குகின்றார். இவர் கண்பார்வையற்ற ஒரு பிறவிக் கலைஞர். பல்வேறு வாத்தியங்களின் ஒலிகளையும் தமது கை, வாய், மூக்கு என்பவற்றைக் கொண்டு அப்படியே இசைக்கும் திறமையை இயல்பாகவே பெற்றிருந்தவர். இவருக்கு "நவநாதவினோதன்" என்ற பட்டமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அடுத்துக் கோவை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி தவதேவி சுப்பையா உலகப் புகழ்பெற்ற வயலின் இசை மேதையாக மிளிர்கின்றார். இவர் வெளிநாட்டிலே தன் பணியைச் செய்து வருகின்றார்.

எழுத்துலகில் பிரபல்யம் மிக்க கலைஞர்களாக வடகோவை வரதராஜன், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய் சிவம், திரு. கே.வி. குணசேகரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.[15] இவர்களைப் போன்ற இன்னும் பல கலைஞர்கள் தம் கலைத்துறை சார்ந்த திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இன்னும் எத்தனையோ கலைஞர்கள் இலைமறைகாய்களாய் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு உரிய களமமைத்துக் கொடுப்பது சம்பந்தப்பட்டவர்களின் தார்மீக கடமையாகும்.

### 5. பொது சேவை நிறுவனங்கள்

கோப்பாய் பகுதியில் பொது நிறுவனங்கள் பலவும் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. இங்கு வலிகிழக்குப் பிரதேசத்திற்கெனப் "பிரதேச செயலகம்" ஒன்று அமைக்கப்பட்டு செவ்வனே பணியாற்றி வருகின்றது. கோப்பாய்

மக்களுக்கும், அயலூர் மக்களுக்குமென இங்கு ஒரு வைத்தியசாலையும், நிறுவப்பட்டுள்ளது. "கோப்பாய் இரசினர் வைத்தியசாலை" என்ற பெயரில் இவ் வைத்தியசாலை இன்றும் இயங்கி வருகின்றது. மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு இவ்வைத்தியசாலை பரிகாரம் தேடிவருகின்றது. இருப்பினும் நவீன வைத்தியசாலை வசதிகள் இதற்கு மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இவ் வைத்தியசாலையினூடு மக்கள் பெரும் பயனடைய வேண்டுமானால் சம்பந்தப்பட்டவர்கள் பெருக்கம் காட்டவேண்டும்.

இவற்றினை விட பொதுச்சந்தை, மருத்துவ அதிகாரி காரியாலயம் (எம்.ஓ.எச்), கூட்டுறவுக் கிளைகள், சனசமூக நிலையங்கள், கிராமிய வங்கி, சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கம், பாலர்பகல் விடுதிகள், கமநல சேவை நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம், விளையாட்டுக் கழகங்கள் தென்னை பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலை, பிரதேச சபை (உபஅலுவலகம்), சாயி சிறுவர் இல்லம், சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்விப் பயிற்சி நிலையம், பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம், மக்கள் நலன்காக்கும் பிரிவு போன்ற பல இன்னோரன்ன பொது நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இப்பொது நிறுவனங்கள் மூலம்கோப்பாய் வாழ் மக்கள் பெரும்பயனடைந்து வருகின்றார்கள்.

## 6. சைவாலயங்கள்

பண்டைக்காலம் தொட்டுச் சமய வளர்ச்சியில் சிறந்த ஈடுபாடுடையது கோப்பாய்ப்பதி. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற அமுதவாக்கும், "பாங்கினொடுபலதளிகள் இல்லாவூரும், அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே" என்ற அப்பர் வாக்கும் இங்கு வாழ்ந்த மூதாதையரிடம் ஆழமாகப் பதிந்திருந்தன. குறிச்சிகள் தோறும் ஆலயம் கண்டனர். அர்ச்சகர் பரம்பரை ஆங்காங்கு அமைக்கப்பட்டன. "பிராமண ஒடை", பிராம்பத்தை" என்னும் குறிச்சிப் பெயர்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. ஆலயந்தோறும் புராணபடனமும், நித்திய, நைமித்திகங்களும் சிறந்து விளங்கின. நில புலன்களும்

வருமானங்களும் இவற்றுக்கு நிறைவாக வழங்கப்பட்டன. இவ்வாறாக இவ் ஊரில் உள்ள பல ஆலயங்கள் மக்களின் ஆன்மீகத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

இந்த வகையிலே பிள்ளையார், சுப்ரமணியர், கண்ணகையம்மன், வீரபத்திரர், வைரவர், நாகதம்பிரான் போன்ற தெய்வங்களுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறிச்சியில் வாழும் மக்களும் தத்தமது குல தெய்வங்களை ஆதரித்து வருகின்றனர். இங்கு காணப்படும் ஆலயங்களாவன,

1. வெள்ளெருவை விநாயகர் கோயில்
2. வடகோவை இரப்பையடி விரகத்தி விநாயகர் கோயில்
03. வடகோவை செல்வவிநாயகர் கோயில்
04. வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில்
05. கோப்பாய் தெற்கு மாரியம்மன் கோயில்
06. பலானை கண்ணகையம்மன் கோயில்
07. வடகோவை துர்க்கையம்மன் கோயில்
08. வட கோப்பாய் பத்திரகாளி கோயில்
09. தென்கோவை சாந்தலிங்கேஸ்வரர் கோயில்
10. கோப்பாய் தெற்கு ஸ்ரீ முத்துமாரி கோயில்
11. கோப்பாய் வீரபத்திரேஸ்வரர் கோயில்
12. வடகோவை ஸ்ரீ சக்கர ஆழ்வார் கோயில்
13. வடகோவை மகிழடி வைரவர் கோயில்
14. வடகோவை மரியத்தனை வைரவர் கோயில்

என்பனவாகும். இவற்றைவிட இன்னும் சிறிய ஆலயங்களும் காணப்படுகின்றன. ஐதீகமோடும் ஆலயங்களாக வெள்ளெருவை விநாயகர் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி, பலானை கண்ணகை அம்மன், மாரியம்மன் போன்றன விளங்குகின்றன. பெரும்பாலும் இங்கு ஆகம மரபிலேயே பூசைகள் நடைபெறுகின்றன. கிராமியக் கடவுளர்க்கு ஆகமம் சாராத முறையிலும்,

சாராத முறையிலும் பூசைகள் இடம்பெறுகின்றன. பொங்கல், மடைபரவுதல், குளுத்தி என்பன வைரவர், கண்ணகையம்மன் போன்ற ஆலயங்களில் வெகுசிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வூர் மக்கள் ஆலயங்களோடு நெருங்கிய தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்ட இப்பகுதி மக்கள் ஆசாரசீலர்களாக பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணுவதில் முன்நிற்பவர்கள். ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபடுவதில் பெருவிருப்புடையவர்கள். ஆலயம் தொடர்பான விழாக்களில் பங்கேற்று இன்புறுபவர்கள். இறைவன்மீது நம்பிக்கை கொண்ட மக்கள் நேர்த்திகள் செய்வதும் அதனை நிறைவேற்றுவதையும் ஆலயங்களில் கண்டு கொள்ளலாம் . தேர்த்திருவிழாக்களின்போது ஊர் கூடித் தேரிழுக்கும் பாங்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்தவகையிலே இவ்வாலயங்கள் சமயசமூகப் பணிகளை ஆற்றி வருகின்றன. இவ்வூரில் இந்த ஆலயங்களைப் போன்று கிறிஸ்தவ தேவாலயங்களும் தம் மதம் சார்ந்த மக்களுக்கு வழிபாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. இத் தேவாலயங்களில் நடைபெறும் ஆராதனைகளில் பங்கேற்கென ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் கிறிஸ்தவ சிறப்பு நாட்களிலும் மக்கள் செல்வதைக் கண்டு கொள்ளலாம். கிறிஸ்தவ தேவாலயங்களோடு ஒப்பிடுமிடத்து இந்த ஆலயங்களே இவ்வூரில் அதிகமாகக் காணப்படுகின்றன எனலாம்.

## அடிக்குறிப்புக்கள்

01) சுப்ரமணியம்.அ.,"வலிகிழக்கு வரலாற்று நோக்கு". முத்தமிழ் விழாமலர் வலிகிழக்குப் பிரதேச கலாச்சாரப் பேரவை., 1999.ப.1.

02) குகபாலன்.க., யாழ்ப்பாண இடப்பெயர்வு., 1996, ப.15.

03) சுப்ரமணியம்.அ., முத்தமிழ் விழாமலர்., மு.கு.நூல்., 1996, ப.15.

04) சங்கரப்பிள்ளை.சி., "எமது ஊர்", சித்தாந்தபானு சோ.சுப்ரமணியக் குருக்கள் பாராட்டுவிழா மலர்., 1971, ப.65.

05) மேற்படி, ப.65.

06) லோகேஸ்வரன்.ம., கோவைப்பதியில் செழும் தமிழும்., வெளியீடு:- ஸ்ரீ சுப்ரமணிய கோட்டம் பழந்தெரு கோப்பாய்., 1990, ப.03-04.

07) மேற்படி, ப.04.

08) கனகரத்தினம்.ச., கோப்பாய் கிராம கல்வி அபிவிருத்தி., பட்டப்பின் கல்வி டிப்புளோமாத் தேர்வுக்கான ஆய்வுக்கட்டுரை., 1985, ப.05.

09) குமாரசாமி.க.இ., கோப்பாய் வரலாறு- கட்டுரை, பாகம் 1, அரவிந்தவாசம் கோப்பாய்., 1998, ப.11.

10) மேற்படி, ப.12.

11) கனகரத்தினம், கோப்பாய் கிராமக்கல்வி அபிவிருத்தி., மு.கு.நூல், ப.06.

12) சங்கரப்பிள்ளை.சி., சித்தாந்தபானு சோ.சுப்ரமணியக் குருக்கள் பாராட்டு விழா மலர்., மு.கு.நூல், ப.65

13) மேற்படி, ப.11.

14) கனகரத்தினம்.ச., மு.கு.நூல், ப.02.

15) தங்கவடிவேல்.எஸ்.கே., "எல்லை ஈர்த்த எமது பிரதேசக் கலைஞர்கள்." முத்தமிழ் விழா மலர்., மு.கு.நூல், 1999, ப.26-25

# அத்தியாயம்

# இரண்டு

# அத்தியாயம் இரண்டு

*************

## ஈழத்தில் முருக வழிபாடும் ஆலய வரலாறும்

### 2.1 ஈழத்தில் முருக வழிபாடு

இந்து சமுத்திரத்தின் எழில் முத்து என்றும், இரத்தின துவீபம் என்றும் போற்றப்படும் சரித்திரப் புகழ்பெற்ற நாடு இலங்கை மணித்திருநாடு. இந்நாட்டின் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இந்து சமயம் வேரூன்றி, வளர்ந்து வந்துள்ளது. இதற்குச் சான்றாதாரங்களாக இலக்கியங்கள், தொல் பொருட்களான கல்வெட்டுக்கள் எனப்பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. திரும்பும் திசையெல்லாம் திருக்கோயில்கள் அருள் அலை வீசிக் கொண்டிருக்கும் ஈழம் ஒரு ஞானபூமியாகும்.

"உருவிலான் குணங் குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான்
பின்னிலான் பிறதோர்
சாரிலான் வரல் போக்கிலான்
மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க்கடவுளாய்
என்றுமே நின்றான்"[1]

என்பது இறைவன் பற்றிய கந்தபுராணத் திருவாக்கு. இத்தகைய இறைவன்,

"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய"[2]

எனத் திருமுருகனின் தோற்றம் பற்றிக் கந்தபுராணம் எடுத்தியம்புவது.

சிவப்பரம்பொருளின் தொன்மை வடிவு ஆறுமுக வடிவம் ஆகும். சிவனின் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து முகங்களுடன் கீழ்நோக்கும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகமாகச் சிவம் உயிர்களுக்குத் தனிப்பெருங் கருணை புரிகின்றது. இதனைக் கந்தர் கலிவெண்பா,

"ஐந்து முகத்தோ டதோமுகமுந் தந்து
திருமுகங்கள் ஆறாகி"[3]

என்பதன் மூலம் சிவனின் அரும் பெரும் வடிவமே ஆறுமுகம் எனச் சுட்டுகின்றது. இம் முருக வழிபாடு ஈழத்தில் எத்தகு தன்மையினைப் பெற்றிருந்தது என்பதனை சற்று உள்ளார்ந்து நோக்குவோம்.

ஒரு நாட்டின் வரலாறு அந்நாட்டின் புவியியல் சக்திகளின் தாக்கத்தினை மட்டுமன்றி, அதன் புவியியல் அமைவிடத்தினாலும் மாற்றத்திற்கு உள்ளாகின்றது. வழி நடத்தப்படுகின்றது என்பது பொதுவிதி. இந்தவகையில் இலங்கையும் இத்தகைய ஒரு பொது விதிக்கு விலக்கானதல்ல. இது ஒரு தீவாக இருப்பது மட்டுமன்றி இந்து சமுத்திரத்தின் மத்தியில் கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதையின் மையத்தில் அமைந்திருப்பதும் இதற்குரிய சிறப்பம்சமாகும்.

ஈழம் இந்தியாவில் இருந்து பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே உள்ள மிகக் குறைந்தளவு தூரம் முப்பத்தாறு கிலோ மீற்றர் ஆகும். ஈழத்து சமய பண்பாட்டு அம்சங்களுடன் இந்தியா இறுக்கமான

தொடர்பினைப் பண்டைக்காலம் முதல் கொண்டுள்ளது. இத் தொடர்புகள் ஈழத்தின் ஆதிக் குடியேற்றத்தில் இருந்தே பிரதான இடத்தினை வகிக்கின்றது. இந்த வகையில் இந்த சமய வரலாற்று அம்சங்களை ஈழத்தில் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையிலும் இந்தியப் பின்னணியிலும் ஆராய்வது அவசியமாக அமைகிறது.

## தொல்லியல் சான்றுகள்

பண்டைய ஈழமும், தென்னிந்தியாவும் பெருங்கற்காலக் கலாசாரத்தின் வழிவந்த நாகரிகத்தை உடையதால் இவ்விரு பிராந்தியங்களின் வழிபாட்டு முறைகளிலும் நெருங்கிய ஒற்றுமையைக் காண முடிகின்றது. முருக வழிபாடு தமிழகம் - ஈழம் ஆகிய பிராந்தியங்களுக்கே உரிய தனித்துவமான வழிபாடாகும்.

காலத்தால் மிகப்பழைய பெருங்கற்காலச் சின்னங்களில் முருக வணக்கத்திற்குரிய தடயங்கள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் கி.மு ஆயிரம் ஆண்டைச் சேர்ந்த பெருங்கற்காலக் கலாசாரத்திற்கு உரிய ஆதிச்ச நல்லூரில் உள்ள தாழிக் காட்டில் முருகனது வேல், சேவற் சின்னம், காவடிக்குப் பயன்படுத்தும் பொருட்கள் ஆகியன கிடைத்துள்ளன. இவை அனைத்தும் வெண்கலத்தினால் ஆன பொருட்களாகும். ஆதிச்ச நல்லூரோடு நெருங்கிய தொடர்புடைய கலாச்சாரம் சின்னங்கள் பல புத்தளம் மாவட்டத்தில் உள்ள கலா ஓயா நதிக்கரையில் அமைந்துள்ள பொம்பரிப்பு என்ற இடத்தில் கிடைத்துள்ளன.[4] புத்தளத்தில் உள்ள மூன்று சாசனங்கள் முருகன் பெயரைக்கொண்டு விளங்குகின்றன. "குமர" என்ற பெயர் பச்சண்டியால என்ற இடத்திலுள்ள சாசனத்தில் காணப்படுகிறது. மற்றும் கரம்பன் குளம், கதிர் காமம் போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இதனை நோக்கும்போது ஈழத்தில் பண்டைக்காலம் முதல் முருக வழிபாடு வேரூன்றியதை அறிய முடிகின்றது.

தொல்லியல் ஆய்வுகள் ஈழத்தில் ஆதிக்குடியேற்றம் தென்னிந்தியாவில் இருந்தே ஏற்பட்டதென்பதை நிரூபிக்கின்றன. மேலும் சிங்கள, தமிழ்மொழி பேசுவோர் பௌத்தத்தை அனுட்டிக்க முன்னர் இந்துக்களாகவே விளங்கினர் என்பதையும்

நிரூபித்துள்ளன. சிங்கள மக்களின் முதாதையர் கதிர்காமம் பகுதியில் இந்த சமய வழிபாட்டைக் கடைப்பிடித்தனர் என்று கொள்ள முடிகின்றது.[5] பின்னைய காலத்தில் இவர்கள் பௌத்தத்தைத் தழுவியதும் இவர்களின் வழிபாட்டோடு இந்தக் கடவுளாகிய முருக வழிபாடும் முக்கியத்துவம் பெற்றதை அறிய முடிகின்றது. இதன் காரணமாகவே பௌத்தத்தின் நாற்றிசைக் கடவுளர் மரபோடு முருக வழிபாடும் சேர்க்கப்பட்டது. முருகன் தொடர்பான பெயர்கள் எவ்வாறு இலங்கையிலே பரம்பியிருந்தது என்பதனை ஆதிப்பிராமியச் சாசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. வடமொழியிலே 'குமார' என்று வழங்கும் முருகன் பெயரை இலங்கை வேடர் வழங்கி வருகின்றனர். பிராமியச் சாசனங்களிலே 'குமர'என்ற பெயர் கதிர் காமத்திற்கு மிக அண்மையில் உள்ள 'அவகஸ்யால( என்ற இடத்தில் உள்ள சாசனத்திலே காணப்படுகின்றது.[6] கதிர்காமத்தைச் சூழ உள்ள பிரதேசத்தில் இருந்து மேலும் இரு சாசனங்களிலே குமர என்ற பெயர் காணப்படுகின்றது. இவை மட்டுமன்றி கதிர்காமம் காணப்படும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலே பௌத்தம் வருமுன்பே இந்தசமயம் செல்வாக்குடன் காணப்பட்டதற்கான ஆதாரமாக கஜரகாமக் சத்திரியர்கள் பற்றிய குறிப்புகள் மகாவம்சத்திலே காணப்படுகின்றது.[7]

மேலும் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் குமார, மகாசேன, ஸ்கந்த, குக, விசாக, கார்த்திகேய போன்ற பதங்கள் மூலம் எவ்வாறு வட இந்தியாவிலே ஏற்பட்ட முருக வணக்கம் தமிழகத்தில் படர்ந்ததோ அவ்வாறே ஈழத்திலும் படர்ந்ததை எடுத்துக் காட்டுகின்றன.

முருக வழிபாட்டில் குறியீட்டுச் சின்னமாக வேல் வழிபடப்படுகின்றது. திருமுருகாற்றுப்படையிலே காணப்படும்

"வேல் கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ
செவ்வேற் சே எய்....."

எனும் குறிப்பு முருக வழிபாட்டில் வேல் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது. வேலன் வழிபாடு ஈழத்திலும் தொன்று தொட்டுக் காணப் பட்டதைப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் 'வேல்' என்ற பதம் எடுத்துக்

காட்டுகின்றது.[7] கிழக்கிலங்கையில் தேயிலைத் தோட்டங்களில் ஆலமரத்தில் இரும்பு வேல் வழிபாடு உள்ளது. இதனை நேர்த்திக் கடனுக்காக வழங்கினர். பொம்பரிப்பில் கிடைத்துள்ள இரும்பாலான வேலை ஒத்த கருவிகளும் கந்தரோடையில், வெண்கலங்களிலும் அநுராதபுரத்தில் பானை ஓடுகளிலும் 'வேல்' குறியீடாகக் காணப்படுகின்றது.

வேல் என்பது முருகனது ஞான சக்தி, வேல் என்றால் எல்லாவற்றையும் வெல்வது என்று பொருள். ஞானம் ஒன்றே எல்லாவற்றையும் வெல்லக் கூடியது. இத்தகு சிறப்பு மிக்க வேல் ஈழத்தின் பல்வேறு பாகங்களிலுமுள்ள முருகனாலயங்களில் மூலஸ்தானத்தில் மூர்த்தியாகக் காணப்படுகின்றது.

இவ் வேலின் பெருமையினை,

'வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்த வேல் கொற்றவேல் சூர் மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை'

என்று, திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் போற்றிப் பாடியுள்ளார். வேலன், வேல் வழிபாட்டோடு பின்னிப் பிணைந்தது தான் முருகனுக்கே சிறப்பான மரமாகிய கடம்பமர வழிபாடாகும். ஈழத்திலே கடம்பவனம் முக்கிய வழிபாட்டிற்குரிய இடமாக ஈழத்திலே விளங்கியுள்ளதனைப் பாளி நூல்களிற் காணப்படும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. முருகன் உறையும் இடங்களாகத் திருமுருகாற்றுப்படை பின்வரும் இடங்களைக் குறிப்பிடுகின்றது.

"காடுங் காவுங் கவின் பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறு பல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்"

(223 - 226)

இந்நோக்கில் கடம்பவனம் முருகன் உறையும் இடமாக ஈழத்தில் கொள்ளப்பட்டதை அறிய முடிகின்றது.

<u>கதிர்காமம்</u>

புராதன முருகன் ஆலயமாகக் கொள்ளப்படும் கதிர்காமம் ஈழத்து முருக வழிபாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். "கஜரகாம" என மகாவம்சம் கதிர்காமம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவ்விடத்தில் மிக நீண்டதொரு முருக வழிபாட்டுப் பாரம்பரியம், வழிபாட்டு முறைகள் என்பன பௌத்தம் வருமுன்னரே தழைத்திருந்ததை உறுதி செய்கின்றன. கதிர்காமம் மலைப்பிரதேசமாகும். தமிழகத்தில் எவ்வாறு ஆறுபடை வீடுகளுள் ஒன்றாக கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள திருச் செந்தூர் விளங்குகின்றதோ அவ்வாறே ஈழத்திலும் கதிர்காமம் விளங்குகின்றது.

கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப் படலத்தில் 'வெள்ளியங் கிரியின் ஓர்சார் விளங்கிய சந்தவெற்பு' என்பதை ஆதாரமாகக் கொண்டு தொண்டை நாட்டு வள்ளிமலையில் வள்ளி நாயகியார் பிறந்து வளர்ந்ததாக ஐதீகம் உண்டு. இதேபோல இலங்கையிலும் கதிர்காம கிராமத்திலும் வள்ளி பிறந்து வளர்ந்ததாக ஐதீகம் காணப்படுகின்றது. வள்ளி தினைப்புலம் காத்த இடம் வேலன் வேங்கை மரமாய் நின்ற இடம் என பல இடங்களைச் சுற்றி ஐதீகங்கள் வளர்ந்துள்ளன. கதிர்காமம் என்ற சொல்லை முதன் முதல் இலக்கியத்தில் பயன்படுத்தியவர் அருணகிரிநாதரே. கி.பி 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர்,

"வனமுறை வேடருளிய பூஜை
மகிழ் கதிர்காம முடையோனே"[8]

எனத் திருப்புகழில் பாடியுள்ளார். இவ்வடிகள் மூலம் பண்டைக் காலம் தொடக்கம் வேடர்களோடு தொடர்புபட்டு வந்த ஐதீகத்தின், தொடர்ச்சியைக் காணமுடிகின்றது. வள்ளி வேட்டுவப் பெண். இவள் முருகனின் மனைவி,

தமிழ் நாட்டு நூல்களில் சூரனைக் கொல்வதற்காக முருகன் திருச்செந்தூரிலே பாசறை அமைத்ததாகச் செய்தியுண்டு. ஈழத்து நூல்களில் இத்தகைய பாசறை கதிர்காமத்தில் அமைந்திருக்கின்றது என்று கூறும் மரபு காணப்படுகின்றது. மேலும் வள்ளி திருமணமும் ஈழத்தில் நடைபெற்றது என்றும் கூறப்படுகின்றது. இந்த வகையில் குறிஞ்சிக் குமரனுக்கு உகந்த இடமாக குறிஞ்சி மலைப்பிரதேசமான கதிர்காமம் விளங்கியமையை நூல்களும் சாசன ஆதாரங்களும் எடுத்தியம்புகின்றன.

மேலும் கதிர்காமம் பற்றி தட்சண கைலாய புராணம் தரும் தகவலில் சூரசங்காரம் முடிந்தபின் மீண்டும் முருகன் கதிர்காமத்திற்கு எழுந்தருளி தேவசிற்பியாகிய விஸ்வகர்மாவிடம் கதிர்காமத்திலே தான் வசித்தற் பொருட்டு சிறந்தநகரத்தையும் அழகிய கோயிலையும் அமைக்குமாறு கட்டளையிட்டார் என்று கூறப்படுகிறது. இதன்படி முருகன் பெருவிருப்போடு கதிர்காமத்தில் கண் உறைகின்றான் என்பது ஈழமக்களின் ஒரு நம்பிக்கையாகும்.

கதிர்காமம் பற்றி பல நூல்கள் காணப்பட்டபோதும் இத் தலம் பற்றி பரணவிதான கூறியிருப்பதை நோக்கின்,

> "கர்ணபரம்பரைக் கதைகளின்படி கதிர்காமத்தில் கி.மு முதலாம் நூற்றாண்டில் கந்தன் கோயில் ஒன்று துட்டகைமுனுவால் கட்டப்பட்ட செய்தியொன்று உண்டு. அநுராதபுரத்தில் எல்லாளனுக்கு எதிராகப் போர் தொடுக்கப்புறப்பட்டபோது கந்தனுக்கு இவன் எடுத்த நேர்த்திக் கடனை நிறைவேற்றுமுகமாக இக்கோயிலைக் கட்டினான்." [9]

என்னும் இச்செய்திமூலம் துட்டகைமுனுவால் இக்கோயில் கட்டப்பட்டது என்பது புலனாகின்றது.

மேற்கண்டவாறு கதிர்காமத்தை மையப்படுத்தி முருக வழிபாட்டை நோக்கியதன் பயனாக பண்டைக்காலம் தொட்டு ஈழத்திலும் முருக வழிபாடு சிறப் படைந்து காணப்படுவதை அறிய முடிகின்றது. இத் திருத்தலத்திலே தமிழ் மக்கள் மட்டுமன்றி, சிங்கள மக்களும் கூட, பேத வேறுபாடின்றி காவடியாடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

வடமொழிக் கதைகளின் படி முருகனுக்குச் சிறந்த நட்சத்திரம் விசாகம் ஆகும். இதனால் முருகனுக்கு விசாகன் என்ற பெயர் வழங்கப்படுகின்றது. இந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள இரண்டு சாசனங்களிலே 'விசாக' என்ற பெயர் இடம்பெறுகின்றது. மேலும் குருணாகல மாவட்டத்தில் உள்ள ஒரு சாசனத்திலும் இப்பெயர் காணப்படுகின்றது.

## திருப்படைக்கோயில்கள் - மட்டக்களப்பு

மட்டக்களப்பிலே பழமையும் பிரசித்தமும் உடைய முருகன் கோயில்கள் திருப்படைக் கோயில்கள் என்று அழைக்கப்படுகின்றன. இக்கோயில்கள் பண்டைய அரசர்களின் மதிப்புக்கு உரியன. இதனால் மானியமும் சீர்வரிசைகளும் பெற்ற கோயில்களாக இவை விளங்கின. பெரிய போரைதீவு சித்திரவேலாயுத சுவாமிகோயில், தில்லை மண்டூர்க் கந்தசுவாமி கோயில், சித்தாண்டி சித்திர வேலாயுதர் சுவாமி கோயில், வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் என்பன உள்ளடங்குகின்றன.

ஈழத்திலே முருகவழிபாடு சிறப்பாக காணப்பட்டமைக்கு கதிர்காமத்தை அடுத்து மட்டக்களப்பு முருகன் ஆலயங்கள் தனித்துவம் பெற்றும் பல தகவல்களைத் தருகின்றன. மட்டக்களப்புத் திருப்படைக்கோயில்களில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலைத் தவிர ஏனைய கோயில்கள் அனைத்தும் முருகன் ஆலயங்களே. இதன் மூலம் மட்டக்களப்பு மக்கள் முருக வழிபாட்டில் கொண்டுள்ள ஈடுபாடு புலப்படுத்தப்படுகின்றது.

திருப்படைக் கோயில்களில் மூலஸ்தானத்தில் முருகனது படையாகிய வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இங்கு பூசை செய்வோர் வேலன் வழி வந்த சமயப் பூசாரிகளாவர். இவ்வழிபாட்டு முறைகளுக்கும் கதிர்காமம், கப்புறாளை வழிபாட்டு முறைகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. வேலன் வழிவந்த பூசாரிகளே காலப்போக்கில் சிங்கள மொழி மாற்றத்தால் கப்புறாளை என அழைக்கப்பட்டனர். மேலும் வேடர்களோடு இணைத்துக் கூறப்படுதல், சூரசம்காரத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்படுதல் போன்றவை கதிர்காம ஆலயத்தின் தோற்றத்தோடு இவற்றிற்கு உரிய தொடர்பை எடுத்தியம்புகின்றன. இந்த வகையில் மட்டக்களப்பில் காணப்படும் பிரபல முருகன் கோயில்கள் யாவும் கதிர்காம வழிபாட்டின் வடதிசை நோக்கிய பரம்பரல் என்பதை இவை தெளிவு படுத்துகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் எனும் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயமுண்டு. தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரர் கோயிலிலே கதிர்காம சுவாமிக்குத் தனிக்கோயில் உண்டு. திருகோணமலை மாவட்டத்தின் வடபகுதியில் குமரபுரம் எனும் பெயர் வழக்கிலிருக்கிறது. இங்கு ஒரு முத்துக் குமார சுவாமி கோயிலும் காணப்படுகிறது.

இவ்வாறு ஈழத்திலே முருக வழிபாடானது கதிர்காமத்தை மையமாக கொண்டு பண்டைக்காலம் முதல் சிறப்பான வழிபாடாகக் காணப்பட்டதை நோக்க முடிகின்றது. இம் முருக வழிபாட்டுப் பரம்பல் பற்றி பேராசிரியர் சு. வேலுப்பிள்ளை அவர்கள்

> "கதிர்காமத்துக் குமரன் மண்டூரில் குமார தம்பிரானாகி
> சித்தாண்டியிலே குமாரத்தனாகி, கும்புறுப்பிட்டியிலே
> குமரனாகி, கிழக்குக் கரையிலே இன்னும் வடதிசை
> நோக்கிச் சென்று முல்லைத்தீவு மாவட்டத்திலே
> குமாரபுரத்திலே உறைகின்றான்" [10]

என்று குறிப்பிடுகின்றார்.

## ஆடிவேல் விழா

இலங்கையில் கந்தவழிபாட்டினைப் பெறும் ஒரு விழாவாக தற்போது கொழும்பு மா மாநகரில் நடைபெறும் ஆடிவேல் விழா அமைந்து காணப்படுகின்றது. இவ்விழா நான்கு நாட்கள் நடைபெறும். முதலாம் நாள் குறுக்குத்தெரு சுப்பிரமணியர் கோயிலிருந்து வெள்ளவத்தை முருகன் ஆலயத்திற்கு வேல் கொண்ட வெள்ளி ரதம் காவடிகளுடன் செல்லும். இரண்டாம் நாள் செட்டித்தெருவிலிருந்து பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலுக்கு தங்கரதத்தில் வேல் ஊர்வலம் வரும். மூன்றாம் நாள் முதலிற்சென்ற வெள்ளிரதம் குறுக்குத்தெரு சுப்பிரமணியர் ஆலயத்தைச் சென்றடையும். நான்காம் நாள் தங்கரதம் செட்டித்தெரு ஆலயத்தைப்போய்ச் சேரும்.

இவ்வேல் விழாவானது சமய விழாவாக மாத்திரமல்லாமற் பெரும் கலைவிழாவாக விளங்கி வருகின்றது. இவ்விழா இனமத பேதமின்றி இலங்கை மக்கள் அனைவரும் சிறப்பாக பௌத்தரும் இந்துக்களும் கூடும் கலாச்சாரவிழாவாக விளங்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இத்தகையதொரு வேல் வழிபாட்டு முறையானது யாழ்ப்பாணத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இங்கும் வேலே பவனியாகக் கொண்டு வரப்படுகின்றது. இவ்வேல் நல்லூர் பாலசுதிர்சாமம் ஆலயத்திலிருந்து பவனியாகக் கொண்டு செல்லப்பட்டு கொக்குவில் மஞ்சவனப் பதி ஆலயத்திலும் தங்கிச் செல்லும் வழமை காணப்படுகின்றது.

## முருகன் அருள் பெற்றோர்

தமிழால் வைதாரையும் வாழவைப்போன் செந்தூர்க் குமரன் முருகன். ஐந்து வயதில் அறியாப் பருவத்திலே அரிச்சுவடி படிக்காமல், அசை, யாப்பு அறியாமல் கைகாட்டி, தலையாட்டி, ஊமையாயிருந்த குமரகுருபரன் வேதசித்தாந்தப்

பொருளை வேற்குமரன் வியாபகத்தை விந்தையாகப் பாடிக் கந்தன் கவிழ்ர வைத்தான். கந்தப் வெண்பாவால் அலமந்து மதியிழந்து உடல் நொந்து அருணைக்கோபுரம் தனிலேறிக் குப்புற விழுந்தவரைக் கையிலேந்திக் கடைக்கண் நல்கி "முத்தைத் தரு பத்தித் திரு நகை" யென்ற தொடங்கும் பந்தந் தொலைக்கும் சந்தத் தமிழால் திருப்புகழ்மாலை சூட அருளரிமைத் தந்தார். மற்றும் முருகப் பெருமானிடம் அருள் பெற்றோராக அகத்தியர், நக்கீரர், பாரதம் பாடிய பெருந்தேவனார், ஔவையார், பொய்யாமொழிப்புலவர், திருச்செந்தூர் வென்றிமாலைக் கவிராயர், பச்சையப்பச் சிவாச்சாரியார், தேவராய சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள் போன்றோர் காணப்படுகின்றனர்.[11]

## 2.2 யாழ்ப்பாணத்தில் முருக வழிபாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முருக வழிபாடு பழைய காலம் தொட்டு நிலவிவந்துள்ளது. கந்தரோடையிலே அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தொல்லியலாளர் நிகழ்த்திய ஆராய்ச்சியின் பயனாக பழைய காலத்தினைச் சேர்ந்த வேல் ஒன்றும் கிடைத்ததாகப் பேராசிரியர் கா.இந்திரபாலா கூறினார். இதைவிட யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவி வரும் மரபுவழிக் கதைகள், ஐதீகங்களின்படியும் இங்கு முருகன் ஆலயங்கள் பல இருந்தன என்பதும் அறியப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலே புகழ்பூத்த முருகனாலயங்களாக செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நல்லூர் என்பன விளங்குகின்றன. இவற்றுடன் இன்னும் பல முருகனாலயங்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலே நிலவிவரும் மரபுக்கருத்தொன்றின்படி செல்வச்சந்நிதிக் கந்தன் "அன்னதானக் கந்தன்" என்றும் மாவிட்டபுரக் கந்தன் "அபிஷேகக் கந்தன்' என்றும், நல்லூர்க் கந்தன் 'அலங்காரக் கந்தன்' எனவும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.[12]

இப்பிராந்தியத்திற்குரிய வரலாற்று மரபுகள் முறைப்படி பேணப்படாமையாலும், போர்த்துக்கீசர் முதலான ஐரோப்பியரின் படையெடுப்புக்கள் சுதேச சமய, கலை அழிப்புக் கொள்கையினாலும், தொல்லியல் ஆய்வுகள் நன்கு மேற்கொள்ளப்படாமையாலும், இங்கு நிலவிய முருக வழிபாடு பற்றி வரலாற்று ரீதியிலே தொடர்ச்சியாகக் கூறமுடியாதுள்ளது. எனினும் கிடைக்கக் கூடிய ஒரு சில வரலாற்று மூலகங்களைக் கொண்டு சில கருத்துக்களைக் குறிப்பிடலாம். கி.பி 13ம் நூற்றாண்டு தொடக்கம் 1619 வரை நிலவிய யாழ்ப்பாணத் தமிழரசிலே முருகவழிபாடு நன்கு நிலவிற்று எனலாம்.[13]

யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் முருக வழிபாட்டிலே வேதாகம முறைப்படியிலான வழிபாடும், இம்முறைசாராத வழிபாடும் இடம் பெற்றுள்ளன. மாவிட்டபுரம், நல்லூர் முருகனாலயங்களில் முன்னைய வழிபாடும் தொண்டமனாறு, செல்வச் சந்நிதியிலே பின்னைய வழிபாடும் நிலவுகின்றன. ஆனால் குடாநாட்டிலுள்ள முருகன் கோவில்களையும் உற்று நோக்கும் போது வேதாகம முறையிலான வழிபாடு நிலவும் கோயில்களே கூடுதலாக உள்ளன. எனினும் வேதாகம சார்பற்ற வழிபாடு நிலவும் கோயில்களும் உண்டு. முருகனுடைய பல்வேறு வடிவங்களில் வழிபாடு நடைபெறுகின்றது. குறிப்பாக அவர் தனியாகவும் வள்ளி, தெய்வயானை சமேதராகவும், பழனியாண்டவராகவும் வழிபடப்படுகின்றார். வேறு சில ஆலயங்களிலே அவருடைய ஆயுதமாகிய சக்தியாகிய வேல்மட்டும் வழிபடப்படுகின்றது. கோவில்கள் மட்டுமன்றி மக்கள் தம்முடைய இஷ்டதெய்வமாக முருகனை வீடுகளிலே வைத்தும், படம் வைத்தும் வழிபடுகின்றனர்.

முருகனுக்குரிய விரதங்களாக குறிப்பாக மாதாந்த கார்த்திகை நட்சத்திரநாள், ஷஷ்டி-சிறப்பாக ஐப்பசி மாதக் கந்தஷஷ்டி, வெள்ளிக்கிழமை முதலியன யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நன்கு அனுஷ்டிக்கப்படுகின்றது. இவற்றுள்ளே ஐப்பசிமாதக் கந்தஷஷ்டி மிகப் பிரபல்யமாகும்.

முருகன் அடியார்கள் ஆறுநாட்கள் உபவாசமிருந்து இதனைப்பயபக்தியோடு அனுஷ்டிப்பர். கந்தஷஷ்டி பெரிய திருவிழாவாக, குறிப்பாக முருகன் ஆலயங்களிலும், வேறு சில ஆலயங்களிலும் கொண்டாடப்படுகின்றது. இறுதிநாளன்று சூரசம்காரம் இடம்பெறும். அஞ்ஞானம், ஆணவம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஞானமாகிய முருகன் தோற்கடித்து அவனை ஆட்கொண்டுள்ளார்.

முருகப் பெருமானுடைய சிறப்புக்களைக்கூறும் கந்தசஷ்டிகவசம், திருப்புகழ், கந்தலங்காரம், கந்தரநுபூதி முதலியவற்றை மக்களிலொருசாரார் நாடோறும் பாராயணம் செய்து வருகின்றனர். ஆலயங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் பாராயணம் இடம்பெறும். எல்லாவற்றிற்கும் மேலாக கந்தபுராணம் குறிப்பிடற்பாலது. கந்தபுராணம் முருகன் சிறப்புக்களைக்கூறும் முதுதமிழ்ப்புராணமாயினும் அது வேதங்கள், ஆகமங்கள், குறிப்பாகச் சைவசித்தாந்தத்தின் சாரமாகவும் விளங்குகின்றது. நல்லைநகர் ஆறுமுகநாவலரே கந்தபுராணபடனத்தினை ஊக்குவித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இக் கந்தபுராணம் சைவச்சுவையும், தமிழ்ச்சுவையும் ததும்பத்ததும்ப எளிய இயற்றமிழ் நடையிலே கச்சியப்பச் சிவாச்சாரியாரால் வடித்துத் தரப்பட்டுள்ளது. உள்ளும் புறமும் பரிமளிக்குஞ் சித்தாந்த மணமுஞ் சிவபூசை மணமும் புறம்போய்விடக்கூடாதென்று நம் முதாதையராற் பட்டு வஸ்திரத்தால் முடிப்பெட்டகத்திலே பூட்டிப் பேணப்பட்டது. இப்பெருநூல் இதனைச் சாத்திரநூலாகவும் தோத்திரநூலாகவும் கொண்டு சைவத் தமிழுலகம் பலன் பெற்றுவந்துள்ளது.

கந்தன் பெருமை கூறும் கந்தபுராணம்தான் தோன்றிய நாட்டிற் பெரும் சிறப்பைக் காட்டிலும் ஈழத்திலேயே சிறப்புப் பெற்று வழங்குவதைப் பாரத இந்துக்களும் உணர்வர். அந்நியரின் ஆதிக்கத்தால் இலங்கையில் இந்துமதம் அழியாது நிலைபெறுவதற்கு காரணமாயிருந்தது. கந்தபுராணமென்றால் மிகையாகாது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சைவமரபிலே கந்தபுராணம் நன்கு இடம்பெற்றுள்ளமையாலே இங்கு நிலவி வந்துள்ள கலாச்சாரம் "கந்தபுராணக் கலாச்சாரம்" எனவும் சிறப்பாகக் கூறப்படும். யாழ்ப்பாண முருகவழிபாடு கதிர்காமத்தோடு தொடர்புபட்டதொன்றாகக் காணப்படுகின்றது. குறிப்பாக செல்வச்சந்நிதி ஆலயம் கதிர்காமத்துடன் தொடர்புபடுகின்றமையால் சின்னக்கதிர்காமம் என

அழைக்கும் மரபு உண்டு. எனவே நாம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முருக வழிபாடு சிறந்தோங்கும் திருத்தலங்களைச் சற்றுச் சுருக்கமாக ஆராய்வோம்.

<u>செல்வச் சந்நிதி</u>

இங்கு ஆதியில் இருந்த கோயில் கந்தபுராணக் கதையுடன் தொடர்புடைய ஒன்று. அதனைப் பறங்கியர் அழித்தனர் எனவும் வரலாறு கூறுகின்றது. தொண்டைமானாற்றுக்குக் கிழக்கே உள்ள கெருடாவில் எனும் ஊரில் வசித்த ஞமாரே (தேசிகர்) ஆரம்பத்தில் இவ்வாலயத்தைப் பூசித்து வந்தனர்.

தொண்டைமானாற்றங்கரையில் மீன்பிடித்தொழிலைச் செய்துவந்த மருதர் கதிர்காமருக்குச் சந்நிதியான் ஒரு சிறுவன் வடிவில் காட்சி கொடுத்து, அவரை மீன்பிடித் தொழிலை விடுத்து தமக்குப் பூசை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். பூசை செய்யும் வழிமுறைகள் தமக்குத் தெரியாதென்று கதிர்காமர் தெரிவிக்கவே முருகப்பெருமான் அவரைக் கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காண்பித்தார். அங்குள்ள வேலாயுதங்களில் ஒன்றை எடுத்துச் சென்று செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்துப் பூசை செய்யுமாறு கதிர்காமருக்குத் தெரிவித்தார். அங்கிருந்தவற்றில் கதிர்காமர் வெள்ளியிலான வேலொன்றை எடுத்துச் சென்றார். அதனையே சந்நிதியில் வைத்துப் பூசை செய்து வந்தார் என்பது கர்ணபரம்பரைக் கதை.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தில் மிகப் பெரிய கட்டட வேலைப்பாடுகளோ, சிற்ப வேலைப்பாடுகளோ கிடையாது. ஆனால் முருகனின் அருட் சிறப்பால் நாள்தோறும் அடியார்கள் வணங்கிச் செல்வதும் நோயுற்றோர் தங்கிச் செல்வதும் சிறப்பான பெருமைக்குரியதாகும்.

செல்வச் சந்நிதி கோயிலில் தினமும் மூன்றுகாலப் பூசைகளும் வெள்ளிக்கிழமைகளில் ஆறுகாலப் பூசைகளும் நடைபெறுகின்றன. பூசகர் வெள்ளைத் நிறத் துணியால் வாயைக் கட்டிப் பூசை நிகழ்த்துவார். இந்த முறையானது கதிர்காமத்தை

பின்பற்றியதாகும். பூசை முடிவில் அடியார்களுக்கு விபூதி, தீர்த்தம், ஆலம் இலையில் படைத்த பொங்கல் என்பன வழங்கப்படும். இவை மெய்யன்பர்களின் பலவகையான பிணிகளை நீக்கவல்ல முருகனின் அருள் மருந்துப் பொருட்களாகப் போற்றப்படுகின்றன.

இவ்வாலய மகோற்சவம் ஆவணிமாதப் பூர்வபட்ச பிரதமைத் திதியில் ஆரம்பமாகிப் பௌர்ணமியில் தீர்த்த திருவிழாவுடன் நிறைவுறும். விழாக்காலங்களிலும் தேர்த்திருவிழாவன்றும் வேலே வலம் வருகிறது.

செல்வச் சந்நிதி உற்சவகாலத்தில் கதிர்காமப் பெருமான் வந்து செல்வதாக ஐதிகம் நிலவுகின்றது. திருவிழாக்காலங்களில் மெய்யடியார்கள் பலவகை காவடிகளை எடுத்தல், கற்பூரச்சட்டி ஏந்தல், அங்கப் பிரதட்சணம் போடுதல், மாவிளக்கு எடுத்தல், தீமிதித்தல், அன்னதானம் அளித்தல், முதலியவற்றினூடாகத் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வர்.[14]

வைத்தியர்களால் மாற்றமுடியாத பல வகையான நோய் பிணிகளை உடைய ஏழை, எளியவர்கள் இங்கு வந்து தொண்டமனாற்றிலும், அதனருகிலுள்ள தீர்த்தக் கேணியிலும் நீராடி ஆற்றங்கரையானை வழிபட்டு உய்தி பெற்று வருகின்றனர். இது கண்கூடாக காணக்கூடியது. இங்குள்ள மடங்கள் அடியார்களுக்கு அன்னதானத்தை அளித்தவண்ணமுள்ளன.

அன்னதானம் என்கின்ற பொழுது சந்நிதியின் சிறந்த விசேடம் உண்டு. இங்கு வரும் அடியார்கள் உணவு உண்ணாமல் செல்லும் வழக்கம் இல்லை. சந்நிதியைச் சுற்றி ஐம்பது மடங்கள் இருந்ததற்கான சான்றுகள் உண்டு. தற்போது அவை பல இன்னல்களால் இயங்காமலுள்ளன. ஆனாலும் குறிப்பாக " ஆனந்தா ஆச்சிரமம் " எனும் மடம் 1940 ம் ஆண்டில் மயில்வாகனம் சுவாமியாரால் உருவாக்கப்பட்டது. இவர் அடியார்களுக்கு உணவளித்து தங்குமிட வசதிகளையும் செய்து கொடுத்து இறைபணி செய்து வந்தார். இவரது ஆச்சிரமச் சிறப்பை அன்பர்கள் இன்றும் போற்றுகின்றனர்.

மயில்வாகனாரின் மறைவைத் தொடர்ந்து அவர் பணியை திரு. செ. மோகனதாஸ் அவர்கள் சிறப்பாகத் தொடரும் நோக்குடன் " சந்நிதியான் ஆச்சிரமம் " என்ற ஸ்தாபனத்தை உருவாக்கி அன்னதானத்தை ஆரம்பித்தார்.[15]

பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து சந்நிதி முருகன் அன்னதானக் கந்தன் என்று வழங்கப்பட்டு வரும் வழமைக்கு எந்தவிதத்திலும் குறைவின்றி அடியார்களின் பசிப்பிணியை போக்கி வருகின்றது. வெள்ளிக்கிழமைகளில் மட்டுமன்றி வாரம் முழுவதும் வரும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கும் வகையில் முழுநாளும் தொடர்ச்சியாக தனது சேவையை ஆற்றிவருகின்றது. மற்றும் அறுபத்துமூன்று நாயன்மாரையும் நினைவு கூரும்முகமாக மடமமைந்து அவர்கட்கு அன்னம் படைக்கும் நடைமுறை இருந்து வருவது சிறப்பிற்குரியது.

ஆச்சிரமம் வயிற்றுப்பசியை போக்கியதோடு மட்டும் நில்லாது அறிவுப் பசியைப் போக்குவதற்காக " சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை என்ற அமைப்பையும் உருவாக்கியுள்ளார்கள். இப்பேரவை வெள்ளி நிகழ்வுகள், உற்சவ கால நிகழ்வுகள் நூல்வெளியீடுகள் போன்ற பல்வேறு செயல்களை ஆற்றி வருகின்றது. அதுமட்டுமன்றி பாரம்பரியமான கலைகளான மிருதங்கம், ஆர்மோனியம் ஆகியவற்றை வளர்க்கும் நோக்குடன் இலவச வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றன.

1993 ம் ஆண்டிலிருந்து ஞானபண்டித என்று தொடங்கும் விருதுகளை வைகாசிப் பெருவிழாவின் போது அறிஞர்களுக்கு வழங்கி கௌரவித்து வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் " ஞானச்சுடர் " என்னும் பக்திரசம் பொருந்திய மாதச் சஞ்சிகையை வெளியிட்டு சைவப்பணி செய்து மகிழ்கிறார்கள்.[16]

இவ்வாறாக எல்லா நோயிலும் பெருநோயான பசிநோய்க்கு எந்நாளும் மருந்தளிப்பதால் " அன்னதானக் கந்தன் " என்பது இங்குள்ள முருகனுக்குப் பெயராயிற்று. அத்தோடு அருளைப் பொழிகின்ற, அறிவைத் தருகின்ற கந்தனும் கூட.

## மாவிட்டபுரம்

முருக வழிபாட்டின் தொன்மையை எடுத்துக் காட்டும் வகையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும் அமைந்து காணப்படுகின்றது. மாருதப்புரவீகவல்லி என்ற சோழநாட்டுப் பெண் குதிரை முகத்தினை உடையவளாய் குன்ம நோயினால் பீடிக்கப்பட்டு வருந்திக்கொண்டிருந்தாள். எந்த வைத்திய முறைகளாலும் அவளது ஜவரம் நீக்கப்படாமல் போகவே இறுதியில் சாந்தலிங்க முனிவருடைய வழிகாட்டலின்படி இலங்கையின் வடபாலுள்ள கீரிமலைக்குச் சென்றாள். அங்கே தவக்கோலத்திலிருந்த நகுல முனிவரை அடைந்து அவரை வணங்கி அவரின் ஆசியுடன் கீரிமலையில் தீர்த்தமாடினாள். பின் கோயிற் கடவைப் பிரதேசத்தில் கோயில் கொண்டுள்ள கந்தசுவாமியாரை வணங்கி இக்கோயிற் தீர்த்தமாகிய கீரிமலையிலுள்ள நன்னீரும், சமுத்திரநீரும் சங்கமிக்கும் இடத்தில் நீராடினாள். மீண்டும் கோயிற் கடவை கந்தப்பெருமான் சந்நிதானத்தை அடைந்து மனமுருகி வழிபாடு செய்தாள். இவ்வாறு தொடர்ந்து பல தடவை வழிபாடு செய்துவர அவளது குதிரை முகமும் குன்ம நோயும் நீங்கிப் பேரழகு வாய்க்கப் பெற்றாள். குதிரை முகம் நீங்கப் பெற்ற இடமாகையால் இத்தலத்திற்கு மாவிட்டபுரம் எனும் பெயர் ஏற்படலாயிற்று.[1]

தீராத பிணியானது முருகப்பெருமான் திருவருளினால் தீர்ந்தது. அதனால் மாருதப்புரவீகவல்லி கந்தசுவாமியார் ஆலயத்தைப் புதிதாக நிர்மாணிக்க சிற்பாசாரியார்களையும் பொருட்களையும் இந்தியாவிலிருந்து வரவழைத்து அழகான ஆலயத்தை அமைப்பித்தாள். பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் போது இவ் ஆலயம் இடிக்கப்பட்டது. பின் 19 ம் நூற்றாண்டில் புதிய கோவிலாக கட்டப்பட்டு சோழர்காலத்தில் நான்கு புறமும் கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு மகோற்சவம் ஆண்டுதோறும் ஆடிமாத பூர்வ பட்ச சஷ்டியிலே கொடியேற்றத் தடன் ஆரம்பமாகி இருபத்தைந்து தினங்கள் நடைபெற்று வருகிறது. ஆடி அமாவாசை அன்று முருகப் பெருமான் கீரிமலைக்குத் தீர்த்தமாடச் செல்வது அற்புதமான உற்சவமாகும். இம்மாவிட்டபுரக்கந்தன் அபிஷேகக்கந்தன் என்று சிறப்பிக்கப் படுகிறார்.

நல்லூர்

வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூராலயம் 15ம் நூற்றாண்டுப் பகுதியில் கோட்டை அரசனான 6ம் பராக்கிரமபாகுவால் அனுப்பப்பட்ட செண்பகப் பெருமாள் நல்லூரில் புதுநகர் அமைத்து சிறீசங்கபோதி புவனேகபாகு என்னும் சிங்களப் பெயருடன் 17 ஆண்டுகள் அரசபுரிந்தபோது இவ்வாலயம் கட்டப்பட்டது.

கி.பி 1478வரை அரசாண்ட சிங்கை பரராசசேகரன் கந்தசாமி கோயிலுக்கண்மையில் யமுனா ஏரி எனப்பெரிய குளத்தையும், கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார், மேற்கில் வீரமாகாளியம்மன், வடக்கில் சட்டநாதர் கோயிலையும் தெற்கில் கைலாசநாதர் ஆலயத்தையும் அமைத்தான்.

புவனேகபாகுவின் திருப்பணியைப் பாராட்டி மாவிட்டபுரம் கோயில் குருப் பிராமணர் அவனுக்கு விருது கொடுத்ததாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. இது உண்மை எனில் மாவிட்டபுரக் கோயில் நல்லூர்க்கோயிலுக்கு முந்தியதாக இருக்க வேண்டும். 17ம் நூற்றாண்டில் நல்லூர்க் கந்தாலயம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. கி.பி 1793ல் கிருஷ்ண ஐயா குருக்கள் வளவு என்னும் நிலத்தில் சிறு கோயில் கட்டினார்கள். அதில் ஆதி மூலத்தில் வேல்பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதன் பின் இரகுநாதமாப்பாண முதலியார் திருத்தி அமைத்தார். இங்கு ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. நல்லூர்க் கந்தப்பெருமான் தொடர்பான பல நூல்களும் பிரபந்தங்களும் காணப்படுகின்றன. "நல்லைக்குமரன்" எனும் பெயரில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நூல் ஒன்றை வருடந்தோறும் மகோற்சவகாலங்களில் வெளியிடுகின்றது. மகோற்சவகாலங்களில் அர்த்தான நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. "அலங்காரக்கந்தன்" என்று அழைக்கப்படும். நல்லூர்க்கந்தப் பெருமான் யாழ் வாழ் மக்களின் முன்னணித் தெய்வமாகவும் போற்றப்பட்டு வருகின்றார்.

## ஏனைய ஆலயங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், தீவகத்திலுள்ள பெரிய சிறிய முருகன் ஆலயங்களின் பெயர்களைத் தொகுத்தும் பகுத்தும் நோக்கும்போது இங்கு நிலவிவரும் முருகவழிபாட்டுச்சிறப்பு, செழுமை பிரபல்யம் முதலியன புலப்படும். இங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் பெயர்களாக கந்தசுவாமி, முருகமூர்த்தி, சுப்பிரமணியர், சித்திரவேலாயுதர் போன்ற இன்னோரன்ன பெயர்கள் விளங்குகின்றன. இவற்றைவிட ஈழத்தில் பிரசித்தி பெற்றுத்தனித்துவமாக விளங்கும் கதிர்காமம் என்ற திருத்தலத்தின் நாமத்தையுடைய ஆலயங்களும் விளங்குகின்றன. உதாரணமாக பாலகதிர்காமம், செல்வக்கதிர்காமம், உபயகதிர்காமம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சித்திரவேலாயுதர் என்ற பெயர் கொண்ட ஆலயங்களாக தச்சுவேலி மடத்தடி சித்திர வேலாயுத சுவாமிகோயில், மல்லாகம் கிழக்கு சித்திரவேலாயுத சுவாமி கோயில், கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில், நாவற்குழி சித்திரவேலாயுத சுவாமிகோயில் என்பன விளங்குகின்றன.[18] இவற்றில் எமது ஆய்வுக்குரிய ஆலயமாகத் திகழ்வது கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயமாகும்.

தனிப்பட்ட முருகன் கோயில்களை விட ஏனைய இந்துக்கோயில்கள் பலவற்றில் பரிவார தெய்வமாகவும் முருகனை வைத்து வழிபட்டு வருகின்றனர். இவற்றில் முருகனின் பல திருவுருவங்கள் வைத்து வழிபடப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் புராணகாலத்திலேயே முருக வழிபாடுகள் பேணப் பட்டுவந்துள்ளன. காலத்துக்குக் காலம் ஏற்படும் நாட்டு நிலைமை காரணமாக பல அசம்பாவிதங்கள் இடம்பெற்றபோதிலும் அம் முருகன் அடியவர் மனங்களில் நின்று அகலாது. "யாமிருக்கப் பயமேன்" என்று அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்றான்.

என அப்பர் சுவாமிகள் சுட்டுவதன் மூலம் நாகரிக வாழ்வுக்கு உதாரணமாக விளங்குபவை திருக்கோயில்களே என்பது புலனாகின்றது. இந்த வகையில் கோப்பாய் வாழ் மக்கள் சிறந்த இறை நம்பிக்கையும், சமய ஆசாரமும் உடையவர்கள் திரும்பும் திசையெல்லாம் திருக்கோயில்கள் காணப்படுகின்றன. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்." என்ற ஔவையின் அறவாக்கை சிரமேற்கொண்டு வாழ்பவர்கள் இவ்வூர்மக்கள். கோவைச் ஸ்ரீ சித்திரவேலாயுதரைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபடும் மக்கள் அநேகர் காணப்படுகின்றனர்.

கோப்பாய்ச் சந்தியிலிருந்து உரும்பிராய் செல்லும் வீதியில் நூறு யார் தூரத்தில் வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமிகோயில் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் மூர்த்தியாக வேலாயுதமும், தலவிருட்சமாக 100 வருடம் பழமை கொண்ட மாமரமும் மற்றும் அரசமரமும் காணப்படுகின்றன.

<u>பூர்வீக வரலாறு</u>.

இற்றைக்கு நூற்றியம்பது ஆண்டுகளுக்கு முன்பு கோப்பாய்க் கிராமத்தில் வடபகுதியில் வாழ்ந்த சைவவேளாளரான அம்பலவாணர் வேலுப்பிள்ளை என்பவர் ஒரு சிறந்த முருக பக்தராவார். அக்காலம் இந்தியாவும் இலங்கையும் பிரயாணத் தடையின்றி எவரும் சென்று வரக்கூடிய வசதிபெற்ற காலம் என்பதால் இப்பெரியார் ஆண்டுதோறும் தென்னிந்தியாவிலுள்ள புண்ணியத்தலங்களுக்கெல்லாம் யாத்திரை செய்து வந்தார். ஒவ்வொரு ஆண்டும் திருச்செந்தூர் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் ஆறுமுகப்பெருமானைத் துதித்துக் கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டிக்கும் வழக்கம் அவரிடம் இருந்தது. கோவையூரில் முருகனுக்கு ஓர் ஆலயம் இல்லையே என்னும் குறை இருந்து வந்தது. திருச்செந்தூரில் இவருக்கு எழுந்த ஆர்வமே தன்னூரிலும் முருகனுக்கு ஒரு ஆலயம் அமைக்க ஆர்வத்தை ஊட்டியது. அவ்வேளையில் அவர்தம் வாழ்க்கைத் துணைவி இறக்கவே அவர்தம் தெய்வீக வாழ்வில் மேலும் ஈடுபாடு கொண்டது. மனைவியின் மங்கல நாணைவிற்று வேலாயுதம் ஒன்றினைச் செய்வித்தார். தம்முடைய தோட்டமாகிய ஊரியாட்டியில் அவ்வேலாயுதத்தை ஸ்தாபிக்க வேண்டும்

ற ஆவல் அவருக்கு இருந்தது. அவர் இதனைத் தம்முடைய குல குருவான வேதக் குட்டிக் குருக்களிடம் தெரிவித்தார்.[20]

சிவநெறிச் செல்வரான வேதக் குட்டிக் குருக்கள் இதே சிந்தனையில் இருந்தபோது அன்றிரவு ஓர் கனவுகண்டார். கோப்பாய்ச் சந்திக்கு மேற்குப் பக்கமாக சப்பாத்தறைகளும், கற்பாறைகளும் இருந்த இடத்தில் இரண்டு ஈச்சமரங்கள் செழித்து வளர்ந்திருந்தன என்றும் அவ்விடத்திலே வேல் ஒன்று இருந்தது என்றும் அவரிற் கனவில் காட்சி கிடைத்தது. மறுநாள் அவர் அம்பலவாணர் வேலுப்பிள்ளையிடம் கோயில் அமைய வேண்டிய இடம் இது என்பதைக் குறிப்பாகச் சொன்னார். அவ்விடம் வேலுப்பிள்ளை குடியிருந்த இடத்திற்குத் தூரமாக இருந்தன. அத்துடன் கோட்டை, படைகள் என்பன இருந்த காரணத்தினால் குடியிருப்போ, சனசஞ்சாரமோ அற்ற பகுதியாகவும் இது இருந்தது. என்றும் குருவின் வேண்டுதலின் மதிப்பும் விருப்பும் கொண்ட வேலுப்பிள்ளை விரைவிலேயே அவ்விடத்தில் கோயில் கட்டி, தம் குருவான வேதக்குட்டிக்குருக்களினாலேயே வேலாயுதப்பிரதிஷ்டையும் செய்வித்து நித்திய, நைமித்திக பூசைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வித்தார். ஊரியாட்டியில் எழ வேண்டிய கோயில் உந்துவத்தையில் உருவெடுத்தது. சில ஆண்டு களிலேயே கோயில் சாந்தக்கட்டடமாக மாறியது.

## வேதக்குட்டிக் குருக்கள் பணி

வேதக்குட்டிக்குருக்களின் முன்னோர்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். இந்தியாவிலே பாடல்பெற்ற தலமான திருப்புகலூரிலிருந்து தமிழ் மன்னரால் அழைத்து வந்து நீர்வேலியிற் குடியேற்றுவித்த ஆதிசைவ சிவாச்சாரியபரம்பரையினரென்றும். அவர்களுள் ஒருவரான சோமசுந்தரக்குருக்கள் (சோமுஐயா) என்பவர், கோப்பாய் வடக்கிலிருந்த சைவமக்களால் அழைத்து வந்து அப்பாணை (வில்லையடி) என்னுமிடத்தில் குடியமர்த்தப்பட்டனர் சோமசுந்தரக்குருக்களின் மகன் வழிப் பேரனே வேதக் குட்டிக் குருவானவர்.

வேதக்குட்டிக் குருக்கள் அக்காலத்தில் இராதம்பு என்னும் இடத்தில் குடியிருந்தார். நித்தியபூசையை நியமமாகச் செய்வதற்கும், கோயிலின் கட்டட வேலைகளை நேரே கவனிப்பதற்கும் கோயிலின் தெற்கு வீதியில் வந்து குடியேறினார்.

சனசந்தடியற்றுப் பற்றைக் காடுபோல காட்சியளித்த இவ்விடத்தில் குருக்களும் மனைவிமக்களும் முருகனையே துணையாகக் கொண்டு தொண்டாற்றிவந்தனர்.[21]

கோப்பாய்ச் சந்தியை அண்மித்ததாக உள்ள உற்றவத்தை, கொப்பிளாவத்தை, நாவற்கட்டை, கலம்புரை, இராதம்பு போன்ற சுற்றாடல் குறிச்சிகள் குடியேற்றமுள்ள சந்தடிமிக்க, செழிப்பான இன்றுள்ள நிலைமைக்கு வந்துள்ளதெனில் அது முருகன் கிருபை கொண்டு அம்பலவாணர் வேலுப்பிள்ளை, வேதக்குட்டிக்குருக்கள் ஆகியோரினூடாக செயல்பட்டுச் சந்திக்கு அண்மித்ததாக குடியமர்ந்தமையே ஆகும்.

இக்கோயில் ஸ்தாபிக்கப்பட்ட 1862ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஈழம் எங்கும் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியது. சங்கிலிமன்னனைத் தொடர்ந்து கோப்பாய்க் கோட்டையை ஒரு படைத்தளமாகவும், காவல் கொத்தளமாகவும் வைத்திருந்த காலமாகும். கோப்பாய் கன்னிமாரியார் கிறிஸ்தவ ஆலயமும், கிறிஸ்தவ கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்த காலமாகும்.

இக்காலத்தில் கோட்டை மாதாகோயில், கிறிஸ்தவ பாடசாலை முதலியவற்றிற்கு மிக அண்மித்ததாக ஒருமுருகன் கோயிலை எழுப்பி அதனைச் சுற்றி குடிமக்கள் வருவதற்கு முன்னோடியாக தானாகவே, எத்தனையோ இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அங்கு குடியிருந்து அளப்பரிய சேவைபுரிந்தபெருமை வேதக்குட்டிக்குருக்களுக்குரியதாகும்.

சைவமும் தமிழும் செழித்தோங்கும் இக்காலத்திலேயே ஒரு சிறிய கோயிலைத் தானும் கட்டுவதும், கும்பாபிஷேகம் செய்வதும் பெருஞ்செயலாகவே உள்ளது. பல வசதிகள் இல்லாத இக்கட்டான ஒரு சூழ்நிலையில் ஒரு கோயிலை அமைப்பது என்பது சைவம், தமிழ் வளர்க்கும் புனிதப் பணிகளில் ஒன்றாகவே கருத வேண்டும்.

இத்தகைய புனிதமான பணியினை வேதக்குட்டிக் குருக்களின் பரம்பரையினர் தொடர்ந்தும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கோயிற்கட்டடப்பணி:**

1862 இல் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாலயம் 1897ம் ஆண்டளவில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், அடுத்த இரண்டு மண்டபங்களும், வைரவர் கோயிலும் கட்டப்பட்டு வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் வேதக்குட்டிக் குருக்களின் புதல்வராகிய சபாரத்தினக் குருக்கள் அவர்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சில ஆண்டுகளின்பின் மடைப்பள்ளி, களஞ்சிய அறை, கொடித் தம்பக் கொட்டகை, சுற்றுமதில்கள் என கட்டடங்கள் வளர்ச்சி பெற்றன. சபாரத்தினக் குருக்கள் காலத்தில் அவர் மகனான சோமசுந்தரக் குருக்களின் முயற்சியினால் இரண்டு ஆண்டுகளில் அலங்கார உற்சவம் வெகு விமரிசையாக நடத்தப் பட்டது எனப் பெரியோர் கூறுவர். கர்ப்பக் கிருகத்தின் பின் சுவரில் கட்டப் பட்டுள்ள "1897 ஆண்டில் .....ஆதி முயற்சி" எனும் சிலாசாசனத்தின் மூலம் இதனை அறியலாம்.[22]

1916ம் ஆண்டளவில் தொடங்கிய கோபுர வேலைகள் சில ஆண்டு களில் நிறைவுற்றன. இந்த ஆண்டிலேயே வள்ளி தெய்வயானை சமேதரரான ஆறு முகப்பெருமானின் திருவுருவப் பிரதிஷ்டையும் நிகழ்ந்தது. 1930ம் ஆண்டளவில் கொட்டகை வேலைகள் நிறைவெய்தி யாகசாலை, வசந்த மண்டபம் முதலியனவும் கட்டப்பட்டன.

1942ம் ஆண்டில் சண்டேசுராலயமும், மகா மண்டபமும், ஸ்நபன மண்டபமும் கல் திருப்பணி வேலையாகக் கட்டத் தொடங்கி சில வருடங்களில் முற்றுப் பெற்றன. விநாயகராலயம், வைரவராலயம் ஆகிய பரிவாரங்கள் கட்டப் பட்டு, விநாயகர், பாலசுப்ரமணியர், முத்துக்குமாரசுவாமி முதலிய திருவுருவங்கள்

அடியவர்களின் உபயமாக அளிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன. சித்தாந்த பானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் 1960ம் ஆண்டு இக் கோயிலின் மூன்றாவது கும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நடைபெற்று நிறைவெய்தியது.

வெகு காலத்தின் முன் தொடங்கப் பெற்று இடையில் நீண்டநாள் கைவிடப்பட்டிருந்த சித்திரத்தேர் வேலையீண்டும் இக்காலப்பகுதியில் தொடங்கப்பட்டு 1967ம் ஆண்டில் வெள்ளோட்டம் விடப்பட்டது. ஈழத்தில் சிறப்புப் பெற்ற சித்திர தேர்களில் ஒன்றாக இதனையும் கொள்ளலாம். தேரில் கந்தபுராணக் காட்சிகள் பலவும் சிலாவடிவத்தில் செதுக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். 1967ம் ஆண்டி லிருந்து இச்சித்திரத்தேரில் ஆறுமுகப் பெருமான் எழுந்தருளி உலாவந்து அடியவர் களுக்கு வரமருள்வது வழக்கமாகும்.[23]

1986ம் ஆண்டில் வசந்த மண்டபம், யாகசாலை, மணிக்கூட்டுக் கோபுரம் ஆகியவையும், தெற்கு உள்வீதி மண்டபமும், இரு்தள விமானமும் அமைக் கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. இக்கோயில் கோப்பாய் வாழ் இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களில் சிறப்பானதாகும். இவ்வாலயம் காலத்திற்குக் காலம் பல நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலயம் HA/5/JA/ 784 எனும் பதிவிலக்கத்தைக் கொண்டதாக இந்து சமய பதிவுகள் கலாச்சார சபையால் 01.02.2001இல் பதிவு செய்யப்பட்டது.

<u>ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமி கோயில் நம்பிக்கைகள் அற்புதங்கள்</u>:

கோப்பாய் வாழ் மக்கள் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி மீது மிகுந்த நம்பிக்கை உடையவர்கள். இவர்களின் அதீத நம்பிக்கை காரணமாக முருகப்பெருமான் அவர்களுக்கு அற்புதங்கள் நிகழ்த்தியதும்அருள்ளையை அள்ளிவீசுவதையும் அடியார்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ சந்திரவேலாயுத சுவாமி ஆலயம் எவ்விடத்தில் அமைக்கப்பட வேண்டும் என்பதை முருகப்பெருமானே கனவில் தோன்றி இடம் குறித்தமை இவர் செய்த அற்புதம் என்றே நாம் கொள்ளலாம். இப்பகுதி வாழ் மக்கள் முருகன் மீது கொண்ட நம்பிக்கை காரணமாக எச்செயல்களை ஆரம்பிக்கும்போதும் இவரை வழிபட்டபின்பே செய்கின்றனர். நேர்த்திகள் வைப்பதும் அவற்றை நிறைவேற்றுவதும் இவ்வாலயத்தில் வழமையான செயல்களாகும். தம்பிள்ளைகளின் நற்காரியங்கள், குறிப்பாக திருமணச்சடங்குகள் போன்றவற்றை முருகப்பெருமான் சந்நிதியில் நிறைவேற்றினால் நிறைவான வாழ்க்கை ஏற்படும் என்பது அவர்கள் நம்பிக்கை ஆகும். இறைவன்மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக பல அடியார்கள் இவ்வாலயத்திற்கு நன்கொடை பலவற்றை நல்கியுள்ளனர். வெளியூரில் வாழும் அன்பர்களால் நிதியுதவி இவ்வாலயத்திற்கு கிடைக்கின்றது. அடியவர் பலர் தம் நேர்த்திகளை வருடாவருடம் நிறைவேற்றுவர்.

சூரன்போர் தொடக்கத்தில் பந்தடி நீள அகலத்தில் கிடங்கு வெட்டப்பட்டு அதற்குள் விறகுகள் அடுக்கப்பட்டு தீ மூட்டப்படும். சூரன்போர் முடியும்வரை அது எரிந்து தணலாகும். அடியவர் ஒருவர் ஆறுநாளும் உபவாசமிருந்து தீமிதிக்கும் நேரத்தில் ஈரஉடையுடன் பக்தி சிரத்தையாக சிறிது தண்ணீரை தலையில் ஊற்றிய வண்ணம் மெதுவாக தீயில் நடந்து மறுகரை செல்வார். இவ்வழக்கம் தற்போது வழக்கில் இல்லை என்றாலும் இவ்வாலயத்தில் நம்பிக்கையின் காரணமாக இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் இவ்வாலயத்தின் குருக்களுக்கு அவ்வப்போது முருகப்பெருமான் கனவில் தோன்றி அருள் பாலிப்பதாகவும் கூறுகின்றனர்.

ஆலய ரதோற்சவப் பெருவிழா அன்று ரதம் வீதியுலாவரும்போது அடியார் ஒருவர் செவ்வி இளநீர்த்தேங்காயை தலையிலே அடித்து உடைக்கும். நிகழ்வு இடம்பெறுகின்றது. பார்ப்போரை இந்நிகழ்வு மெய்சிலிர்க்க வைக்கும். பக்தர்கள் தம் குறைகளை முருகப்பெருமானிடம் முறையிடும்போது அக்குறைகள்

அக்கணமே நிவர்த்தி செய்யப்படுகின்றது.[24] இக்காரணங்களால் மக்களுக்கு மேன்மேலும் நம்பிக்கை பெருகுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கேட்டவரம் கொடுக்கும் அம்புதம் பெருமானாக கோப்பாய் மக்களுக்கு ஸ்ரீசிந்திரவேலாயுதனார் ஒரு தெய்வமாக அருள்பாலித்துக் கொண்டிருப்பது கோவையூர் மக்கள் பெற்ற ஒரு வரப்பிரசாதமென்றே கூறலாம்.

## அடிக்குறிப்புக்கள்

01. கந்தபுராணம்

02. மேற்படிநூல்

03. கந்தரனுபதி, கிருபானந்தவாரியார் உரை, திருப்புகழ் அமிர்தகாரியாலயம், சென்னை 1970. ப

04. சிற்றம்பலம். சி.க. ஈழத்து இந்து சமய வரலாறு - பாகம் 1 பல்கலைக்கழக வெளியீடு, 1996. ப. 182

05. மேற்படி நூல் ப. 213

06. சண்முகதாஸ். அ, மனோன்மணி சண்முகதாஸ். ஆற்றங்கரையான் வாரவொல்லை வெளியீடு. 1989. ப.

07. சிற்றம்பலம். சி.க. ஈழத்து இந்துசமய வரலாறு. பாகம் 1 மு.கு. நூல் ப, 215

08. திருப்புகழ், அருணகிரிநாதர் அருளியது. அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர், சென்னை 1970, ப.15

09. சிற்றம்பலம். சி.க. ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் 1. மு.கு. நூல் ப.211

10. சண்முகதாஸ். அ. மனோன்மணி சண்முகதாஸ், ஆற்றங்கரையான், மு.கு.நூல் ப.

11. முருகன் திருவாவடுதுறை ஆதீனம், கந்தசஷ்டி விழா மலர் ப.

12. சிவசாமி. வி. _யாழ்ப்பாணக் குடாநாடும் முருகவழிபாடும் நல்லைக்குமரன் மலர்_, யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு 1996. ப. 93

13. மேற்படி ப. 93

14. _சைவநெறி_. தரம் 11 கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 2000 ப.43-45

15. சிவராஜசர்மா "_செல்வச்சந்நிதி_ முருகன் ஆலய வரலாறு" ஒருநோக்கு _நல்லைக்குமரன் மலர்_. 2000 ப. 89 - 90

16. மேற்படி ப. 90

17. சைவநெறி தரம் 11 . மு.கூ.எ . ப 46

18. சிவசாமி.வி _நல்லைக்குமரன் மலர்_ 1996. ப. 96

19. திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பனந்தாள், காசிமடம் 1957

20. சுப்பிரமணியக் குருக்கள். _ஸ்ரீ வடகோவைச் சித்திரவேலாயுதர் ஊஞ்சற்பதிகம்._ சித்தாந்த பானு பிரம்மஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களால் வெளியிடப் பட்டது. 1971 - ப.1

21. மேற்படி ப. 2

22. மேற்படி ப. 2

23. _நேர்காணல்_ - சித்தாந்தபானு சுப்பிரமணியக் குருக்கள்(முன்னாள் கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி ஆலய பிரதமகுரு)

24. _நேர்காணல்_ - சிவலோகநாதன்.ஐ (கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபைச் செயலாளர்)

# அத்தியாயம்

# மூன்று

# அத்தியாயம் மூன்று
************

## கோயில்கிரியை மரபு

### 3.1. நித்தியக்கிரியை

சமய நம்பிக்கைகள், தத்துவம் என்பவற்றினை நடைமுறைப்படுத்துவதே கிரியை ஆகும். இது "க்ரு" எனும் வினையடியிலிருந்து பிறந்ததாகும். நம் சமயக் கிரியைகளின் நோக்கம் நம்மை இறைவனிடம் படிப்படியாகக் கொண்டு போய்ச்சேர்த்து விடுவதாகும்.[1] பூசைகளும் கிரியைகளும் மனதைப் பண்படுத்தி ஞானத்தை உண்டாக்கும் உண்மைச்சாதனங்களாகும். இக் கிரியைகளை ஆற்றுவதற்கு மந்திரம், பக்தி, பாவனை எனும் அம்சங்கள் இன்றியமையாதது. இந்துப்பண்பாட்டு மரபில் கிரியைகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றன.

சிவாலயங்களில் நிகழும் கிரியைகள் மூன்று வகையாகும். இவை நித்திய, நைமித்திய, காமியக் கிரியைகள் என்பனவாகும். இவற்றுள் முதலில் நித்தியக் கிரியை பற்றி நோக்குவோம்.

'நித்தியக் கிரியைகள்' எனும் தொடரின் கருத்து 'ஆலயங்களில் தினமும் நிகழும் நியதிச் செயல்கள்' என்பது ஆகும். பூசைகள் எனப்படும் நித்தியக் கிரியைகள் ஆலயங்களில் நிகழும் போது ஆவாகனம், அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, அருச்சனை, துதி, நிருத்தியம் என்னும் நியதிகள் பின்பற்றப்படும். இத்தகைய பூசைகள் சிவாலயத்தின் வசதிக்கேற்ப பன்னிரு காலங்களிலோ ஆறு காலங்களிலோ நடைபெறுவது வழக்கம். உதாரணமாக திருச்செந்தூரில் பன்னிருவேளைப் பூசைகள் நிகழுதல் இன்றும் காணப்படும் வழக்கம் ஆகும். ஆறுகாலப்பூசைகளாக உஷக்காலப்பூசை, காலைச்சந்திப்பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்சைப்பூசை, இரண்டாம்காலப்பூசை, அர்த்தயாமப் பூசை என்பன விளங்குகின்றன.[2] இதனைக் கிரியை நூல்கள் உஷட்காலப்பூசை எனக் குறிப்பிடுகின்றன. அனேகமான ஆலயங்களில் காலை, நண்பகல், மாலை என்னும் முக்காலப்பூசைகள் நிகழ்வதே இன்று நடைமுறையில் காணப்படுகின்றது. நித்திய கிரியைகள் உலக சேமத்திற்காகவும், சகலமக்களின் உயர்வுக்காகவும் தினந்தோறும் ஆற்றப்படவேண்டியவை எனச் சிவாகமங்கள் கூறுகின்றன.[3]

கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் மூன்று காலப்பூசைகளே இடம்பெறுகின்றன. காலைச்சந்திப்பூசை, உச்சிக்காலப்பூசை, சாயரட்சைப்பூசை என்பனவே அவையாகும். இங்கு நடைபெறும் பூசைகள் யாவும் குமார தந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆற்றப்படுகின்றன.

காலைச்சந்திப்பூசை காலை ஏழுமணிக்கு இடம்பெறுகின்றது. இப்பூசையின் போது மூலஸ்தானத்தில் மட்டுமே பூசைகள் நிகழ்த்தப்படுகின்றன. அடுத்து உச்சிக் காலப்பூசை மதியம் பன்னிரண்டு மணிக்கு இடம்பெறுகின்றது. இதன்போது விநாயகருக்கு முதல் பூசை இடம்பெற்று பின் மூலவருக்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் பூசைகள் இடம்பெறுகின்றன. மாலை ஐந்து மணிக்கு சாயரட்சைப் பூசை இடம்பெறுகின்றது. இவ்வேளையிலும் விநாயகருக்கு பூசை தொடங்கி அனைத்துத் தெய்வங்களுக்கும் பூசைகள் இடம்பெறுகின்றன.

பூசைகள் யாவும் அரைமணி நேரத்திற்கு முன்பதாக ஆலயமணி அடிக்கப்பட்டு உரிய நேரத்திற்கு தவறாமல் இடம்பெறுகின்றன. சாதாரண பூசைகளின்போது ஒற்றைத்தீபம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. விசேடதினமான வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே ஏனைய தீபங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பூசை நிறைவில் அடியார்களுக்கு வீபூதி, தீர்த்தம், சந்தனம், பூ என்பன வழங்கப்படும். இவ்வாறாக கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் நித்தியக் கிரியைகள் இடம்பெறுகின்றன.

### 3.2. நைமித்தியக்கிரியை

நைமித்தியக் கிரியை என்பது சிறப்புக்கிரியை எனப்படும். குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் இக்கிரியைகள் நடைபெறும். இவை வாரத்திற்கொருமுறை, இரு வாரத்திற்கொருமுறை, மாதத்திற்கொருமுறை, மாதத்திற்கொருமுறை, சில மாதங்களுக்கொருமுறை, வருடத்திற்கொருமுறை, பலவருடங்களுக்கொரு முறை எனவும் நிகழும்.[4] இந்த வகையில் கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் இடம்பெறும் நைமித்திய கிரியைகளை உள்ளார்ந்து நோக்குவோம்.

குறிப்பிட்ட தெய்வங்களுக்கு குறிப்பிட்ட நாட்கள் சிறப்பாக கூறப்படுவதனால் அவ்வாரத்தில் வரும் அவ்அவ் தினத்தில் சுவாமி தரிசனம் செய்தல் சிறப்பாகக் கருதப்படுகிறது. இங்கு வெள்ளிக்கிழமைகளில் சிறப்பான பூசைகள் இடம்பெறுகின்றன. இதன்போது ஆவாகனம், அபிஷேகம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், நிருத்தியம் என்பன இடம்பெறுகின்றன.

<u>மாதபூசைகள்</u>

மாதமொருமுறை நடைபெறும் விசேட பூசைகளாக கார்த்திகை ஷஷ்டி, பூரணை, அமாவாசை என்பன விளங்குகின்றன. கார்த்திகை அன்று சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன. சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி மகோற்சவம், ஆவணிச்சதுர்த்தி, புரட்டாதிச்சனி, ஐப்பசி - விசு, ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, நவராத்திரி, திருக்கார்த்திகை(குமாராலய தீபம்), மார்கழித்திருவெம்பாவை - ஊஞ்சல்விழா, தைப்பொங்கல், தைப்பூசம், மகா சிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்தரம், பங்குனி - வருடாந்த சங்காபிஷேகம், போன்றன இவ்வாலயத்தில் ஆண்டுக்கொருமுறை நிகழும் விசேட திருவிழாக்களாகும்.[5]

இங்கு ஆவணிச்சதுர்த்தி சிறப்பான முறையில் நடைபெறுகின்றது. இதன்போது விநாயகப்பெருமானுக்குச் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று வீதியுலா இடம்பெறும். விரதமனுஷ்டிக்கும் அடியவர்கள் ஆலய தரிசனம் செய்வர். நவராத்திரி விழா ஒன்பது நாட்கள் மாலையில் நடைபெற்றுவருகின்றது. இதன்போது வசந்தமண்டபத்தில் துர்க்கை அம்பாளை இருத்தி ஆராதனைகள் இடம்பெறும். பின் சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். இறுதி நாள் விஜயதசமி என்று சொல்லப்படும். மானம்பூத்திருவிழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பலானை கன்னகையம்மன் இவ்வாலயத்திற்கு வீதிவலமாக வந்து வாழைவெட்டும் வைபவம் இடம்பெறும். நவராத்திரி காலங்களில் அபிராமி அந்தாதி படிக்கப்படும். புரட்டாதிச்சனிக்கிழமைகளில் சனீஸ்வரனுக்கு எள்ளெண்ணை எரிக்கப்படும்.

கார்த்திகையில் வரும் திருக்கார்த்திகை என்று சொல்லப்படும் குமாராலய தீபத்திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. மாலை வேளையில் 'சொக்கப்பனை' எரிக்கும் நிகழ்வும் இடம்பெறுகின்றது. மார்கழி மாதத்தில் திருவெம்பா நிகழ்வு பத்து நாட்களும் அதிகாலை வேளையில் நடைபெறுகின்றது. இதன்போது திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இடம்பெறுகின்றது. இறுதிநாள் ஆருத்திரா தரிசனம் சிறப்பாக நடைபெறுகின்றது. அன்று நடராஜப் பெருமான் வீதிவலம் வரும் காட்சியையும் பக்தர்கள் கண்டுகளிப்பர். மகா சிவராத்திரி விழாவின்போது நான்குயாமப் பூசைகளும் உரிய நேரத்தில் உரிய முறைப்படி இடம்பெறுகின்றன.

அடுத்து ஐப்பசி மாதத்தில் வரும் கந்தசஷ்டி நிகழ்வு இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. கந்தசஷ்டி விழாக்காலங்களில் காலையில் கந்தபுராணப்படிப்பு இடம்பெற்று மாலைவேளையில் திருவிழா நடைபெறுகிறது. ஆறாம்நாள் சூரன்போர் கொண்டாடப்படுகிறது. ஈழத்திலேயே அமைப்பிலும், அளவிலும், நுட்பத்திலும் சிறந்த சூரன் இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். சூரன்போருக்கு புறப்பட முன்னர் முதல்நாள் திக்விஜயம் இங்கு இடம்பெறும். சூரன்போரின்போது பொய்க் கால், குதிரையாட்டம், நாரதர்வேஷம், கரகாட்டம் போன்றவற்றுடன் முடிவில் தீ மிதித்தல் வைபவமும் இடம்பெறும். சிங்கப்பூர் வல்லிபுரம் என்னும் அடியார் ஒருவரே தீமிதித்தலில் ஈடுபட்டுவந்தவர் ஆவார். மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் இந்நாளில் அருகி வருகின்றமை கவலைதரும் விடயம் என்பதும் குறிப்பிடத் தக்கது. இக்கந்தசஷ்டி விரதமனுஷ்டிப்போர் காப்புக்கட்டி மிகுந்த பக்தி சிரத்தையோடு விரதமிருப்பர். சூரன்போருக்கு மறுநாள் காலையில் தீர்த் தோற்சவமும் மாலையில் திருக்கல்யாண உற்சவமும் வெகுவிமரிசையாக இடம்பெறும்.

கந்தசஷ்டிக்காலங்களில் சுவாமி வீதிவலம் வரும்போது முதலாம்நாள் கடா வாகனத்திலும், இரண்டாம்நாள் யானைவாகனத்திலும், மூன்றாம்நாள் விமானத்திலும் (பல்லக்கு), நான்காம்நாள் இடபத்திலும் ஐந்தாம்நாள் குதிரையிலும், ஆறாம்நாள் மயிலிலும் வருவார்.[6]

இவ்வாலய மகோற்சவம் வைகாசி மாதப் பூரணை தினத்தைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் நடைபெறுகின்றன. உற்சவத்தொடக்கத்தின் போது முறைப்படி விக்னேஸ்வர பூசை, அனுக்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷபந்தனம் எனும் கிரியைகள் நிகழ்த்தப் படுகின்றன.[7]

விசேடமகோற்சவ தினங்கள்

இங்கு பத்துத் தினங்களும் ஒவ்வொரு பெயர் கொண்ட உற்சவங்களாக அழைக்கப்படுகின்றன. கொடியேற்றத்திற்கு முதல் நாள் மகோற்சவசாந்தி இடம்பெறுகிறது. பத்துத் திருவிழாக்களுமாவன

01) மகோற்சவ கொடியேற்றம்
02) அமிர்தவல்லி சுந்தரவல்லி தவம் காணல்
03) தேவசேனாதிபதி பட்டம்
04) நடனநாதர்
05) பக்தருக்கருளும் பாவனை
06) வசந்த உற்சவம்
07) வேட்டைத்திருவிழா
08) சப்பறத் திருவிழா
09) தேர்த்திருவிழா
10) தீர்த்தோற்சவம்

இவற்றுடன் 11ம் நாள் திருக்கல்யாண உற்சவமும் 12ம் நாள் வைரவர் மடையும் இடம்பெறுகின்றன.[8] இங்கு கூறப்பட்ட திருவிழாக்களில் சிறப்பாக இடம் பெறும் திருவிழாக்களையும் அவற்றின் உட்பொருளையும் உள்ளார்ந்து நோக்குவோம்.

கொடியேற்றம்

மகோற்சவத்திற் கொடிமரமாகிய துவஜஸ்தம்பம் தனிச்சிறப்பு பெறுகின்றது. ஆலயங்களில் கோபுர வாசலால் உட்சென்றதும் நேராக உயர்ந்து நிற்கும் கொடிமரத்தைக் காணலாம். கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் மூலமூர்த்தியை நோக்கி இருக்கும்.

இவ்வாலயத்தில் வருடமொருமுறை நிகழும் கும்பாபிஷேக தினமான பங்குனிரோகிணி நட்சத்திரத்தன்று சங்காபிஷேக நிகழ்வு இடம்பெறுகின்றது.

## மகோற்சவம்

வருடந்தோறும் குறித்த ஒரு காலத்தில் செய்யப்படுவது நைமித்தியக் கிரியைகள். நைமித்திய கிரியைகளிற் சிறந்தது மகோற்சவம். இது பிரமோற்சவம் என்று சிறப்பிக்கப்படுகின்றது. மகா- மேலான, உத்-ஞானம், சவம்- போகம், மோட்சம் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. எனவே மேலான போக மோட்சத்தினையும், ஞானத்தையும் தருவது மகோற்சவமாகும். உற்சவமுதலாம் நாள் முதல் (கொடியேற்றம்) உற்சவ இறுதிநாள் கொடியிறக்கம் வரையுமான உற்சவங்கள் உயிர்களைப் பக்குவ ஆன்மாக்களாக வாழ வழிகாட்டுவனவாக அமைகின்றன. இவற்றுள் உற்சவ ஆரம்பம் கொடியேற்றம் வரையான கிரியைகள் படைத்தலையும், வாகனத்திருவிழா காத்தலையும், இரதோற்சவம் அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தோற்சவம் அருளலையும் குறிப்பதாக நடாத்தப்படுகின்றன.

இப்படியான ஆலய உற்சவங்களில் பங்குபற்றியவர்களுக்கும், வழிபடுபவர்களுக்கும் தீட்சை பெறாவிட்டாலும் தீட்சை பெற்ற பலன் கிட்டியதாக ஆகமங்கள் உணர்த்துகின்றன. மற்றும் உத்தமயாகமாகிய உற்சவத்தைச்செய்தவர்களும், செய்வித்தவர்களும், உதவிசெய்தவர்களும் சகல போகங்களையும் அநுபவித்து மோட்சத்தை அடைவார்கள்.

மேலும் நித்திய, நைமித்திய கிரியைகளில் அறிந்தும் அறியாமலும், மந்திரம், கிரியை பாவனைகளாலும், வழிபடுவோராலும் நிகழ்ந்த குற்றங்களைப் போக்குவதற்கும் உரிய பேறுடைய தினங்களாக மகோற்சவ காலங்கள் கொள்ளப்படுகின்றன. அத்துடன் மகோற்சவகாலங்களில் கூடுதலான மந்திரங்கள் பாவிக்கப்படுவதால் மூர்த்திகரம் அதிகரிக்கும் என்றும், மேலும், மகோற்சவ காலங்களில் சுவாமி வீதியுலா வருவது ஆலய தரிசனம் செய்யாதவர்களுக்கும் அருள்பாலித்தற் பொருட்டென்று கொள்ளப்படுகின்றது. இந்தவகையில் இறையருள் மிகுதியும் பெற வாய்ப்பாக அமைவது மகோற்சவம் எனக்கொண்டு கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய மகோற்சவச் சிறப்புக்களை உள்ளார்ந்து நோக்குவோம்.

கொடிமரமானது, தூபி, விமானத்தின் உயரத்துக்கு சமமாகவோ அல்லது அதன் முதல் மாடத்திற்கு சமமான உயரமாகவோ அமைந்திருக்கும். கொடிமரத்தின் சதுரமான அடிப்பகுதி பிரம்மாவையும், எண்கோண வேதி போன்ற பகுதி விஷ்ணுவையும், உருளை போன்ற நடுத்த உயரமான பகுதி உருத்திரனையும் குறிப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன.

கொடிமரத்தின் மேல் மூன்று குறுக்குத்தண்டுகள் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தியாகவும், இரண்டு குறுக்குத்தண்டுகள் சூரியன், சந்திரனையும் கொடியேறும் கயிறு அனுக்ரக சக்தியாகவும், கொடி வாயுவாகவும் கொடியிலுள்ள மெய்ப்படம் அவ்வக்கோயில் மூலமூர்த்திகளின் சக்தியையும் குறிக்கும். துவஜஸ்தம்பம் சைவாகமங்களில் மூன்று பொருளான பதி, பசு, பாசம் என்பவற்றையும் பசு எவ்வாறு பாசத்திலின்று விலகி இறைவனைப் பற்றிக் கொள்வது என்பதையும் விளக்கி நிற்கின்றது.

கொடியேற்ற முன் காணப்படும் கொடிமரம் பதியாகிய சிவபெருமானையும் கொடிச்சீலை பசுவாகிய ஆன்மாவையும் தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். படைத்தலுக்கு முன் ஆன்மாவும் பாசமும் ஒடுங்கியிருக்க சிவம் மாத்திரம் தோன்றும். இதுவே கொடியேற்ற முன் காணப்படும் தனிக்கொடிமரம் விளக்குவது. படைப்புத் தொழிலுக்கு பின் ஆன்மாவும் பாசமும் தோன்றிச் சிவத்தை ஆதாரமாக பற்றிக் கொள்ளும் கொடிச்சீலையும், கொடிக்கயிறும் இதனைக் குறிக்கும்.

கொடிச்சீலையிலுள்ள மூலமூர்த்தி வாகனம் ஆன்மாவையும், ஆன்மாவை இரட்சிப்பதான அஸ்திரதேவர், கும்பம் முதலான மங்கலப் பொருள்களும் வரையப்பட்டிருக்கும்.

## கொடிச்சீலையும் கொடிமரமும்

கொடியேற்றத்துக்கான கொடிச்சீலையில் அவ்வக் கோவிலின் மூலமூர்த்திக்குரிய வாகனம், பூரணகும்பம், சங்கு, தீபம், அஸ்திரம், பேரி, சூரியசந்திரர், மணி திருவாசி, குடை, கொடி, கண்ணாடி, சாமரை, ஸ்ரீவத்சம், சுவஸ்திகா முதலாக வரையப்பட்டு பூசித்தல் ஆலயங்கள் காட்டிய வழியாகும்.

மேலும் கொடித்தம்பத்திலே காணப்படும் முப்பத்திரண்டு கணுக்கள் மானுட சரீரத்திலேயுள்ள முள்ளந்தண்டில் முப்பத்திரண்டு எலும்புக் கோர்வைகளை குறிப்பதாகவும், கொடிமரத்தை இருதயமாகவும் கொண்டு இதிலே சிவன், சக்தி, லோகபாலகர்கள், மற்றும் தேவர்கள் பூசிக்கப்படுகின்றனர்.

கொடியேற்ற நாளிலே நடைபெறும் இவ்வழிபாடு நல்லபடி நடப்பதன் மூலம் நாட்டிற் தீயன அழியவும், நல்லன நிலைக்கவும், இறையருள் பாலிக்கின்றது என்பதை ஆன்றோர் அறிவுறுத்தியுள்ளனர்.

ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய கொடிச்சீலையில் மயில்வாகனத்தில் முருகனது வேல் அழகாகக் கீறப்பட்டுள்ளது. மேலும் பூரண கும்பம் முதலிய அஷ்ட மங்கலப் பொருட்கள் நேர்த்தியாகக் கீறப்பட்டுள்ளன. கொடிப்படம், தம்பம், அஸ்திரதேவர், மயில், பலிபீடம் ஆகியவற்றிற்கு பிரதிஷ்டையின் பொருட்டு யாகங்கள் செய்து பிரதிஷ்டைகள் செய்தபின் சிவாச்சாரியார் ரக்ஷாபந்தனம் செய்வார். இதனை அடுத்து பேரிதாடனம் எனும் கிரியை கொடியேற்றத்தின் போது தேவர்களை அழைக்கும் பொருட்டு இடம்பெறுகிறது.

கொடியேற்றம் எனும் துவஜாரோகணத்தின் போது உற்சவ மூர்த்தியை உரியவாறு அலங்கரித்து வலமாக கொடிமரத்தின் முன் எழுந்தருளச் செய்தபின் கொடிச்சீலையைக் கோவிலை வலமாகக் கொண்டு வந்து கொடிமரத்திலுள்ள கயிற்றில் பிணைத்து "சமஸ்ததேவதாவாஹனம்" எனும் கிரியை இடம் பெறும். பின்னர் கொடியை சகல மங்கள வாத்தியங்களுடனும் ஏற்றி வலமாகச் சுற்றி தர்ப்பைக் கயிற்றைச் சுற்றியும் பரப்பி இணைத்துக் கட்டி அலங்கரித்த பின்பு சிவாச்சாரியார் இதற்குரிய இராஜோபசாரங்களை நிகழ்த்துவார். அபிடேகம், பலிதானம், தூப தீபம், அர்ச்சனை, மகாசீர்வாதம், உற்சவோருக்குரிய பூசை, பிரமசத்தி முதலிய கிரியைகளை உரியவாறு இவ்வாலயக் குருக்கள், போதகாச்சாரியார், உதவியாளர் சகிதம் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

திக்குகள் அனைத்திலும் அவ்வத்திக்குக்குரியவரை தியானித்து அவரவர்க்குரிய வேதமந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தியம் முதலியவற்றுடன் கூடிய ஆவாகனம் நிகழும். சங்கீதம், நாட்டியம் ஆகிய கிரியைகள் இரண்டும் இங்கு விரிவாக இடம்பெறுகின்றது. மற்றைய ஆலயங்களைப்போலன்றி இங்கு மூலமூர்த்தியின் பூசையைத் தொடர்ந்து வசந்தமண்டபம், கொடித்தம்பப்பூசையும் பின்னரே ஏனைய பூசைகளும் இடம்பெறுகின்றன. பிரமோற்சவகாலங்களில் தினந்தோறும் இருவேளைகளிலும் யாகப்பூசைகளும் துவஜஸ்தம்பத்திற்கு அபிடேகம், பூசை, பலியும், திக்குகளில் பலியும் நிகழ்கின்றன. மற்றும் உற்சவமூர்த்திக்கு விசேட அபிடேகம், பூசை, அலங்காரம், தீபாராதனை முதலியனவும் நிகழும். இதனைத் தொடர்ந்து கொடி, குடை, ஆலவட்டம் முதலிய சகல விருதுகளுடனும் வேதகோஷம், திருமுறைஓதல், திருவுலா, ஈசானமூலையில் யாகத்தில் பூர்ணாகுதியும், ஆராதனையும் நடைபெறும். தொடர்ந்து வைரவர் சண்டேசுவரர் பூசையும் விபூதி பிரசாதமும் வழங்கப்படுகின்றது.

மகோற்சவதினங்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனங்களில் உற்சவமூர்த்தி வீதியுலா வரும் வழக்கம் காணப்படுகிறது. மயில், யானை, விமானம்(பல்லக்கு), வெள்ளிமயில், இடபம், தண்டிகை, குதிரை போன்றவற்றில் வீதியுலா வருவதும் கொடியேற்றத்தின்போது யானையில் பிள்ளையாரும், மயிலில் வள்ளி தேவயானை சமேத முத்துக்குமாரசாமியும் வீதியுலா வருவர். தேர்த் திருவிழாவிற்கு பீடத்திலும் வேட்டைக்கு குதிரை வாகனத்திலும் வருவதைக் காணமுடிகிறது.

<u>வேட்டைத் திருவிழா</u>

மகோற்சவத்தில் ஏழாம் நாள் இடம்பெறும் திருவிழா வேட்டைத்திருவிழா எனப்படும். இவ்விழா மிருகயாத்திரை, சங்கார யாத்திரை என்றும் சிறப்பிக்கப் படுகின்றது. மும்மலங்களில் ஆணவம் பன்றி போன்றது. கன்மம் மான் போன்றது. மாயை பட்சி போன்றது. இவை ஆன்மாவைச் சார்ந்து நின்று வருத்துவன. இதனை அழித்துச் சாயுச்சியத்தைக் கொடுத்தலே இவ்விழாவின் சிறப்பு.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென"

எனச் சிவஞானபோதம் செப்புகின்றது.

இங்கு பாலமுருகனே அலங்கரிக்கப்பட்டு வேட்டைக்குச் செல்லும் பாவனையில் பலானை கண்ணகை அம்மன் ஆலயத்திற்குச் சென்று திரும்பும் வழக்கம் காணப்படுகின்றது. வேட்டையிலிருந்து திரும்பியதும் பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்படும். இவ்வாறாக வேட்டைத்திருவிழா நிகழ்வு இடம்பெறுகிறது.

**சப்பறத்திருவிழா**

எட்டாம் நாள் இடம்பெறும் திருவிழா சப்பறத்திருவிழா ஆகும். இதற்கென சிறப்பாக நியமிக்கப்பட்ட சோடனைக்காரர்களினால் அமைக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் முருகப்பெருமான் எழுந்தருளிச் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று இறைவன் பக்தர்களுக்கு அருள்புரியும் காட்சி அற்புதமாக இருக்கும். இச் சப்பறத்திருவிழாவின் தத்துவம் யாதெனின் மூலவடிவங்களும், முக்கிருத்தியங்களும், மூன்றிடத்துறைதலும் இல்லை என்பதைக் குறிப்பதாகும். மூலவடிவங்கள் என்பது அருவம், உருவம், அருவுருவம் என்பனவாகும். முத்தொழிலென்பது சிருட்டி, திதி, சங்காரம் என்பனவாகும். மூன்றிடத்துறைதலென்பது சாலோகம், சாமீபம், சாரூபம் என்பவற்றைக் குறித்து நிற்கின்றது.

**தேர்த்திருவிழா (இரதோற்சவம்)**

மகோற்சவ உற்சவங்களில் தலையாயது தேர்த்திருவிழா ஆகும். பசுபதியாகிய சிவபெருமான் சூரியசந்திரர்கள், உருளைகளாகவும், மற்றைச் சரம், அசரம் ஆகிய பொருட்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், விட்டுணுவை அம்பாகவும் அக்கினியை அவ்வம்பின் கூர்வாயாகவும் கொண்டு எழுந்தருளிப் பிரமனாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக்கொண்டு செலுத்தத் திரிபுரசுரர்களைத் தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார். இத்தேர்த்திருவிழாவானது திரிபுரசங்காரத்து உண்மைக்காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக நடத்தப்படுகின்றது.

இத்தேர்த்திருவிழா இஸ்ரீ சித்திரவேலவர் ஆலயத்தில் ஒன்பதாம் நாள் வைகாசி விசாக நாளில் வற்றாப்பளைக் கண்ணகையம்மன் பொங்கலன்று இடம் பெறுகின்றது. கவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட தேரானது அறிந்தலைக் குறிப்பது. தேரின் பாகங்கள் பிரபஞ்சத்தோற்றத்தையும், அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. அங்கு இறைவன் வீற்றிருந்ததும் தேர் ஓடுகின்றது. வாழ்க்கைத்தேர் சிறப்பாக ஓடுவதற்கு நமது இருதயபீடத்தில் இறைவனை எப்போதும் எழுந்தருள வைத்திருக்க வேண்டும். தேர் சரியான பாதையில் ஓடுவதற்கிசைவாக சறுக்குக் கட்டைகள் போட்டு அதனைக் கட்டுப் படுத்துவது போல, நமது வாழ்க்கையும் நல்வழிகளில் நெறிப்படுத்த வேண்டும். மேலே கோபுரம் போல் குவிந்து செல்லும் தேர்க்கலசமுடிவில் குடை நிழல் தெரிகிறது. மனம் குவிந்து மேலான சிந்தனைகளுடன் இறைவனைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழல் நமது துன்ப துயரங்களைச் சிதறவைப்பதையும், வியதேங்காய் ஒரு பிரிந்து வெள்ளிற உட்பாகம் வெளிப்படச் செய்து மல நீக்கத்தை உருவகப்படுத்துவதையும் இந்த தேர்த்திருவிழாவில் காணலாம்.[9]

இவ்வாலயத் தேர் நேர்த்தியான முறையில் சிறந்த சிற்பக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டதாகும். இங்கு தேர்த்திருவிழாவில் போது ஒரு ரதமே இழுக்கப் படுகின்றது. இவ்வழகிய தேரில் வள்ளி தேவயானை சமேத ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி வீதிவலம் வருவார். அதிகாலை தொடக்கம் விசேஷ அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மங்களவாத்தியங்கள் முழங்க வள்ளி தேவயானை சமேத ஆறுமுகப்பெருமான் ரதத்தில் ஆரோகணிப்பதற்காக ரதமேறும் காட்சி அனைவரையும் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தும். தேங்காய் சிதறும் ஓசையும் 'முருகா' என்று அழைக்கும் பக்தர்கள் ஒலியும் மெய் சிலிர்க்கவைக்கும் அற்புத நிகழ்வுகளாகும்.

## தீர்த்தோற்சவமும் தீர்த்தத் திருவிழாவும்

தநுகரணபுவனபோகங்கள் நான் எனது என்னும் செருக்கை எழுப்புவன. அவைகளைச் சக்தியால் இடித்துச் சூரணமாக்கி இறைவனிடத்தில் ஒப்பிக்க அவர் திரோபவகிருத்தியம் செய்தருளுவார். அப்பொழுது ஆன்மா இருவகைப்பற்றுமற்று தன் செயலற்றுச் சிவன் செயலாய் நிற்கும்.

"துவொருகரணமாயா புவன போகந்தவிர்க்கும்
புவித நீறாய சுண்ணம் போதகற் களித்திட்டுண்மை
யினி தமர் சிவமதாக்கி"

என உற்சவ விளக்கத்திலும்

"சக்திகளாற்றலுகரண புவன போகங்களை
யத்தனுக்குச் சுண்ணமென யாயிடிக்கக் கழுதலே
யொத்ததிருச் சுண்ணம்"

எனத் திருப்பெருந்துறைப் புராணத்திலும் சூர்ணோற்சவம் பற்றி எடுத்து விளக்கப்படுகின்றது.[10]

வைகாசி பூரணை தினத்தில் இங்கு தீர்த்தோற்சவம் பத்தாம் திருவிழாவாக இடம்பெறுகிறது. மறைத்தலாகிய தொழிலைக் குறிப்பது சூர்ணோற்சவமாகும். ஆன்மாக்களை ஆணவாதி மலங்களில் அழுந்தச் செய்து அநுபவ வாயிலாக இறையுணர்வு பெறச்செய்வதே ஆண்டவனின் அருள் நோக்கம்.

"நல்ல குருநாதன் வருத்துவது கொல்லவல்ல" என்ற ஆன்றோர் வாக்கு நோக்கற்பாலது. துன்பத்தின் பின்னர் தான் இன்பத்தை நன்கு அநுபவிக்கலாம். உடலைப் பற்றியுள்ள அழுக்குகளோடு மன அழுக்குகளான காம, குரோதம் முதலியவற்றையும் நீக்குவதற்கும் அடையாளமாகத் திருப்பொற்சுண்ணம் இடித்து இறைவனுக்கு சாத்தப்படுகின்றது. இறைவனை முழுக்காட்டி நாமும் தீர்த்தமாடுகிறோம். தீர்த்தத்திருவிழா அருளலைக் குறிக்கிறது.

இவ்வாலயத்தில் காலையில் சூர்ணோற்சவம் நடைபெற்று உற்சவமூர்த்திக்கு ஆராதனை இடம்பெற்று தீர்த்தக்கேணியின் அருகே எழுந்தருளச் செய்யப்பட்டு, வேலாயுதத்திற்கே இங்கு தீர்த்த நிகழ்வு செய்யப்படுகிறது.

சுவாமி தீர்த்தமாடிய பின் உள்வீதி வலம் வந்து யாகதரிசனம் செய்வித்துப் பூரணாகுதி வழங்குவர். ரக்ஷை தயாரித்து மூலமூர்த்திகளுக்குச் சாத்துவர். உற்சவமூர்த்தியை வசந்த மண்டபத்தில் எழுந்தருளச்செய்த பின் யாக கும்பங்களை உத்தாபனம் செய்து பிரதானகும்பங்களை எடுத்து மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்வர். அங்குரவிசர்ஜனம் செய்து முளைப்பாலிகைகளைச் சகல மூர்த்திகளுக்கும்

சாத்தி நீராஜனம் செய்வதையடுத்து வழமையான வைரவர் பூஜை, சண்டேஸ்வரர் பூஜைகளுடன் தீர்த்தோற்சவம் நிறைவுபெறும்.

மாலையில் கொடியிறக்க விழா நடைபெறுகிறது. வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரர் வெளிவீதிவலம் வந்து பின் உள்வீதி வலம் வருவார். வீதி வலம் வரும் போது சந்திவிசர்ப்பம் சிறப்பாக நடைபெறும்.

இதன்பின் உள்வீதியில் வலம் வரும் போது கிழக்குக் கோபுரவாசலிலிருந்து தென்கிழக்குவரை மங்கலவாத்தியமும், அங்கிருந்து தெற்கு வாசல் வரை வேத பாராயணமும், மேற்குத் திசைவரை சங்கநாதமும், வடமேற்குவரை தாளவாத்தியமும் (தவில்) வடக்கு வரை கீத இசையும் (நாதஸ்வரம்), இசைத்து வடகிழக்கு வரை மௌனமாகவும் இருந்து வாயில் வரை சகல வாத்திய கோஷங்களுடனும் வந்து இருப்பிடம் சேர்ப்பர். இந்த மௌனோற்சவமானது ஞானநிட்டையை ஆன்மா அடைதல் வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுகிறது.

திருக்கல்யாண உற்சவம்

காலையில் பிராயச்சித்த அபிஷேகத்தோடு பதினோராம் நாள் உற்சவம் ஆரம்பமாகி மாலையில் திருக்கல்யாண உற்சவத்தோடு நிறைவு பெறுகிறது. இந்நாள் உயிர்கள் இன்பரம்பத்தை அநுபவித்து அதன்பயனாக ஏற்படும் கர்மவினைகளை எடுத்தியம்புவதாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இல்லறம் நல்லறமாக இறைபேற்றினை எய்தலே பேரின்பம் எனச் செப்பி நிற்பது இவ்விழா. இந்த வகையில் முறைப்படி திருமணக்கிரியைகள் வள்ளி தேவயானை சமேத முருகப்பெருமானுக்கு இடம் பெறுகின்றன. இவர்களைத் திருவூஞ்சலில் வைத்து ஆட்டுமுகமாக திருவூஞ்சல் பாடும் நிகழ்வும் இடம்பெறும். இத்திருவூஞ்சல் குறித்து நிற்கும் தத்துவமானது, முருகப் பெருமான் திருவருட்சக்திவடிவாயமைந்த ஊஞ்சலின் மீதிருந்தாடுதல் ஆன்மாக்களுடைய குற்றங்களை அனைத்தையும் பிறவித்துன்பங்களைத்தையும் பிறவிக்குக் காரணமாகிய பாசங்களைத்தையும் சேதித்து ஆன்மாக்களை அடிமைகொண்டு திருவருள் வாயிலாகத் தம்முடன் கட்டும் குறிப்பாகும். அத்திருவருளாகிய திருவடியே ஆன்மாக்களுக்கு உறைவிடமாம்.[12] இதனைத் தொடர்ந்து ஆச்சார்ய உற்சவம் நடைபெறும்.

மகோற்சவ காரியங்களைச் செவ்வனே நிறைவேற்றி திருவருட்பேற்றினைத் தந்தருள வகை செய்த சிவாச்சாரியாரை அடியார்கள் யாவரும் வணங்கி ஆசி பெறுவர். இயன்றளவு குருதட்சணை வழங்கி விபூதிப் பிரசாதம் பெற்றுச் செல்வர்.

பன்னிரண்டாம் நாள் உற்சவமானது காவல் தெய்வமாகிய வைரவப் பெருமானுக்கு மடை இடம்பெறுகின்றது. மகோற்சவ காலங்களில் இடையூறின்றிக் காத்ததன் நன்றிக்கடனாக உணவுப்பண்டங்கள் படைக்கப்பட்டு விசேட பூசைகள் இடம்பெறுகின்றன. இந் நிகழ்வுடன் மகோற்சவ பெருவிழா நிகழ்வுகள் பூர்த்தி ஆகின்றன.

<u>மகோற்சவ உட்பொருள் விளக்கம்</u>

மகோற்சவம் உணர்த்தும் உட்பொருட்களாவன;

<u>முதலாம் நாள் திருவிழா</u>: தூலதேகத்தை நீக்குதல்

<u>இரண்டாம் நாள் திருவிழா</u>: தூலம், சூக்குமம் எனும் இருவகை யாக்கைகளையும் நீக்கல்

<u>மூன்றாம் நாள் திருவிழா</u>: மூவினை, முப்புரம், முக்குணம், மும்மலம், முக்குற்றம், முற்பிறப்பு, முப்பற்று நீக்குதல்

<u>நான்காம் நாள் திருவிழா</u>: நாற்கரணம், நால்வகை தோற்றம் நீக்கல்.

<u>ஐந்தாம் நாள் திருவிழா</u>: ஐம்பொறி, பஞ்சஅவத்தை, பஞ்சமலம் நீக்கல்

<u>ஆறாம் நாள் திருவிழா</u>: காமாதி ஆறும், கலையாதி ஆறும், பதமுத்தி ஆறும், வினைக் குற்றம் ஆறும் ஒழித்தல்

<u>ஏழாம் நாள் திருவிழா</u>: எழுவகைப் பிறப்பு, சலயாதிகள் ஏழும், மாயாகுணம் ஏழும் நீக்கல்

<u>எட்டாம் நாள் திருவிழா</u>: தன்வயத்தனாதல், முதலிய கடவுள் குணங்கள் எட்டினையும் விளக்கல்

<u>ஒன்பதாம் நாள் திருவிழா</u>: சகளம், நிட்களம், சகளநிட்களம் எனும் வடிவம் மூன்றும், சிருட்டி முதலிய முத்தொழில்களுக்கும் தலைமை முதலிய மூன்றிடத்து இருத்தலுமாகிய ஒன்பதும் இல்லை என்பதைக் குறிப்பது ஆகும்.

<u>பத்தாம் நாள் திருவிழா</u>: தீர்த்தத்திருவிழா சிவானந்தமாகிய பேரின்பக் கடலில் ஆன்மா திளைப்பதைக் குறிப்பதாகும்.[13]

மகோற்சவம் இவ்வாறான தத்துவங்களை உணர்த்தி நிற்பதனைக் காணலாம்.

### 3.3. <u>காமியக்கிரியை</u>

மாணிடர்களது இயல்பு பலனை அவாவியே எந்த நிகழ்ச்சியையும் நிகழ்த்துவது ஆகும். இந்த வகையில் பலனைக் கருதிச் செய்யப்படும் கிரியைகள் அனைத்தும் காமியக் கிரியைகள் எனப்படுகின்றது. மாறாக பலன் எதனையும் எதிர்பார்க்காமல் கடமை உணர்ச்சியுடன் செய்யப்படுவது நிட்காமிய கிரியை எனப்படுகிறது. பலனை அவாவிக் கிரியைகளை நிகழ்த்தும் பெரும்பாலான மக்களுக்குரியவாறு கிரியைகளை ஆகமங்கள் வகுத்துக்கூறுகின்றன. இதனைக் கிரியை விளக்கங்களின் இறுதியில் அவை தரும் பலன்களை ஆகமங்கள் கூறுவதிலிருந்து அறியலாம்.

குறிக்கோள் ஒன்றை மனதிற் கொண்டு அவை நிறைவேறும்வரை காத்திருந்து அவை நிறைவேறியபின் முன்பே சங்கல்பித்துக்கொண்டவாறு தாம் கருதிய அபிடேகம், திருவிழா முதலியவற்றை நிறைவேற்றும் வழக்கம் நம் நாட்டில் காணப்படுகிறது.[14] அந்த வகையில் கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் இடம்பெறும் காமியக் கிரியைகள் பற்றி ஆராய்வோம்.

இறைவனுக்கு அபிடேகம் செய்து சகஸ்டநாமம் (1008நாமம்) கூறும் நிகழ்வு நேர்த்தியின் பொருட்டு இங்கு நிறைவேற்றப்படுகின்றது. மற்றும் சங்காபிடேகம், பொங்கல் செய்தல், மகேஸ்வரபூசை என்பனவும் இடம்பெறுகின்றன. இவையும் நேர்த்திகள் பொருட்டு செய்யப்படுகின்றன.

முடியிறக்குதல், பால்பழம் பருக்குதல், பிள்ளைவிற்றுவாங்கல், ஏடு தொடக்குதல், துலாவைக்குப் படம் வைத்து எடுத்தல் போன்ற நிகழ்வுகளும் இங்கு இடம்பெறுகின்றன.

ஐப்பசி வெள்ளியில் முன்னைய நாட்களில் காவடி எடுக்கும் நிகழ்வும் கந்தசஷ்டிக்கு தீமிதிக்கும் நிகழ்வும் இடம்பெற்றிருக்கிறது. தற்போது இவை அருகிவிட்டன. திருமணம் கைகூடாத கன்னிப்பெண்கள் நேர்த்தி வைத்து கல்யாணம் நிறைவேறியதும் இவ்வாலயத்தில் திருமணச்சடங்கை நிகழ்த்தும் வழக்கம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

தேர்த்திருவிழாவின்போது கற்பூரச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடிஅழித்தல் என்பனவும் இடம்பெறுகின்றன. இவற்றினைவிட வில்வ அர்ச்சனை, விசேட அபிஷேகங்கள் என்பனவும் இடம்பெறுகின்றன.

இவ்வாறான காமியக்கிரியைகளை இவ்வாலயத்தில் பக்தர்கள் நிகழ்த்தி வருவதனைக் கண்கூடாகக் காணலாம். பெரும்பாலும் மகோற்சவம் தவிர்ந்த ஏனைய கிரியைகள் காமியக் கிரியைகளாகவே அமைகின்றன.

## அடிக்குறிப்புக்கள்

01) அருணாசலம்.கா., சைவசமய சிந்தாமணி, இந்து இளைஞர் மன்றம், மட்டக்களப்பு, இலங்கை, 2ம்பதிப்பு, 1993, ப.66.

02) சைவநெறி, தரம்-10, கல்விவெளியீட்டுத்திணைக்களம், 2000, ப.84.

03) கலைவாணி.இராமநாதன்., சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம், 1997, ப.17.

04) கைலாசநாதக்குருக்கள்.கா., சைவத்திருக்கோயில் கிரியைநெறி, இந்து கலாவிருத்திச்சங்கம், 1963, ப.174.

05) வடிகோவைச் அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில், வெகுதானிய வருடம், விசேட உபயங்கள் உற்சவங்கள், 1998-1999, ப.127.

06) நேர்காணல், பூ.கீதச்சந்திரக்குருக்கள்(ஆலயபிரதமகுரு).

07) தியாகராஜக்குருக்கள்.கு., மகோற்சவச்சிறப்பு, அருள்மிகு செல்லக்கதிர்காம கோவில், நீர்வேலி, 2001, ப.01.

08) வெகுதானியவருடம் விசேட உபயங்கள் உற்சவங்கள், மே.கு.நூல், 1998-1999 ப.01-02.

09) தியாகராஜக்குருக்கள்.கு., மகோற்சவச்சிறப்பு, மே.கு.நூல், 2001, ப. 19-20.

10) குமாரசாமிக்குருக்கள்., மகோற்சவ விளக்கம், திருமயிலை சே.வெ.ஜம்புலிங்கம் பதிப்பித்தது, 1958, ப.118.


11) தியாகராஜக்குருக்கள்.கு., மகோற்சவச்சிறப்பு, மே.கு.நூல், 2001, ப.20

12) குமாரசாமிக்குருக்கள்., மகோற்சவவிளக்கம், 1958, ப.30-31.

13) தியாகராஜக்குருக்கள்.கு., மகோற்சவச்சிறப்பு, மே.கு.நூல், ப.23.

14) கைலாசநாதக்குருக்கள்.கா., சைவத்திருக்கோயில் கிரியை நெறி, மே.கு.நூ, 1963, ப.184.

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய அமைப்பு



## கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி

## ஆலய அமைப்பு

01) கர்ப்பக்கிருகம்
02) அர்த்தமண்டபம்
03) மகாமண்டபம்
04) ஸ்நபனமண்டபம்
05) மயூரம்
06) பலிபீடம்
07) கொடித்தம்பம்
08) ஸ்தம்பமண்டபம்
09) நவக்கிரகம்
10) வசந்தமண்டபம்
11) யாகசாலை
12) வைரவர் சந்நிதி
13) மணிக்கோபுரம்
14) மடப்பள்ளி
15) களஞ்சிய அறை
16) வாகனசாலை
17) விநாயகர் சந்நிதி
18) திருமஞ்சனக் கிணறு
19) கோபுரவாசல்
20) வெளிமண்டபம்
21) காரியாலயம் (பற்றுச்சீட்டு)
22) தேர்மண்டபம்
23) தேரடிவைரவர்
24) தீர்த்தக் கிணறு
25) வெளிப்பாவிப்புக்கிணறு
26) பூஞ்சோலை
27) வெளிப்பிரகாரம்
28) தரிசனமண்டபம்.

# அத்தியாயம் நான்கு

## ஆலய நுண்கலைகளின் வளர்ச்சி

### 4.1 கட்டடக் கலை

தென்னாட்டிலும் ஈழத்திலும் ஆலயத்தை மையமாகக் கொண்டு நுண்கலைகள் வளர்ச்சி பெற்று வந்துள்ளன. ஆலயம் வளர்த்தெடுத்த நுண்கலைகளாக கட்டடம், சிற்பம், ஓவியம், இசை நடனம், அலங்காரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை ஆலயத்தின் அரவணைப்பிலே இன்றுவரை வளர்க்கப்பட்டு வருகின்றன.

இறைவன் சாந்நித்தியம் பெற்று ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு அருள்பாலிக்கும் இடம் ஆலயம். இவ்வாலய அமைப்புப் பற்றி விரிவாக அறிவதற்குரிய நூல் சிவாகமங்களாகும். "அண்டத்தில் உள்ளது பிண்டத்திலுண்டு"[1] என்பது சமய ஞானிகள் கருத்து அண்டம் என்பது பிரபஞ்சம். பிண்டம் என்பது நமதுடல் அண்டத்தில் அமைந்திருப்பவை பிண்டத்திலும் பிண்டத்தில் அமைந்திருப்பவை அண்டத்திலும் அமைந்துள்ளன. இதுவே எமது சமய நற்கொள்கையாகும். இந்தவகையில் அண்டத்தில் இறைவன் அமைந்துள்ள கருத்தை பிண்டத்தைக் கோயிலாக அமைத்து விளக்கப்படுகிறது.

"எண்டரும் பூதமைந்தும் எய்திய நாடிமூன்றும்
மண்டலம் மூன்றுமாகி மன்னிய புணர்ப்பினாலே
பிண்டமும் அண்டமாகும் பிரமனோடைவராகக்
கண்டவர் நின்றவாறு இரண்டிலும் காணலாமே"[2]

என ஞானாசிரியார் கூறுகின்றார். இதனையே திருமூலர்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளா மணி விளக்கே"[3]

எனத் தெரிவிக்கின்றார். ஒரு மனிதன் கிடந்த கோலத்தில் ஆலய அங்கங்கள் அமைகின்றன. கருவறை சிரசினையும், அர்த்த மண்டபம் கழுத்தினையும், மகா மண்டபம் மார்பினையும் தரிசன மண்டபம் வயிற்றினையும் அடுத்த அமையும் மண்டபங்கால்களையும், கோபுரம் பாதத்தினையும் குறிக்கும். இந்தவகையில், கோப்பாய் ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் கட்டடக் கலையமைப்பை உள்ளார்ந்து நோக்குவோம்.

திருக்கோயில் வழிபாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன சிறந்து விளங்குகின்றன. இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் வேலாயுதம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் மாமரம் என்பன தலவிருட்சங்களாகவும், கிணற்று நீரைத் தீர்த்தமாகவும் கொண்டு இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

கோயில் கட்டட வகைகளை மூன்று பிரிவாக வகுப்பர். அப்பிரிவுகள் நாகரம், வேசரம், திராவிடம் என்பனவாகும். நாகரம் என்னும் பிரிவைச் சார்ந்த கோயில்கள் வட இந்தியாவிலுள்ளன. இக்கோயில் அமைப்பு அடியிருந்து உச்சிவரை சதுரமாக அமையும். வேசர இனத்தைச்சேர்ந்த கோயில்கள் தென்னிந்தியாவில் பெருகக் காணப்படுகின்றன.[4] இக்கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலய அமைப்பு திராவிடம் எனும் கட்டட அமைப்பைச் சார்கின்றது.

## கருவறை:

இவ் ஆலயத்தின் முகப்புத் தோற்றம் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இரண்டு திருச்சுற்றுக்களை உடையதாகக் காணப்படுகின்றது. ஆலய அமைப்பு வெளியே அகன்ற பெரிய மண்டபமாய் அமைந்து உள்ளே போகப் போகச் சிறுத்த ஒடுங்கி மூலஸ்தானத்தில் குவிகிறது. இவ்வாலயம் 1897ம் ஆண்டில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டது.[5] கர்ப்பக்கிரகம் 16 அடி 8 அங்குல நீளமும் 11 அடி 4 அங்குல அகலமும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இக் கர்ப்பக்கிரகத்தில் வேலாயுதமே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

கருவறையின் வடக்குப் பக்கச் சுவரில் கோமுகி அமைந்துள்ளது. கருவறையின் மேலே விமானம் பல சிற்பங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

## அர்த்தமண்டபமும் மகாமண்டபமும்

கருவறையின் முன்னே அர்த்தமண்டபம் காணப்படுகின்றது. அர்த்த மண்டபத்தின் முன்னே மகாமண்டபம் காணப்படுகின்றது. இது 19 அடி 6 அங்குல நீளமும் 24 அடி அகலமும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இம்மண்டபத்தில் தெற்கு நோக்கிய வாயிலும் காணப்படுகின்றது. இங்கு கிழக்கு நோக்கியவாறு இடப்புறம் பிள்ளையாரும், வலப்புறம் வள்ளி, தெய்வயானை சமேத முத்துக் குமாரசுவாமியும், காணப்படுகின்றனர். முன்மண்டபத்தின் வடபுறத்தில் தெற்கு நோக்கியவாறு ஆறுமுகசுவாமி வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார். இவர்களுக்கு வலப்புறமாக பாலசுப்ரமணியர் காணப்படுகின்றார். இவர்களுடன் நடராஜரது திருவுருவமும், சிந்நாளவேலவர் திருவுருவமும், துர்க்கை அம்பாளின் திருவுருவமும் வைக்கப்பட்டுள்ளன.

## ஸ்நபன மண்டபம்

மகாமண்டபத்தின் முன்னே ஸ்நபன மண்டபம் காணப்படுகின்றது. இது 24 அடி நீளமும் 20 அடி 4 அங்குல அகலமும் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது. இங்குதான் அபிஷேகத்திற்கான கும்பங்கள் வைக்கப்படுவதோடு அக்கினியும் வளர்க்கப்படும்.

## ஸ்தம்ப மண்டபம்

மேலும் ஸ்நபன மண்டபத்தின் முன் ஸ்தம்ப மண்டபம் காணப்படுகிறது 2 அடி 6.5 அங்குல சதுர அமைப்பான பீடத்தில் ஸ்தம்பம் காணப்படுகிறது. இத் தம்பம் எவர்சில்வரால் பிளேட் செய்யப்பட்டுள்ளது. மற்றும் இங்கு பலிபீடம், மயூரம் என்பன தனித்தனி பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தம்பத்திற்கு முன் புறமாக சிறிய விநாயகர் திருவுருவம் சிறு மாடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தம்பப்பிள்ளையார் என்றும் அழைப்பர். ஸ்தம்ப மண்டபம் 36 அடி 8 அங்குல நீளமும் 21 அடி 1 அங்குல அகலமும்கொண்டதாகும்.

கொடித் தம்பத்தின் வடமேற்கு மூலையில் நவக்கிரகங்கள் காணப் படுகின்றன. இவை வைப்பதற்கென அமைக்கப்பட்ட மண்டபம் 8 அடி 2 அங்குல நீளமும் 8 அடி 2 அங்குல அகலமுடைய சதுர அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்வீதி 146 அடி நீளமும் 74 அடி 3 அங்குல அகலமும் உடையது. இதனை 7 அடி 3 அங்குல விட்டமுடைய 8 பெரிய தூண்களும் 5 அடி விட்டமுள்ள தூண் களும் வேறான சிறிய தூண்களுமாக 77 தூண்கள் தாங்கி நிற்கின்றன.

உள்வீதியில் தென்மேற்கு மூலையில் பரிவார தெய்வமாகிய விநாயகர் வீற்றிருக்கின்றார். 8 அடி நீள, அகலங்களையும் கொண்ட சதுர வடிவான கட்டடத்தில் கருங்கல்லால் இவர் அமைக்கப்பட்டுள்ளார்.

கிழக்குப்புறத்தில் மேற்குநோக்கியவாறு யாகசாலை காணப்படுகிறது. 14 அடி நீளமும் 9 அடி அகலமும் கொண்ட கட்டடத்தில் யாகசாலை அமைந்துள்ளது. இதற்கு அருகே 7 அடி 1 அங்குல நீளமும் 4 அடி 8 அங்குல அகலமும் கொண்டகட்டடத்தில் வைரவர் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதற்கு அருகில் 7 அடி 3 அங்குல நீளமும், 6 அடி 1 அங்குல அகலமும் கொண்ட மணிக்கூட்டுக் கோபுரம் காணப்படுகின்றது. இது இரு தளங்களையுடையதாகக் காணப்படுகின்றது.

கருவறைக்கு வடக்குப் புறம் திருமஞ்சனக் கிணறு காணப்படுகின்றது. இத் திருமஞ்சனக்கிணறு கூபம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதன் மூலம் பெறப் படும் நீர் அபிஷேகத்திற்கும், இறைவனுக்குரிய நைவேத்தியத்திற்கும் பயன்படுத் தப்படுகிறது. சற்சதுர வடிவில் 7 அடி நீள அகலங்களைக் கொண்டதாக இக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. உள்வீதியின் தென்புறம் களஞ்சிய அறை, வாகனசாலை என்பனவும்காணப்படுகின்றன.

ஈசான மூலையில் 22 அடி நீளமும் 21 அடி அகலமும் உடைய அழகிய வசந்தமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இது தெற்கு நோக்கியவாறு காணப்படுகின்றது.

## கோபுரம்

அடுத்து 48 அடி 10 அங்குல நீளமும், 43 அடி அகலமும் உடைய கோபுர மண்டபம் காணப்படுகின்றது. இம் மண்டபத்தைத் தாங்கி 8 பெரிய தூண்களும் 7 சிறிய தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன. பெரிய தூண்களின் விட்டம் 8 அடி 8 அங்குலமாகும். இவ்வாலயத்தில் இராஜகோபுரம் அமைக்கப் படவில்லை. கோப்பாய்ப் பகுதியில் உள்ள எந்த ஒரு ஆலயத்திற்கும் இராஜ

கோபுரம் அமைக்கப்படாதது கவலைக்குரியதாகவே காணப்படுகின்றது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கிணங்க காலச்சுழற்சியில் இராஜகோபுரங்கள் அமைக்கப்படுமென நம்புகின்றோம். கோபுர மண்டபத்துடன் இணைந்ததாக தெற்குப் புறத்தில் உற்சவ காலங்களில் அர்ச்சனைக்கான பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சிறுமண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்முட்டி அழகாக அமைக்கப்பட்டுள்ளது. 1965ல் இத்தேர்முட்டி கட்டப்பட்டதாகும். இது 25 அடி நீளமும் 20 அடி 8 அங்குல அகலமும் உடையதாகக் காணப்படுகின்றது. இதற்கு வடபுறத்தில் கிழக்குநோக்கியவாறு தேரடி வைரவருக்கு சிறுகோயில் அமைக்கப்பட்டுள்ளது. இவருக்கு ஷேத்திர பாலகர் எனும் பெயர் உண்டு.[6] பக்தர்களின் பாவிப்புக்கென கிணறு ஒன்றும் ஆலயத்திற்குத் தெற்குப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நந்தவனம் மேற்குப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில் வடபுறத்தில் சகடை நிறுத்தி வைப்பதற்கான வெளியான மண்டபம் ஒன்றும் காணப்படுகின்றது,

இவ்வாறாக கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் திட்டமிட்ட கட்டட அமைப்புக்கள் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பான ஒரு அம்சமாகும்.

## 4. 2 சிற்பக்கலை

இந்துக்கள் காலங்காலமாக வளர்ந்துவரும் கலைகளின் உறைவிடமாக விளங்குபவை ஆலயங்கள். இக்கலைகளே தெய்வீக உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்தவகையில் சிற்பக்கலையும் சிறப்பிடம் பெற்றதாக விளங்குகின்றது. சிவாகம வழிபாடு திருவுருவத்தை அடிப்படையாக கொண்டு திகழ்கின்றது. இவ்வுருவங்கள் கல், மண், மரம், சாந்து, உலோகங்கள் என்பன மூலப்பொருட்களினால் செய்யப்பட்டுச் சிறப்பிக்கப்படுகின்றன. இந்தவகையில் கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் காணப்படும் சிற்பக்கலை அம்சங்களை உள்ளார்ந்து நோக்குவோம்.

**பஞ்சலோக மூர்த்தி:**

இவ்வாலயத்தில் மூலவராக வேல் காணப்படுகின்றது. இது பஞ்ச லோகத்தால் செய்யப்பட்டதாகும். மற்றும் இங்கு காணப்படும் எழுந்தருளிப் பிள்ளையார், உற்சவ மூர்த்தி முத்துக்குமார சுவாமிசமேத வள்ளி தெய்வயானை, சண்டேஸ்வரர் எழுந்தருளியான வள்ளி தெய்வ யானை சமேதஆறுமுக சுவாமி பாலசுப்பிரமணியர் போன்ற முருகப் பெருமானின் பல்வேறு திருவுருவங்களும் நடராஜர், சிவகாமி அம்பாள் திருவுருவங்களும் உலோகத்தால் செய்யப்பட்ட விக்கிரகங்களாகும்.

மூலஸ்தான வேல் 11 அங்குல உயரமுடையது. நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டதாகும். இவ்வழகிய வேலாயுதமும் திருவாசியின் பொலிவும் இறை உணர்வில் மனதைச் சாந்தியும் கொள்ள வைத்து அமைதியைத் தோற்றுவிக்கும் தன்மை வாய்ந்தது. மகாமண்டபத்தில் உற்சவமூர்த்தியாக காணப்படும் விநாயகர் திருவுருவம் 1 அடி 2 அங்குல உயரமுடையதாகக் காணப் படுகின்றது. வேழமுகமும், கரங்களின் அமைப்பும் துல்லியமாக அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் வள்ளி தெய்வயானை சமேத முத்துக்குமாரர் திருவுருவங்கள் அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. 1 அடி 7 அங்குல உயரம் கொண்ட முத்துக்குமாரரும் 1 அடி 3 அங்குல உயரம் கொண்ட வள்ளி, தெய்வானை திருவுருவங்களும் உற்சவ மூர்த்தியாகக் காணப்படுகின்றன. இவற்றின் கை அசைவும் முகத்தின்எழிலமைப்பும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றோடு உலோகத்தாலான 11 அங்குல உயரமுடைய அழகிய சண்டேஸ்வரர் காணப்படுகின்றார். உற்சவ மூர்த்தியானது இராமகிருஷ்ண ஸ்தபதியால் செய்யப்பட்டதாகும்.

மகா மண்டபத்தில் தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ள ஆறுமுக சுவாமியின் உலோகவிக்கிரகம் மிக்க அழகுடையது. ஆயுதங்களினதும், அங்கங் களின் துல்லியமான அமைப்பும், அதன் அழகும் குறிப்பிடத்தக்கன. வெள்ளியிலான

வேலைப்பாடுகளைக் கொண்ட ஆறு திருமுடியும் உச்சியில் ஒருங்கிணைந்துள்ள ஒழுங் கமைப்பும், பன்னிரு திருக்கரமும், அவை ஏந்தியுள்ள ஆயுதங்களும் ஒளிவீசும் வேலாயுதமும் குறிப்பிடத்தக்கவை. 1 அடி 7 அங்குல உயரமுடையதாக ஆறுமுக சுவாமியின் திருவுருவமும் 1 அடி 3 அங்குல உயரமுடைய ஒரே அளவிலான வள்ளி தெய்வானை உருவங்களும் காணப்படுகின்றன. இவற்றின் கையமைப்பும், முகத்தின் எழிலமைப்பும் சிறப்பாகச் சிங்காரிக்கப்பட்டுள்ளன. இத் திருவுருவங்கள் கோண்டாவிலைச் சேர்ந்த சோமசுந்தர ஸ்தபதியால் செய்யப்பட்டது. இவற்றுடன் நடராஜர், [illegible] அம்மாள், பால சுப்ரமணியர் திருவுருவங்களும் காணப்படு கின்றன. இவையும் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

**கருங்கல் விக்கிரகங்கள்**

மேலும் பரிவார மூர்த்தங்கள் யாவும் கருங்கல்லால் ஆனவை. பிரகாரத்தில் காணப்படும் பிள்ளையார் 1 அடி உயரமுடையது. இதனுடைய தும்பிக்கை சிறந்த சிற்ப வேலைப்பாட்டோடு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழகிய விநாயகர் விக்கிரகம் சீனிவாசகம் ஸ்தபதியால் செய்யப்பட்டதாகும். இவர் சிறந்த ஒரு சிற்பக் கலைஞன் ஆவார்.

நவக்கிரக கோயிலில் காணப்படும் நவக்கிரகங்களின் திருவுருவங்கள் சிறப்பான முறையில் அழகு பொலிய . . அமைக்கப்பட்டுள்ளன. இவை தனித் தனிப் பீடங்களில் காணப்படுகின்றன. இதன் விமானம் சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றது.

மேலும் 1 அடி 5 அங்குலமுடைய கருங்கல்லால் செய்யப்பட்ட வைரவர் விக்கிரகம் வைரவர் சந்நிதியில் காணப்படுகின்றது. இதன் பீடம் எவர்சில்வரினால் பிளேட் செய்யப்பட்டுள்ளது. அதிலே நாயினது உருவம் பொறிக் கப்பட்டுள்ளது. வைரவர் சிற்பத்தின் நிற்கை நிலையும் வாகனத்தின் தெளிவான உருவ அமைப்பும் சிறப்பாக அமைந்துள்ளது.

தம்ப மண்டபத்தில் காணப்படும் பலிபீடம், மயில் என்பனவும் கருங்கல்லாலேயே ஆனவை. பலிபீடம் 6 அடி 3 அங்குல நீளமும் 3 அடி அகலமும் கொண்டதாகக் காணப்படுகின்றது. 1 அடி 6 அங்குல நீளமும் 1 அடி உயரமும் கொண்ட மயூரம் அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தோகையின் நீண்ட செதுக்கமும் கால் அமைப்பும் சிறப்பாக அமைந்துள்ளது. மயூரத்தின் நேர்த்தியான முக அமைப்பும் அதன் அழகிய உடல் அமைப்பும் உண்மையான மயூரத்தின் தோற்றத்தைக் கண்முன் நிறுத்துகிறது. இவ்வாறு கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் பரிவார தெய்வங்கள் யாவும் சிறப்பாகத் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன.

## விமானச் சிற்பங்கள்

அடுத்து சாந்நியாலய சிற்பங்களை நோக்கின் இருதளமான அமைப்பினைக் கொண்ட விமானத்தின் கீழ் தளத்தில் முருகனுடன் தொடர்பான தெய்வீக வரலாற்றுக் கதைகள் அழகிய சிற்பங்களால் சித்தரிக்கப்பட்டுள்ளது. விமானத்தின் கிழக்குப் பக்கத்தில் பிள்ளையார் திருவுருவமும், தெய்வானையை முருகன் மணம் புரியும் காட்சியும், தெற்குப் பக்கத்தில் சிவபெருமானுக்கு முருகன் பிரணவ உபதேசம் செய்த குமரகுருபரர் காட்சியும் மேற்குப் பக்கத்தில் அகத்தியர் நாரதர் முதலிய முனிவர்கள் சகிதமாக பழனியாண்டியின் தோற்றமும் வடக்குப் பக்கத்தில் முருகன் பிரமனைக் குட்டிச் சிறையிட்ட காட்சியும் சிற்பங்களாக வடிக்கப்பட்டு வர்ணங்கள் தீட்டப்பட்டு அழகு பொலியக் காட்சி தருகின்றது. விமானத்தின் மேல் அடுக்கை தேவர்கள் தாங்கி நிற்பது போலவும் நான்கு திசைகளிலும் அசுரர்கள் காவல் நிற்பதாகவும், முருகப்பெருமானின் மயில்வாகனங்களும் காணப்படுகின்றன. இவற்றுடன் சிறுமாடங்களும் காணப்படுகின்றன. விமானத்தின் உச்சியில் அழகிய கலசமொன்று பொருத்தப்பட்டுள்ளது. நான்கு பக்கங்களிலும் முருகனின் வெவ்வேறு தோற்றப் பொலிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விமானச் சிற்பங்கள் யாவும் அராலியூர் தம்பிராசா குழுவினரால் அமைக்கப்பட்டவையாகும்.

ஆறுமுக சுவாமி சந்நிதியின் மேல் பகுதியில் வள்ளி, தெய்வானை சமேதிராக ஆறுமுக சுவாமி காணப்படுகின்றார். முருகப் பெருமாளின் கரங்களில் வேல், வெற்றிக்கொடி என்பன அலக்கமாகக் காணப்படுகின்றன. நான்கு திசைகளிலும் அசுரர்கள் காவல் செய்வதாகவும், மயில் வாகனமும் பொறிக்கப்பட்டுள்ளன.

வசந்த மண்டப மேல் பகுதியில் பீடத்தின்மீது வள்ளி தெய்வயானையுடன் முருகப்பெருமான் வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளார். மற்றும் மயில் வாகனங்களும், குண்டோதரியுடன் அசுரர்கள் காவல் செய்வதான காட்சிகளும் இடம்பெற்றுள்ளன. இங்கு காணப்படும் சிற்பங்கள் யாவும் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. உச்சியில் ஆறு கலசங்கள் உள்ளன. வசந்த மண்டப வாயிலின் மேற்புறத்தில் சோமாஸ்கந்த மூர்த்தத்துடன் சிற்பமொன்று காணப்படுகின்றது. வாயிலின் இருபுறமும் அழகிய துவாரபாலகர்கள் காணப்படுகின்றனர். இதனது உயரம் 5 அடி 8 அங்குலம் ஆகும்.

<u>பரிவார மூர்த்த சிற்பங்கள்:</u>

பரிவார தெய்வமாக வீற்றிருக்கும் விநாயகர் கோயிலின்மேல் அழகிய விநாயகர் சிற்பம் காணப்படுகிறது. இருக்கை நிலையில் அங்குச பாசமேந்தி பெருத்த செவியுடனும், பேழை வயிறுடனும் காணப்படும் இவ்வுருவம் அழகாக உருவாக்கப்பட்டுள்ளது. 4 நான்கு மூலைகளிலும் விநாயகரின் வாகனமாகிய மூஷிகம் காணப்படுகின்றன.

மேலும் வைரவர் கோயிலுக்கு மேல் வைரவரின் சந்நிதியாலமைந்த சிற்பம் காணப்படுகிறது. நாய் வாகனத்தில் நான்கு கைகளுடன் வைரவரின் அழகிய சிற்பம் சூலாயுதத்துடன் காணப்படுகின்றது. வைரவப் பெருமானின் இருபுறமும் நாய்வாகனம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் சாந்தி வாளானவையாகக் காணப்படுகின்றன. மற்றும் வானுற உயர்ந்து காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் மேற்பகுதியில் முருகன் திருவுருவங்களும் அவரது வாகனமாகிய மயிலும் அமைக்கப்பட்டுள்ளது.

<u>வாகனச் சிற்பங்கள்:</u>

கோவில்களில் இடம்பெறும் தேர்களும் வாகனங்களும் சிற்பக் கலை நுட்பத்தினைப் புலப்படுத்துவதாக உள்ளன. ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயி லின் தேர், யாழ்ப்பாணத்தில் உள்ள சிறப்பும் அமைப்பும் மிக்க தேர்களில் ஒன்றாகும். இச்சித்திரத் தேரில் கந்தபுராணக் காட்சிகள் பலவும் சிலாவடிவத்தில் செதுக்கப் பட்டுள்ளமை இத்தேரின் சிறப்புக்களில் ஒன்றாகும். கண்ணைக் கவரும் வேலைப் பாடுகளுடன் இத்தேர் அமைந்திருப்பது பார்ப்போர் மனதை வியக்க வைக்கும். எண்கோண அமைப்பில் இத்தேர் நுட்பமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேரின் அடிப்பாகத்தில் முனிவர்கள் தவம் புரியும் காட்சியும், முருகனின் வாகன மாகிய மயிலும், குதிரைகளும் தேரைத் தாங்குவது போன்ற காட்சிகளும் அமைக்கப் பட்டுள்ளது. தேரின் மேல் அடுக்கில் கலைநயம் உள்ள வேலைப்பாடுகள், யாழி யின் தோற்றம், குதிரைகள் அதனைச் செலுத்தும் தோற்றம் ஆகியன நேர்த்தியாக அமைந்து விளங்குகின்றன. இவ் ரதம் ஆறுமுகம், மற்றும் சிவராத்தினம் குழுவினரால் அமைக்கப்பட்டதாகும்.

அடுத்து மரச்சிற்பத்திற்கு எடுத்துக்காட்டாக கேடகத்தையும் (பல்லக்கு) குறிப்பிடலாம். சுவாமி வீதிவலம் வருவதற்காக இது பயன்படுத்தப் படுகிறது. பல நுட்பவேலைப்பாடு கொண்டதாகவும், நான்கு மூலைகளிலும் யாழிகள் அமைந்து கேடகத்தை இவை தாங்கி நிற்பது போல அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தில் உற்சவமூர்த்திகளுக்கான வாகனங்களும் காணப்படு கின்றன. இறைவன் திருவுலாவருவதற்காக ஐந்து மயில்களும் மற்றும் ஒரு சோடி மயிலும் காணப்படுகின்றன. இவை வெள்ளி, சீமெந்து, சுதை போன்ற கலவை களால் அமைக்கப்பட்டவை. பறக்கும் மயில் 4 அடி 4 அங்குல உயரமும், 6 அடி 6 அங்குல நீளமும் உடையதாகும். வெள்ளியிலான மயில் 4அடி உயரமும் 3 அடி 10 அங்குல நீளமும் உடையதாகக் காணப்படுகின்றது. இவற்றுடன் யானை, குதிரை, கடா, புருஷாமிருகம் (?) ... 

இவற்றினை விட இக்கோயிலில் விளங்கும் சூரன் உயிர்த்துடிப்புள்ளதாகக் காணப்படுகிறது. இச்சூரன்போன்று யாழ்ப்பாணத்தில் காண்பது அரிது. நேரடியாக முருகப்பெருமானுடன் சண்டையிடுவது போல உயிர்த்துடிப்புடன் சூரன் போர் நிகழ்வு இடம்பெறும். இதற்கு இச்சூரன் செய்யப்பட்ட கலை நுட்பமே காரணமாகும். மற்றும் வீரவாகுதேவரின் அழகிய திருவுருவமும் காணப்படுகின்றது.

இவ்வாறு கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் உலோகத்தாலான, கருங்கல்லாலான, சர்ந்தாலான, மரத்தாலான சிற்பங்கள் பல காணப்படுகின்றன. இவை அனைத்தும் கைதேர்ந்த சிற்ப வல்லுனர்களால் செய்யப்பட்டவை. என்பதை இவ்வுருவங்களின் எழிலார்ந்த அமைப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## 4.3 ஓவியக் கலை:

ஓவியக் கலையும் ஓர் அழகுக் கலையாகும். இஃதில் காண்பவற்றை வர்ணங்களாலும், ரேகைகளாலும், கோடுகளாலும் ஏதோவொரு தளத்தின் மேல் (சுவர், துணிகள்) தூரிகை (எழுதுகோல்) கொண்டு வடிவமைப்பதாகும். ஓவியக்கலைக்குள் இயற்கை, செயற்கைக் கலைகள் அடங்கியிருக்கின்றன. தேவலோகப் பெண்கள், தெய்வங்கள், மனிதர்கள், விலங்குகள், அம்பு, வில் போன்ற கருவி வகைகள் என்றெல்லாம் கண்காணுகின்றதும், காணாததுமான கற்பனைகள் யாவும் இடம்பெறுகின்றன. இந்தவகையில் கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் காணப்படும் ஓவியக்கலை பற்றி சுருக்கமாக ஆராய்வோம்.

### முருகப்பெருமான் ஓவியம்

ஆலய முகப்பிலே மயில்வாகனத்துடன் முருகப்பெருமானின் ஓவியம் ஓம் எனும் மந்திர எழுத்தின் அடக்கமாக மிகவும் அழகாக வரையப்பட்டு வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ் ஓவியத்தின் மேற்புறத்தில் " யாம் இருக்கப் பயமேன் "

எனும் வாசகம் எழுதப்பட்டுள்ளது. இயற்கையான சூழ்நிலையில் முருகப் பெருமான் அருட்காட்சி கொடுக்கும் வகையில் இவ் ஓவியம் வரையப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

துவாரபாலகர் ஓவியம்:

அடுத்த உள் மண்டபத்தில் நுழைவாயிலின் இருமருங்கிலும் துவாரபாலகரின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவர்களின் பின்புறம் சிங்க உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இம் மண்டபத்தில் ஆறுபடை வீடுகள் வரைவதற்கும், தேவார திருப்பதிகங்கள் எழுதுவதற்குமான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

லக்ஷ்மி ஓவியம்

வசந்த மண்டபமுகப்பிலே இறைதிருவுருவங்கள் அழகாக வரையப்பட்டு ஓவியம் தீட்டப்பட்டுள்ளன. முகப்பின் உச்சியில் லக்ஷ்மி செந்தாமரையில் வீற்றிருப்பதும், அவரின் இரு புறத்திலும் தாமரைமீது யானைகள் நின்று லக்ஷ்மியை ஆசீர்வதிப்பது போலவும் வரையப்பட்டுள்ளன. மற்றும் லக்ஷ்மிக்கு இருபுறமும் சாமரை வீசும் அழகிய இரண்டு பறக்கும் பதுமைகள் காணப்படுகின்றன. முகப்பின் கீழ்ப்பக்கத்தில் இடமிருந்து வலமாக நோக்கின் முதலில் மூஷிகத்தில் அழகிய பிள்ளையார் வடிவமும் அடுத்த பிரம்மாவும், நடுவிலே வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமானும், அடுத்த விஷ்ணுவும் இறுதியாக இடப வாகனத்தில் சிவபிரானின் மடிமீது உமையம்மை அமர்ந்திருக்கும் அழகிய திருக்கோலமும் ஓவியமாகக் காணப்படுகின்றது. பிள்ளையார், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், சிவபிரானும், உமையம்மையும் அமைக்கப்பட்ட ஓவியங்களின் பின்புறத்தில் திருவாசிகள் அழகாக வரையப்பட்டுள்ளன. இவற்றினை உபயமாக அளித்தவர் கதிரேசு கனகராசா என்பவராவார். இவற்றினை ஓவியமாக 1970 மற்றும் 1986களில் வரைந்தவர் ம. கெங்காதரன் என்பவராவார்.

### திரைச்சீலை ஓவியம்

வசந்தமண்டப வாயிலை மறைக்கும் முகமாக அமைக்கப்பட்ட திரைச்சீலையில் முருகப்பெருமானின் ஓவியம் காணப்படுகிறது. இதனை உபயமாக வழங்கியவர் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த வ. தவராசலிங்கம் என்பவராவார். இவ்வாறான ஓவியங்கள் பல காணப்பட்டாலும், ஆலய உள் மண்டபச் சுவர்கள் வெற்றிடமாகவே காணப்படுகின்றன. இவற்றிலே முருகப்பெருமானின் புராணக் கதைகள் தழுவிய ஓவியங்களை வரைந்து சமய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பது ஆலய பரிபாலன சபையினதும், அடியவர்களதும் கடமை. எனவே காலப்போக்கில் இவற்றை நிவர்த்தி செய்வார்களென நம்புகின்றோம். இவ்வாறாக கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தில் ஓவியக்கலை இடம் பெற்றிருக்கின்றது.

## 4.4 இசைக்கலையும் நடனக்கலையும்

எல்லாம் வல்லவனாகி, எங்கும் நிறைந்தவனாகி, சர்வலோக ஈஸ்வரனாகி விளங்குகின்ற எம்பெருமானிடம் பக்தி கொண்டாடச் சுலபமான வழி இசைபாடி வழிபாடியற்றுவதாகும் என்பர். அவனருளாலே அவன்தாள் வணங்கி, அவனருள் பெற்ற அருளாளர்கள். ஆலயங்களில் பண்ணோடு பதிகம் பாடுதல் இறைவனை இசைவிப்பதற்காகவாகும். சைவசமயத்தின் கண்களெனத் திகழ்கின்ற தேவாரப் பண்கள் எம்மை இறைவனுடன் இசையவைக்கவல்லதொன்றாகும்.

### பண்ணிசை பஜனை நிகழ்வுகள்.

தேவாரம் என்றால் இறைவனுக்கு அளிக்கின்ற பாமாலை எனவும், இறைவனிடத்து அன்பை விளைவிப்பது எனவும், இறைவனிடத்து அன்பையும், பக்தியையும் ஏற்படுத்துவது எனவும் ஆன்றோர் பலவாறாகக் கூறுவர். ஓதுகின்றவர் அக இருளைப் போக்கி மெஞ்ஞானத்தை அளிக்கவல்ல ஞானவிளக்காகத் திகழ்வது தேவாரம் எனின் அது மிகையாகாது.[7] கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி

ஆலயத்தில் பண்ணோடு பதிகம்பாடும் மரபு காணப்படுகின்றது. வெள்ளிக்கிழமைகளிலும் விசேட உற்சவ தினங்களிலும் பஞ்ச புராணமோதும் மரபும் காணப்படுகின்றது. பஜனை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

"இசையால் வசமாகா இதயமேது" என்பதற்கு இலங்க இறைவனும் இசைவடிவமாக இருக்கின்றான். இசைப் பிரியனான இவனை வாழ்த்தி வழிபட ஏற்றது இசையே. இதனை நோக்கிக் கொண்டு விசேட தினங்களிலும், திருவிழாக் காலங்களிலும் வாத்தியக் கலைஞர்கள் அழைக்கப்பட்டு இசை நிகழ்வுகள் இவ்வாலயத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தவில், நாதஸ்வரத்தில் வல்ல கலைஞர்களை அழைத்து இசைக்கச்சேரிகள் இடம்பெறுகின்றன. மலரினாலும், இலையினாலும் மானசிகமாக இறைவனை வழிபடுதல் போன்று இசையினாலும், நடனத்தினாலும் வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது

"ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே"

என நாயன்மார் நன்கு வலியுறுத்தியுள்ளனர்.

<u>புராணபடன நிகழ்வுகள்</u>

புராண படனம் இங்கு காலங்காலமாக இடம்பெறுவது சிறப்பான விடயமாகும். ஐப்பசி மாதத்தில் வரும் கந்தசஷ்டிக்காலங்களில்போது கந்தபுராண படனம் சிறப்பாக இடம் பெறுகிறது. இது தவிர திருவெம்பாவைக் காலங்களின் போது மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடல்கள் மற்றும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களும், நவராத்திரியின்போது அபிராமியந்தாதிப் பாடல்களும், திருக்கல்யாண உற்சவத்தின் போது ஆலய திருஊஞ்சல் பாடல்களும் இசைக்கப்படுகின்றன.

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி மணிக்கோபுரமணி அதிகாலையில் மக்களைத் துயிலெழுப்புகிறது. இக்கோபுர மணியைப் பூசைக்கு முன் ஒலிக்கச் செய்கிறார்கள். பூசையின்போது கைமணி, சொர்ணமணி, சங்கு, சேமக்கலம் என்பவற்றின் ஓசையும், மங்களவாத்தியங்களின் ஓசையும் உள்ளத்தைப் பரவசப்படுத்தி ஐம்புலன்களையும் ஒருநிலைப்படுத்தி இறைவனின் திருக்கோலத்தில் சாந்நித்தியம் கொள்ளச் செய்கிறது. இங்கு மகோற்சவப் பெருவிழாவின் மூன்றாம் திருவிழா அன்று மிருதங்க இசை நிகழ்வு இடம்பெறுகின்றது. சுவாமி எழுந்தருளி வீதிவலம் வந்து இருப்பிடம் செல்லும்வரை இந்நிகழ்வு இடம்பெறுகின்றது. இந்நிகழ்வு இவ்வாலயத்திற்குரிய சிறப்பம்சமாகும்.

கோயில்களில் இடம்பெறும் நைமித்தியக் கிரியைகளிலே குறிப்பாக துவஜாரோகணம், துவஜாவரோகணம் ஆகியவற்றில் இடம்பெறும் நவசந்திக் கிரியைகள் குறிப்பிடத்தக்கவை. பிரமசந்தி, இந்திரசந்தி, அக்கினி சந்தி, யமசந்தி, நிருதி சந்தி, வருண சந்தி, வாயு சந்தி, குபேர சந்தி, ஈசான சந்தி ஆகிய நவசந்திகளிலும் அவ்வச் சந்திகளுக்குரிய தெய்வங்களைக் குறித்து கொடியேற்றம், கொடியிறக்கத்திருவிழாக்களின்போது அவரவர்க்குரிய தாளம், ராகம், பண், நிருத்தம், வாத்தியம் என்பவை நன்கு அமைய வேண்டும் என ஆகமங்களும் பத்ததிகளும் கூறுகின்றன. இத்தகைய நவசந்திக் கிரியை மரபு இவ்வாலயத்திலும் சிறப்பாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவை தவிர விசேட தினங்களிலும், மகோற்சவ காலங்களிலும் ஒலிபெருக்கியில் பக்திப் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இசைக் கலையை வளர்க்கும் நோக்கில் ஆலயத்தோடு தொடர்பான அறநெறிப் பாடசாலை இசைப் பயிற்சியை மாணவர்க்கு வழங்கி வருகின்றமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

ஆலய முன்மண்டபத்திலே தேவாரங்கள் எழுவதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதனைக் காண முடிகின்றது. இவை பூர்த்தி செய்யப்படும் காலங்களில், அடியவர்களை நாயன்மார்களின் பக்தி வழி இட்டுச் செல்லும் முயற்சியோடு அவர்கள் பாடல்களைப் பொருளுணர்ந்து

பாடுவதற்கும் வழிசமைத்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாலயம் தொடர்பாக எழுதப்பட்ட பாடல்களில் ஊஞ்சல் பாட்டையே காணமுடிகின்றது. முருகப் பெருமானின் பக்தி ததும்பும் அருட்பாடல்களை இயற்றுவித்து வெளியிட வேண்டிய கடமை பரிபாலனசபைக்குரியதாகும்.

## நடனக்கலை

ஆலயத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சி பெற்ற கலைகளில் நடனக்கலையும் ஒன்றாகும். நடனத்தின் மூலம் இறைவனைத் துதித்தல் சாலச் சிறந்தது என்பதற்கிணங்க தென்னாட்டின் சமய வரலாற்றில் பொற்காலம் என்று கூறப்படும் சோழர்காலத்தில் இக்கலையின் மகோன்னத வளர்ச்சியை நாம் காணலாம். நடனமாதர்கள் பலரை ஆலயத்தில் நடனமாடுவதற்கென மன்னர்கள் நியமித்திருந்தனர். இந் நடனக்கலை கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை ஆராய்வோம்.

இவ்வாலயத்தில் நடைபெற்ற ஆரம்பகால நடனக்கலைகள் பற்றிப் போதிய தகவல்கள் கிடைக்காவிட்டாலும், சூரன் போரின்போது பொய்க்கால் குதிரையாட்டம், நாரதர் வேடம், கரகாட்டம் போன்ற நடன நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. இவை தற்போது அருகிவிட்டன. மற்றும் கொடியேற்ற, கொடியிறக்க உற்சவங்களின்போது ஈசான மூலையில் புதநாட்டிய நிகழ்வு இன்றுவரை இடம்பெற்று வருகின்றன. தீபாராதனைகளின் போது இடம்பெறும் முத்திரைகளும் நடனக் கலையின் ஓரம்சத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றன. இவை தவிர தற்போது நடனக் கலையைப் பேணும் ஏனைய மரபுகள் அருகிவிட்டதென்றே கூறலாம். இதற்குரிய காரணத்தை பலர் பலவழிகளிலும் காரணம் கற்பிக்க முயன்றாலும் இக்கலைகளை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய மரபு இந்துக்களாகப் பிறந்த ஒவ்வொருவரிடத்திலும் தங்கியிருக்கின்றது என்றே கூறலாம். இவற்றினைக் கேளிக்கை நிகழ்வுகளாகக் கருதாது தெய்வீக நிகழ்வாகக் கருதும் மனப்பக்குவம் ஒவ்வொருவரிடத்திலும் எழவேண்டும்.

இவ்வாறு கோயில்களில் வளர்க்கப்பட்ட கலைமரபுகள் தற்போது பொதுமன்றங்கள் நிறுவனங்களாலும் வளர்க்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. பாடசாலைகள் மத்தியில் இக்கலைகள் பயிற்றுவிக்கப்படுதல் நுண் கலைகள் வளர்ச்சியடைய ஏதுவாக உள்ளது. இன்று பல்கலைக்கழக மட்டத்தில் கூட இந்நுண்கலைகளின் தாற்பரியம் உணரப்பட்டுள்ளது. இந்தவகையிலே இராமநாதன் நுண் கலைப்பீடத்தை யாழ் பல்கலைக்கழகத்தார் பிரசவித்திருக் கின்றார். இக்கலைப்பீடம் ஈந்தளித்த இசைக்கலைமணிகள், நாட்டியக்கலை மணிகள் வெவ்வேறு மன்றங்கள் மூலம் தம் இசைப்பணியைத் தொடர்கின்றனர். இத்தகையவர்கள் ஆலயத்தை மையமாகக் கொண்டு தம் கலைகளை வளர்க்க முன்வரவேண்டும். இதன்மூலம் ஆலயங்களில் அருகிவரும் எம் நாட்டியக் கலையை விருத்தி செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை.

## 4.5 அலங்காரக்கலை

அலங்காரக்கலை ஸ்ரீசித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தில் குறிப் பிடத்தக்க ஓர் அம்சமாகும். இறைவருக்குரிய மலரலங்காரம், ஆடையலங் காரம், அணிகலன்களில் அலங்காரம், முடி அலங்காரம் என்பன சிறப்பானவை யாகும். மலரலங்காரம் ஆரம்ப காலத்தில் இருந்தே சிறப்பிடம் பெற்றிருக் கின்றது. முன்னைய காலங்களில் இவ்வாலய நந்தவனத்தில் பல பூக்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தாலும் தற்போது பல பூமரங்கள் அழிந்து விட்டன. ஆலயத்தேவைக்கு உகந்த பூக்களை "நந்தவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதே சிறப்பானதாகும்.

### பூமாலை கட்டுதல்

பூமாலை கட்டுவதற்கெனப் பரம்பரையாக பூக்கட்டுபவர் உண்டு. நித்திய, நைமித்தியக் கிரியைகளின்போது இறைவன் இறைவிக்கு மாலைகள் அணிவிக்கப்படுகின்றன. இவை தவிர விசேட உற்சவ தினங்களில் வண்ண, வண்ண பூக்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் அழகாக அமைக்கப்பட்டிருப்பதனைக் காண லாம். மகோற்சவ காலங்களில் ஆறாம் திருவிழா உற்சவத்தின்போது பூந்

தண்டிகையில் சுவாமி வீதியுலம் வரும் காட்சி அலங்காரக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. வர்ணப் பூமாலைகளாலும், சரங்களாலும் தண்டிகை சிறப்பாக அலங்கரிக்கப்படுகின்றமை பார்ப்போரைப் பரவசம் கொள்ள வைக்கும். மற்றும் மஹோற்சவத்தின் ஐந்தாம் திருவிழா அன்று மலர்வகை, மரக்கறிகள் என்பவற்றால் அமைக்கப்பட்ட பந்தலில் முருகப் பெருமான் அருட்காட்சி கொடுக்கும் திறன் அற்புதம் வாய்ந்த அலங்கார நிகழ்வாகும்.

## ஆடை அணி அலங்காரம்

இன்னும் திருக்கல்யாண உற்சவத்தின்போது இறைவன், இறைவிக்குரிய திருமணச்சடங்கு வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மணவறையில் இடம் பெறுகின்றது. இந்நிகழ்வுகளும் அலங்காரக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. மற்றும் இறைவனின் ஆடைகள் அணிவிக்கப்பட்டிருக்கும் அழகு மற்றுமோர் கலை அலங்காரம் ஆகும். மடிப்புக்களுடன் முருகனுக்கு அணிவிக்கப்பட்டிருக்கும் பட்டுச்சேலைகள், வேட்டி நிறத்தில் வெண்பட்டு ஆடை, தலைப்பாகை என்பன அணிவிக்கப்படும். இவ் அலங்காரத்தோற்றம் இறைவனை நேரில் காண்பது போல அமைகின்றது.

மேலும் திருவிழாக் காலங்களின்போது முருகனுக்கு பலவகை அணிகலன்கள் அணிவிக்கப்படும். இதேபோன்று வள்ளி தெய்வானைக்கும் கையணிகள், கழுத்தணிகள், ஒட்டியாணம், தலையிலே அணிவிக்கப்படும் ஆபரணங்கள், மற்றும் தலைமுடி நீளமாகப் பின்னப்பட்டு எழில் மிகு தோற்றமாக காட்சி தருகின்றார். அழகான முறையில் தீப தீபாராதனைகள் செய்வதும், சட்ட விளக்குகள் சுடர் விட்டு எரிவதும் போன்ற காட்சிகள் கண்ணைக் கவர்வன. இவ்வாறாக அலங்காரங்களை இவ்வாலயத்தில் சிறந்து விளங்குகின்றது.

## அடிக்குறிப்புகள்

01. கைலாச நாதக்குருக்கள். கா. சைவத்திருக்கோயில் கிரியை நெறி. இந்து கலா அபிவிருத்திச் சங்கம், கொழும்பு, 1963, ப.67

02. அப்பர் தேவாரம், திருப்பனந்தாள் காசி மடம், 1967

03. திருமூலர் திருமந்திரம், காசிமடம், திருப்பனந்தாள், 1951

04. கைலாசநாதக் குருக்கள். கா. மு.கு.நூல் பக் 73-74

05. சுப்ரமணியக் குருக்கள். வி
வடகோவைச் சித்திரவேலவர் ஊஞ்சற்பதிகம்
பிரம்ம ஸ்ரீ. சோ. சுப்ரமணியக் குருக்களால் வெளியிடப்பட்டது.
இரண்டாம் பதிப்பு.
1971, பக், 2

06. கைலாசநாதக்குருக்கள். கா
மு.கு.நூல்
பக். 279

07. திருஞான சம்பந்தன். எஸ். ஆர், "ஈழத்திருநாட்டில் தேவார இசை.
நல்லைக் குமரன் மலர். 1997, ப. 69

# அத்தியாயம்

# ஐந்து

## அத்தியாயம் ஐந்து
**********

## கோயிலும் சூழலும்

### 05.1. சிவாச்சாரியார் பரம்பரையும் சிறப்பும்


ஒரு கோயிலுக்கு அதன் குரு நன்கு அமைவது அக்கிராமத்தவர் செய்த பூர்வபுண்ணிய பலனாகும். அந்த வகையிலே கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி கோயிலிலும் சிறந்ததொரு குரு பரம்பரை கிடைத்தமை அப்பகுதி மக்கள் பெற்ற பெரு வரப்பிரசாதமாகும். சிறந்த சிவாச்சாரியார் பரம்பரையினர் காலங்காலமாக இவ்வாலயத்தில் கிரியைகளை ஆற்றி வருகின்றனர்.

வேதக்குட்டிக்குருக்கள், வே.சபாரட்ணக்குருக்கள், ச.சோமசுந்தரக் குருக்கள், சோ.சுப்ரமணியக்குருக்கள், சு.கீதச்சந்திரக்குருக்கள் என இச் சிவாச்சாரியார் பரம்பரை அமைந்து விளங்குகின்றது. இவ்வாலயத்தில் ஆரம்ப காலங்களில் கிரியைகளை நிகழ்த்தி வந்தவர் வேதக்குட்டிக் குருக்களாவார். 'இராதம்பு' எனுமிடத்தில் குடியிருந்த இவர் நித்திய பூசையை நியமமாகச் செய்வதற்கும், ஆலய கட்டட வேலைகளைக் கவனிப்பதற்காகவும் கோயிலின் தெற்கு வீதியில் வந்து குடியேறினார். இவராலேயே இவ்வாலயத்தில் வேலாயுதப் பிரதிஷ்டை செய்விக்கப்பட்டது.[1]

இக்குருக்களுடைய முன்னோர்கள் பாடல் பெற்ற தலமான திருப்புகலூரில் இருந்து தமிழ் மன்னரால் அழைத்து வந்து நீர்வேலியில் குடியேற்றுவித்த ஆதிசைவ சிவாச்சாரிய பரம்பரையினரென்றும் இவர்களுள் ஒருவரான சோமசுந்தரக்குருக்கள் (சோமுஐயா) என்பவர் கோப்பாய் வடக்கிலிருந்த சைவமக்களால் அழைத்து வந்து அப்பிளானை (வில்லையடி) எனுமிடத்தில் குடியமர்த்தப்பட்டவரென்றும், இவருடைய மகன் சுப்ரமணியக்குருக்களென்றும் சுப்ரமணியக்குருக்களுடைய புதல்வரே ஆலயத்தின் பிரதிஷ்டாசாரியான வேதக்குட்டிக்குருக்கள் என்றும் அறிந்தோர் கூறுவர்.[2]

1897ம் ஆண்டு கர்ப்பக்கிருகமும், அர்த்தமண்டபமும், வெள்ளைக் கல்லாலும், அடுத்த இரு மண்டபங்களும், வைரவர் கோயிலும் சாந்தினால் கட்டப்பட்டுக் குருக்களின் புதல்வரான வே.சபாரட்ணக் குருக்களால்

சிவாச்சாரியார் பரம்பரை
*****************



சோ.சுப்ரமணியக்குருக்கள்
****************

கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவரைத்தொடர்ந்து இவ்வாலயத்தில் கிரியைகளை நிகழ்த்தியவர் சபாரட்ணக்குருக்களுடைய புதல்வரான சோமசுந்தரக்குருக்களாவார். இவரது காலத்தில் இரண்டு ஆண்டுகளாக அலங்கார உற்சவம் மிக ஆடம்பரமானமுறையில் நடாத்தப்பட்டுப் பின்பு நிறுத்தப்பட்டதென்று முதியவர்கள் கூறுகின்றார்கள்.

1960ம் ஆண்டு இக்கோயிலின் மூன்றாவது கும்பாபிஷேகம் சோமசுந்தர குருக்களின் புதல்வரான சுப்ரமணியக்குருக்களால் சிறப்பாக நடந்தேறியது.[3] இவரைத்தொடர்ந்து தற்போது கிரியை ஆற்றி வருபவர் இவரது மகள் வழிப் பேரரான பு.கீதச்சந்திரக்குருக்களாவார். இவ்வாலய சிவாச்சாரிய பரம்பரையினர் சிறந்த வேதாகம விற்பன்னர்களாக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே இற்றைக் காலம் வரை வாழ்ந்து வரும் சோ.சுப்ரமணியக்குருக்கள் அவர்களின் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டிய பொக்கிஷங்களாகும். எனவே இவரைப் பற்றி சைவ உலகம் அறிந்திருப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு இவர் பணிகளைச் சற்று சுருக்கமாக ஆராயவேண்டிய தேவை எமக்கிருக்கின்றது.

<u>சுப்ரமணியக்குருக்கள் பணி</u>

குருக்கள் ஐயா என எல்லோராலும் அன்புடனும் மதிப்புடனும் அழைக்கப் படுகின்ற சுப்ரமணியக்குருக்கள் நெடிதுயர்ந்த ஆஜானுபாகுவான தோற்றம் கொண்டவர். அறிவொளி வீசுகின்ற கண்கள் எப்பொழுதும் இனிய புன்சிரிப்பைக் காட்டும் முகம், மெல்லிய குழந்தையின் மழலை போன்ற குரல், நகைச் சுவையும் தத்துவமும் நிறைந்த பேச்சு என்பன அவரை ஒரு முறை கண்டு கதைத்தவர் நெஞ்சில் என்றும் அழியாத இடத்தினைப் பெற்றுக்கொள்ள வைப்பன. அக் காலத்தில் கோப்பாயில் இருந்தவரும் பின்பு மலேயாவிற்குச் சென்று காலமானவருமான சிவஸ்ரீ.தி.ஐயாத்துரைக்குருக்களிடம் ஓய்வு நேரங்களில் சமஸ்கிருதத்தையும், தமிழையும், அமரம், நிகண்டு போன்ற கருவி நூல்களைப் படித்ததோடு புராணங்களை வாசிக்கவும் பொருள் கூறவும் பயிற்சி பெற்றார்.

குருக்கள் ஐயா குருகுலவாசம் செய்தது நல்லூரில் இருந்த தம்பையாக் குருக்கள் என்னும் கார்த்திகேசுக்குருக்களிடமாகும். கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகள் அங்கேயே தங்கி குருகுலவாசம் செய்தார். பின்பு தினமும் நடந்து சென்று படித்துத்திரும்புவார். அக்காலத்தில் கற்கும் முறையும் பாடத்திட்டமும் எவ்வாறு இருந்தது என்பதை அவரே கூறுகின்றார்.

"காலை ஐந்து மணிக்கு விழித்தெழுந்து தோத்திரங்களைப் பாராயணஞ் செய்வோம். நித்திய கர்மானுட்டானம் முடிந்ததும் கோயிலில் காலைப்பூசை செய்வோம். காலை உணவு முடிந்த பின் படிப்புத்தொடங்கும். மனனம் செய்யவேண்டியவற்றை மனனம் செய்து விட்டுப் பத்ததிகள் வாசித்து பிரதிபண்ணுதல், யந்திரம் வரைதல், கிரகநிலை கணித்தல் முதலியன செய்வோம். கோயிலில் நித்தியமும் கும்பம் வைத்து அபிஷேகம் செய்வது வழக்கம். வாத்தியார் கூட இருந்து காட்டித்தர நாங்களே ஸ்நபன பூசை செய்வோம். மத்தியான உணவிற்கும் ஓய்விற்கும் பின் மீண்டும் படிப்புத் தொடங்கும். ஆகமங்களுள் முக்கியமான காரணாகமத்தை வாசிக்கச்சொல்லிவிட்டுக் கேட்டுக்கொண்டேயிருந்து விளக்கமும் சொல்வார். பல மாதங்களின் பின் இது நிறைவேறியபொழுது அங்கு வரும் நண்பர்களிடம் இக்காலத்தில் இருபத்தெட்டு ஆகமமும் படித்தவர் யார்? இரண்டொரு ஆகமமாவது படித்தவன் உண்டா? இதோ பார் காரணம் முழுவதும் படித்தவன் இருக்கின்றான் என்று சொல்லிப்பெருமைப்படுவார்.[4]

இவ்வாறு ஆசிரியரால் மிகுந்த பாராட்டுப்பெற்ற குருக்கள் ஐயா தமிழ், சமஸ்கிருதம் மட்டுமல்லாமல் மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் சிங்கள மொழியை நன்கு உச்சரிக்கவும் வாசிக்கவும் கூடியவர் என்பது பலரும் அறியாத விடயமாகும். தேடக்கிடைக்காத அரிய பொக்கிஷங்கள் இவரிடம் இருந்தன. ஆனால் குடாநாட்டுப்போர்ப்பசிக்கு அவற்றில் பல இரையாகிவிட்டமை வேதனைக்குரிய விடயமாகும். வேதாந்தம், சித்தாந்தம், பல்வேறு சமயங்கள், சமய ஞானிகள் வரலாறு, ஆகமம், யந்திரமந்திரசாஸ்திரங்கள், ஜோதிடம், சிற்பம் போன்ற துறைகளில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. தோற்றத்தில் அறிவொளியில் குருக்கள் ஐயா காஞ்சிப் பெரியவரை ஒத்திருப்பதாகப் பலரும் கூறுவர்.

சுப்ரமணியக் குருக்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கோவில்கள் ஈழத்தின் வடக்குப் பகுதிகளில் மட்டுமல்லாமல் மத்திய மலையகம், தென் இலங்கை ஆகிய பகுதிகளிலும் பல உள்ளன. மட்டுநகர் மாமாங்கப்பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தியதுடன் அங்கு பல ஆண்டுகள் துவஜாரோகண மகோற்சவத்தினையும் நிகழ்த்தியவர். சித்தாந்தத்தில் ஈடிணையற்ற ஞானபானுவாகத் திகழும் இவருக்கு "சித்தாந்தபானு" எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்ததன் மூலம் தென்னிந்தியாவின் தொண்டைமண்டல ஆதீனம் நிலையான புகழைத் தேடிக் கொண்டது.[5]

இவரைப் பற்றிய விடயங்களை ஓய்வு பெற்ற தலைமை மொழி பெயர்ப்பாளர் குல.சபாநாதன் கூறும்போது "எனக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தால் நான் குருக்கள் ஐயா அவர்களை சிறையில் வைத்து உணவும் உடையும் கொடுத்து சித்தாந்த ஆராய்ச்சி உரைநடை நூல்களையும் நாவலர் பெருமானைப் பற்றிய நூல்களையும் எழுதிக் குவிக்குமாறு அன்புக்கட்டளை பிறப்பித்திருப்பேன்" என்று கூறிச்செல்கிறார். இதிலிருந்து இவரது ஆற்றல், அறிவு சொல்லாமலே புலனாகும்.[6]

இந்து சமயத்துடன் கலந்து விட்ட சில மூடப்பழக்க வழக்கங்களை அகற்ற வேண்டும் என்பதில்மிகுந்த அக்கறை கொண்டவர். இவற்றை விளங்க வைக்க இலாவகமாக பல கதைகளையும் சுவையாக எடுத்து விளக்குவார். தமிழில் அர்ச்சனை செய்வது பற்றிய குருக்கள் ஐயாவின் கருத்துக்களும் குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன. இவர் தனது பேச்சிலும், கட்டுரைகளிலும் அகத்தூய்மையின் அவசியத்தை வலியுறுத்தி வருபவர் அகத்தூய்மை இல்லாது செய்யும் புண்ணியச் செயல்களால் பயனில்லை என்பதைத் தனக்கே உரிய பாணியில் அடித்துச் சொல்லுவார்.

இவரது பல கட்டுரைகளில் "தீர்த்தமகிமை", "யோகசித்தி", "ஞானப்பால்", "சிறுதெய்வ வழிபாடும் சைவசமயிகளும்" போன்ற கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவற்றுள் சில ஆத்மஜோதியில் பிரசுரமானவை. 1970இல் தொண்டைமண்டல ஆதீனத்தலைவர் இங்கு வருகை தரவும், கி.வா.ஜகந்நாதன், திருமுருக கிருபானந்தவாரியார் போன்றோர் கோப்பாய்க்கு வருகை தரவும்

சொற்பொழிவாற்றலும் குருக்களையாவே காரணமாக இருந்தவர் என்றால் அது மிகையாகாது.

கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் மிகவும் திறம்படக் கிரியை நடாத்திய பெருமை இவருக்குண்டு. நீண்டகாலம் ஆலயத்தில் ஒருவராக விளங்கிய பெருமையும் இவருக்குண்டு. கிரியாதுரந்தரர் சித்தாந்தபானு சோ.சுப்பிரமணியக்குருக்களவர்கள் ஈழத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அறிவாளிகளுள் ஒருவராகத்திகழ்கின்றார். இவரது உருக்கமான தீபாராதனையைத் தரிசிக்கும் பாக்கியம் வடகோவை மக்களின் புண்ணியம் எனலாம். கோயில் விழாக்களில் பயனற்ற கேளிக்கைகள் நடைபெறுவதைக் கண்டிப்பவர். அவர் தம் கருத்துக்களில் பற்றுதல் கொண்ட ஊர்மக்கள் அவரின் அறிவுரைப்படி நடப்பர். இவ்வாறான ஒரு மாபெரும் சிவாச்சாரியாரைக் குருக்களாக பெற்றுக்கொண்ட மக்கள் உண்மையில் பாக்கியசாலிகள் தாம்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

எனும் வாக்கிற்கு இலக்கணமாக விளங்கும் சித்தாந்தபானு சோ.சுப்பிரமணியக்குருக்கள் சித்திரவேலாயுதர் திருவருளால் அகவை தொண்ணூற்று இரண்டு கண்டு இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றார். "சித்தாந்தபானு", "சிவாகம விசாரதர்", "வேதசிவாகம ஞானபானு" என்பன இவரது பட்டங்களாகும்?

இவரது முதுமைப் பராயம் காரணமாக இவரது மகள் வழிப்பேரன் பூ.கீதச்சந்திரக்குருக்கள் தற்போது ஆலயக்கிரியைகளை இவர் வழியில் திறம்பட ஆற்றிவருகின்றார். எல்லாம் வல்ல சித்திரவேலவர் இவர்களுக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்தவாழ்வையும் கொடுக்கப்பிரார்த்திப்போமாக!

## 05.2. கோயில் பரிபாலனம்

ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தை குருக்கள் பரம்பரையினரே பாதுகாத்து வந்தனர். பின்னர் கோயிலையும் அதற்குரிய அசைவற்ற அசையுள்ள சொத்துக்களையும், வேதசிவாகமப்படி கோயிலையும் பராமரித்து நல்ல நிலையில் வைத்திருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆலய மண்டபத்தில் கோப்பாய் வடக்கிலுள்ள சைவசமயிகளை 1913ம் ஆண்டு ஆனி மாதம் 20ம் திகதி ஓர் மகாசபையைக் கூட்டி ஆகவேண்டியவைகளை யோசித்து மேற்படி கோயிலைத்தக்க படி பராமரித்து விருத்தி செய்யும் நோக்கமாய் வடகோவைச் சித்திரவேலாயுத சுவாமி கோயில் தரும பரிபாலன சபை உதயமானது. குறித்த பரிபாலன சபைக்கு வடகோவையெங்கும் பரவலாக 21பேர் நிர்வாகசபையினராகவும் குறித்த நிர்வாக சபையினர் கோயிலையும் அதற்குரியவைகளையும் பராமரிப்பதற்கு உதவியாக ஐவர் பஞ்சகர்த்தாக்களாகவும் மேற்படி திகதியிலேயே நியமனமாகினர்.

குறித்த பஞ்சகர்த்தாக்கள் கோப்பாய் வடக்கு கந்தர் விநாசித்தம்பி என்பவரை மானேசராக அவர் சம்மதத்துடன் தீர்மானித்து அவரது கடமைகளையும் வரையறை செய்து நியமித்தனர். இதற்கு அத்தாட்சியாக 1913ம் வருடம் ஐப்பசி மாதம் 16ம் திகதி இலக்கம் 193, பிரசித்த நொத்தாரிசு சி.செங்காதரையர் முன்னிலையில் பஞ்சகர்த்தாக்களும் மானேசர்களும், சாட்சிகளும் ஒப்பமிட்டு ஓர் தருமசாதன உறுதியுரை முடிக்கப்பட்டது. இப்பரிபாலனசபையினர் காலத்திற்குக்காலம் ஆலயத்தை உரிய முறைப்படி பராமரித்து வந்தனர்.

ஆலய மானேசகராயிருந்து அருஞ்சேவையாற்றிய கந்தர் விநாசித்தம்பி அவர்களது மறைவுக்குப் பின் அவரது உறவினரான அம்பலவாணர் கார்த்திகேசு அவர்களும் அவர்களுக்குப் பின் அம்பலவாணர் சின்னாசசும் தொடர்ந்து 1940 வரை மானேசர்களாகக் கடமையாற்றி வேண்டிய திருப்பணி வேலைகளையும் செய்வித்ததனோடு நித்திய நைமித்திய பூசைகளும் ஒழுங்காக நடைபெற ஆவன செய்தனர். பறாவுடனும் கந்தபுராணம்,

சித்திரபுத்திரனார் கதை படிப்பதும், படிப்பு முடிவில் மகேஸ்வரபூசையும், சித்திரைக்கஞ்சியும் ஊர்மக்கள் உதவியுடன் தவறாது நடந்தன. தொடர்ந்து 1940ற்குப் பின் சி.நாகலிங்கம், மு.நாகலிங்கம், ந.சிவக்கொழுந்து, நா.அம்பலவாணர் என்போர் முகாமையாளர்களாக - திருப்பணிச்சபைத் தலைவர்களாகவிருந்து ஆலய பரிபாலனம் சீர் பெறவும் நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் உதவினர்.

26.03.30ல் தேர் செய்வதற்கான முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்ட நாயினும் உருப்பெறவில்லை. 10.12.50ல் நடந்த பொதுக்கூட்டத்தில் தெரியப்பட்ட திருவாளர்கள் வ.கந்தையா, வீ.மார்க்கண்டு, சி.சிவலிங்கம் என்போரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்ட தேர்த்திருப்பணிச்சபை சேவையாற்றி அடித்தள வேலைகள் வரை செய்யப்பட்டன. மேற்கொண்டு மு.பரமலிங்கம், சி.க.சுப்பிரமணியம், மு.குமரையா என்போரைக் கொண்ட தேர்த்திருப்பணிச்சபை தொண்டாற்றி 1967ல் குறித்த செய்கைத் தேர் வேலைகளைப் பூர்த்தி செய்தது. மேலும் வெறுப்புக்கலவரம் காரணமாக அநுராதபுரியிலிருந்து கோப்பாய் வந்த வர்த்தகரான இ.இராமலிங்கம் அவர்களது ஊக்கத்தினால் தேர்க்கொட்டகையும் பூர்த்தியாக்கப்பட்டு ஆலயம் புதுப் பொலிவு பெற்றது. மேலும் குறித்த திருப்பணிச்சபை தன் முயற்சி நிறைவெய்தியதும் மீதியிருப்பாயிருந்த பணத்தை ஆலயத்திருப்பணிச்சபையிடம் கையளித்தது.

முன்னைய ஸ்தாபகர்களால் 1897லும் தொடர்ந்து 1930லும் கும்பாபிஷேகம் நடைபெற்றதனைத் தொடர்ந்து 10.12.1960 புதன்கிழமை கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது.[9]

ஞானபண்டித சைவ இளைஞர் சங்கம்

இவ்வாலயத்தை மையமாக வைத்து மு.நாகலிங்கம் ஆசிரியர் பூரணைத் தினங்களில் மற்றும் விசேடதினங்களிலும் சைவப் பெரியார்களை அழைத்து உபந்நியாசம், கதாப்பிரசங்கங்கள் என்பன செய்வித்து சைவ அறிவை வளர்க்கப் பேருதவி புரிந்தார். அவருக்குப் பின் பண்டிதர் ஸ்.கந்தையா அவர்கள் தலைமையில் 1956ல் உதயமான ஞானபண்டித சைவ இளைஞர் சங்கத்தார் அதே கைங்கரியங்களைத் தொடர்ந்து செய்வித்து வந்ததோடு சிறுவர்களிடையே பேச்சு, கட்டுரை மனனப்போட்டிகளை நடாத்தி சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பேருதவி புரிந்து வந்தனர். பொ.விக்னேஸ்வரலிங்கம் தலைமையில் ஸ்தாபிதமான வடகோவை இந்து இளைஞர் சங்கத்தாரும் கொடிவிற்பனை, நன்கொடைகள் மூலம் வேண்டிய நிதி உதவிகளைப் பெற்று சமயம், கல்வி, பொருளாதார உதவிகளிலும் செயலாற்றி வந்துள்ளனர்.

திருப்பணிச் சபை

1968லிருந்து சி.க.சுப்ரமணியம், பொ.விக்னேஸ்வரலிங்கம், செ.நடேசன் மு.நல்லையா, சி.கந்தையா என்போரைப் பிரதான நிர்வாகிகளாகக் கொண்ட திருப்பணிச்சபை தெரிவாகிச் சிறப்புறச் செயலாற்றியது. பிள்ளையார், பிரகார மூர்த்தி, மூலஸ்தானம், ஆறுமுகசுவாமி, வசந்தமண்டப ஊ பி சிற்பவேலைகள், தெற்குமண்டப கொட்டகை வேலைகள், மிகுதிமண்டப வேலைகளுக்கான தூண்களும் நிறுவி 1986ல் சிறப்பான வகையில் கும்பாபிஷேக விழாவையும் நடாத்தியுள்ளனர்.

1980ம் ஆண்டளவில் ஆலயத்தொண்டர்களிடையே உண்டான எழுச்சி காரணமாக முன்னாளில் இருந்த பரிபாலன சபையைப் புதுப்பித்தல் உதயமானது. திரு.அ.கதிரவேலு என்பவரால் 1913 உறுதிப்பிரதி எடுத்து அப்போது நடந்து கொண்டிருந்த சி.க.சுப்ரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிச் சபையிடம் கொடுக்கப்பட்டு மேற்கொண்டு ஆவன செய்யுமாறு கேட்கப் பட்டது.

12.06.92ல் நடைபெற்ற திருப்பணிச்சபையின் வருடாந்த கூட்டத்தின் முடிவிலேயே இது விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. 16.10.1913 தருமசாதன உறுதிக்கு அமைவாக பரிபாலன சபையொன்று நிறுவப்படவேண்டும் என்று பிரேரணை கொண்டு வரப்பட்டு நிறைவேறியது. குறித்த உறுதிக்கு அமைவாகப் பரிபாலனம் அமைத்ததற்கான யாப்பு விதிகள் தயாரிக்கப்பட்டன. தயாரித்த யாப்பு விதிக்கு அமைவாக பதினைவரைக் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. ஆலயம் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெறவும் திருப்பணி வேலைகள் தொடரவும் இச்சபை தன்னாலான உதவிகளை நல்கியது.[10]

பின்னர் 6.9.93ல் இடைக்கால நிர்வாக சபை ஒன்று தெரிய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்போது எழுவரைக் கொண்ட சபை ஒன்று தெரியப்பட்டது. இவர்கள் காலத்தில் பல விடயங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன்பின் 20.02.94ல் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை தெரியப்பட்டது. தலைவராக திரு.த.தர்மராசாவும், செயலாளராக திரு.சிவலோகநாதனும், பொருளாளராக திரு.கா.திருக்கேசன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இச்சபை உறுப்பினர்கள் யாப்பு விதிகட்கு அமைவாக பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொண்டனர். ஆலயப்பரிபாலனச் சிறப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் உகந்த வகையில் ஒரு காரியாலயம் அமைக்கப்பட்டு ஓர்க்கா துரந்தரி செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் திறந்து வைக்கப்பட்டு நிரந்தர ஆயுட்கால உறுப்பினர்களும் அன்று தொடக்கம் சேர்க்கப்பட்டனர்.

1995 இடப்பெயர்வின் பின் பரிபாலன சபை உறுப்பினர்கள் சிலர் ஊரில் இல்லாத காரணத்தால் அவர்களிடத்திற்குப் புதியவர்கள் நியமனம் செய்யப் பட்டனர். மீளவும் நிர்வாகசபை உறுப்பினர்கள் மீளக்குடியமர்ந்ததன் பிற்பாடு அவர்கள் தெரிவின் பிரகாரம் அவ்வப்பதவிகளில் அமர்த்தப்பட்டனர். இதன் பின்னர் 1999ல் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது. இதன்போது தலைவராக தர்மலிங்கம் தர்மராசாவும் செயலாளராக திரு.ஐயாத்துரை சிவலோகநாதனும், பொருளாளராக திரு.ச.குணசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் தலைமையிலே இன்று வரை ஆலயக்கடமைகள் சிறப்பாக நடந்தேறி வருகின்றன. திருவிழாக் காலங்களில்

தண்ணீர்ப்பந்தல் அமைத்து அடியவர்களுக்கு தாகசாந்தி செய்யப்படுகின்றது. குருக்கள் படியும் இச்சபையாலேயே வழங்கப்படுகின்றது.

பொதுவாக பரிபாலன சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்த வகையில் நித்திய நைமித்திய கிரியை ஒழுங்குகள் பரிபாலனசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆலயத்தில் நியமமிட்ட தவறாத கிரியைகள்இடம்பெறுவதற்கு இப்பரிபாலன சபையினதும் ஆலயப் பிரம குருவினதும் ஒழுங்கமைந்த செயற்பாடே காரணமாகும்.[11]

ஸ்ரீ சித்திரவேலவர் ஆலய பரிபாலன சபை பூசை நிகழ்வுகள், விழாக்கள் என்பவற்றை ஒழுங்கமைத்து மக்களையும் ஆலயப்பணியில் இணைத்து திறம்பட பரிபாலன சபை செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இப்பரிபாலன சபைத் தெரிவு காலத்திற்குகாலம் இடம் பெறுகின்றமையால் மேன்மேலும் திறமையான நிர்வாகம் அமைந்து ஆலய வளர்ச்சிக்குப் பெருந்துணையாக அமைகின்றது.

## 05.3. சமுதாய மக்களும் ஆலயமும்

மக்கள் ஒன்று கூடிக் கடவுளை வழிபடுவதற்கு மட்டும் கோயில்கள் பயன்படவில்லை. மக்கள் சமூக வாழ்க்கைக்கு அச்சாணியாக கோயில்கள் அமைந்திருந்தன. இந்தப்பண்பாட்டு மரபில் கோயில்கள் சமூகத்துடன் இணைந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளன. பண்டைக்காலம் தொட்டு திருக்கோயில்கள் தமது வளர்ச்சியில் மட்டுமன்றி சமூகத்திற்கு வேண்டிய கல்வி, மருத்துவச்சேவை, ஊனமுற்றோர் சேவை, ஏழைகளுக்கு உதவுதல், நீதிமன்றங்களாக, வங்கிகளாக, நூல்நிலையங்களாக பல்வேறுபட்ட தொழிற்பாடுகளை ஆற்றி வந்தன. என கல்வெட்டுக்கள், இலக்கிய ஆதாரங்கள் மூலம் அறியலாம்.

திருக்கோயில்கள் மக்களின் வாழ்க்கையில் அளவிறந்த நலன்களைக் கொண்டிருந்தன. உதாரணமாக தென்னிந்தியக் கோயில்கள் இத்தகு சேவைகளை ஆற்றி வந்துள்ளன. ஈழத்திலும் பல ஆலயங்கள் சிறிய நற்பணிகளை ஆற்றி வருகின்றன. சமூகமும் திருக்கோயிலுடன் இணைந்து பயன்பெற்று வருகின்றன. இவ்வாறு செயற்பட்டு வரும் பணிகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இதற்கு மக்களும் தம்மாலான உதவிகளை நல்க வேண்டும். இதனால் சமூகம் மட்டுமன்றி உலகமும் உய்வு பெறும். இந்த வகையில் வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்துடன் சமூக உறவு எவ்வாறு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்வோம்.

இவ்வாலயத்தை மையமாகக் கொண்டே இங்குள்ள மக்கள் வாழ்க்கை

"சேந்தனைக் கந்தனைக் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே" [12]

எனும் அருணகிரிநாதர் பாடலுக்கேற்ப எச்செயலுக்கும் கந்தப்பெருமானையே எண்ணிச் செயற்படுவர்.

இவ்வாலயத்திற்கும் சமூகத்திற்குமிடையேயான தொடர்பு ஒன்றுடன் ஒன்று நன்கு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. "யாமிருக்கப் பயமேன்" எனும் வாசகத்திற்கேற்ப ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான் கோவைச் சமூக மக்களைக் காத்தருள் புரிந்துகொண்டிருக்கின்றார்.

ஆலயச் சூழலில் வாழும் சகல மக்களும் எவ்வித பேதமுமின்றி முருகப் பெருமானைத் தரிசிக்கும் காட்சி அற்புதமானது. பல நேர்த்திகள் வைத்து அவை நிறைவேறும் பொருட்டும், நிறைவேறிய பிற்பாடும் அபிடேகம், பொங்கல், காவடி என்பவற்றைச் சிறப்பாகச் செய்கின்றனர். நேர்த்திகள் செய்து ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை அன்பளிப்புச் செய்தும் வருகின்றனர். இங்கு காணப்படும் முருகப்பெருமானுக்குரிய வாகனங்கள் மற்றும் ஆலய நிர்மாணப் பணிகளை இச்சமூக மக்களே முன்னின்று செய்வதைக் காணலாம். வெளியூர் அன்பர்களின் ஆதரவும் இவ்வாலயத்திற்கு இருக்கின்றது. எனினும் ஆலயத்திற்குப் போதுமான நிதிவளம் கிடைப்பதில்லை. இது ஒரு குறைபாடாகவே காணப்படுகின்றது.

ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகளுக்கு மக்கள் தம்மாலான பொருளுதவிகளைச்செய்வதுடன் விழாக்களையும் செய்கின்றனர். உற்சவ காலங்களில் தலைமுறை தலைமுறையாக விழாக்களைப் பொறுப்பேற்றுச் செய்யும் தன்மை காணப்படுகின்றது. பல்வேறு சமூக மக்களும் தம் தெய்வப் பணியாக பக்தியுடன் விழாக்களில் பங்கு கொள்வர்.

"வேண்டுந்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ"[13]

என முருகனின் திருவருள் வேண்டி அன்றாடம் வழிபடும் பக்திசார்நிலையை இங்கு காணமுடிகின்றது.

கோவை வாழ் மக்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை உள்ள சுப காரியங்கள் எல்லாவற்றிற்கும் இவ்வாலயத்திலேயே வேண்டுதல் செய்வர். பிறந்த குழந்தையை முதல் முதல் இவ்வாலயம் கொண்டு சென்றால் முருகப் பெருமானின் திருவருள் குழந்தைக்கு ஏற்படும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.

மேலும் புதுமனைக்கு படம் வைத்து எடுத்தல், அன்னம் ஊட்டுதல், ஏடு தொடக்குதல் எனப் பல மங்கள காரியங்கள் இவ்வாலயத்தில் இடம்பெறுகின்றன. திருமணவிழாக்களின் போது விசேட அபிஷேகங்கள் நிகழ்த்தி முருகப்பெருமானை மகிழ்வித்து பேரருள் வேண்டி திருமணங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

அடியவர்களின் கூட்டுப்பிரார்த்தனை, சமயச்சொற்பொழிவு, புராண படனம் என்பன சிறப்பாக இடம்பெறுகின்றன. மார்கழி மாதத் திருவெம்பாக் காலங்களில் இவ்வாலய அடியார்கள் ஊரில் பல இடங்களுக்குச் சென்று அடியவர்கள் அதிகாலையில் துயிலெழுப்பி ஆலயப் பூசைக்கு வரவழைக்கும் காட்சி இன்றும் கூட இன்பம் தரும் ஆலய சமூக ஒன்றிணைப்புக் காட்சியாக இடம்பெறுகிறது.

இவ்வாலய மகோற்சவம், கந்தசஷ்டி காலங்களில் அயலூர் மற்றும் தூர தேச மக்கள் எல்லோரும் வருகை தந்து தங்கள் உறவினர் வீடுகளில் தங்கி உற்சவ நிகழ்வுகளில் பங்கேற்கும் காட்சி சிறப்பானதாகும். இவ்வூர்க் கிராமவயல் நிலங்களில் விளையும் நெல், தினை போன்றன அறுவடை செய்யப்பட்டு அவற்றின் ஒரு பகுதி ஆலயத்திற்கு வழங்கப்படுகிறது. தினைத்தானியம் அறுவடை செய்யப்பட்டு கார்த்திகை விளக்கீட்டின் போது கன்னிப்பெண்கள், சுமங்கலிகள் மாவிளக்கேற்றும் காட்சி அனைவரையும் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தும்.

இவ்வாலயமும் சமூகமும் கொண்டுள்ள தொடர்பை இங்குள்ள மக்கள் வளர்த்தெடுக்கும் கல்வியின் மூலம் அவதானிக்கலாம். இங்கு அறநெறிப் பாடசாலை ஒன்றை உருவாக்கி மாணவர்களுக்கு கல்விப் பயிற்றுவதுடன் அவர்கள் சைவசமயத்தில் ஈடுபாடு கொள்ளும் பல போட்டிப்பரீட்சைகளையும் இசை வகுப்புக்களையும் வைப்பதனைக் காணலாம்.

மேலும் இவ்வூர் பல அறிஞர்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. இவர்களனைவரும் ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான் மீது பெரும் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறாக கோவையூர் மக்கள் சித்திரவேலாயுதர் ஆலயத்துடன் தம்மையும் தம்சமூகத்தையும் இணைத்துக் குலக் கோயிலாகக் கொண்டு வழிபடுகின்ற மாண்பு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## அடிக்குறிப்புக்கள்

01) பிரம்மஸ்ரீ.சுப்ரமணியக் குருக்கள்.வி., வடகோவைச் சித்திரவேலவர் ஊஞ்சற்பதிகம் .., சித்தாந்தபாநு சோ.சுப்ரமணியக் குருக்களால் வெளியிடப்பட்டது., இரண்டாம் பதிப்பு, 1971, ப.1-2.

02) மேற்படி, ப.02.

03) மேற்படி, ப.02-03.

04) நச்சினார்க்கினியன், சித்தாந்தபாநு சுப்ரமணியக்குருக்கள் பாராட்டு விழாமலர் .., 1971, ப.71-73.

05) மேற்படி, ப.16.

06) மேற்படி, ப.11.

07) சிவஸ்ரீ.சுப்ரமணியக்குருக்கள்.சோ.அவர்களின் வரலாறு.., கோப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி சித்தாந்தபாநு-வேதசிவாகமஞானி பிரம்மஸ்ரீ சுப்ரமணியக் குருக்கள் அவர்களின் பாராட்டு விழா சிறப்பு மலர்., 1998, ப.11.

08) குமாரசாமி.க.இ.., கோப்பாய் - வரலாறு கட்டுரை அரவிந்தவாசம், கோப்பாய்., 1998. ப.52.

09) மேற்படி, ப.55.

10) மேற்படி, ப.57.

11) நேர்காணல், சிவலோகநாதன்.ஐ.., (ஆலயபரிபாலன சபைச் செயலாளர்.)

12) கந்தரலங்காரம்.., கிருபானந்தவாரியார் உரை, வானதி பதிப்பகம், சென்னை., 1978, பாடல்-72, ப.249.

13) திருவாசகம்., சைவசித்தாந்தமகாசமாஜம், சென்னை., 1938, ப.உ0கூ.

## நிறைவுரை

இறைவன் ஆன்மாக்களின் பொருட்டு சாந்நித்தியம் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் இடமே ஆலயமாகும். விதிமுறையாக ஆலயத்தினை அமைத்து அவரவர் விரும்பும் திருவுருவங்களை ஸ்தாபித்து வழிபட்டுவருவதை இந்துக்கள் தமது கடமைகளில் ஒன்றாகக் கருதுகின்றனர். இந்த வகையில் கோப்பாயில் அமைக்கப்பட்டதுதான் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில். இவ்வாலயமானது ஆரம்பத்தில் தனிப்பட்ட நபர்களினால் அமைக்கப்பட்டுக் காலப்போக்கில் கோப்பாய் வாழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையினால் பேணப்பட்டு வருகின்றது.

இவ்வாலயம் பற்றிய ஆய்வினை மேற்கொண்டபோது தகவல்கள் பெறுவது சற்றுக்கடினமாக இருந்தது. எனினும் ஆலயக் குருக்களது உதவியுடனும் பரிபாலனசபை உதவியுடனும், எனது முயற்சியினூடாகவும் இவ்வாய்வினைப் பூர்த்தி செய்ய முடிந்தது.

ஆலயவரலாறு தொடர்பான தகவல்களை 1971ம் ஆண்டு வெளியிட்ட "வடகோவைச் சித்திரவேலாயுதர் ஊஞ்சற்பதிகம்" மூலமே பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் இற்றைக்கால வளர்ச்சி வரை ஆலய வரலாறு கோவைப்படுத்தப் படவில்லை. இத்தகையதொரு கோவைப்படுத்தல் மூலம் ஆலய பரிபாலன சபையினர் நூல் வெளியீடு ஒன்றைச் செய்யலாம். இத்தகையதொரு செயற்பாடு எதிர்காலச் சந்ததியினருக்கு பேருதவியாக இருக்கும். மற்றும் ஆலய அற்புதங்கள் பற்றிப் போதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்ததும் கவலைக்குரிய விடயமே.

சிறப்பான ஒரு ஆலயத்தைப் பொறுத்த வரை ஆறுகாலப்பூசைகள் இடம் பெறுவது உத்தமம். இவ்வாலயத்தில் மூன்றுகாலப்பூசைகளே இடம்பெறுகின்றன. காலப்போக்கில் இந்நடைமுறை நிவர்த்தி செய்யப்படல் நன்று. நைமித்தியக்கிரியைகள் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றமை போற்றுதற்குரியதே.

இவ்வாலயத்தில் 1986ம் ஆண்டிற்குப்பின் கும்பாபிஷேகம் இடம்பெறவில்லை. இங்கு ஒரு நீண்ட இடைவெளி காணப்படுகின்றது. எனவே ஆலயத்தில் பூர்த்தி செய்யப்படவேண்டிய சிறு வேலைத்திட்டங்களை நிறைவுசெய்து கும்பாபிஷேகம் ஒன்றை ஆலய பரிபாலன சபையினரும், அர்மக்களும் இணைந்து நடத்தவேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்கின்றார்கள்.

ஆலயக்கட்டடக்கலை வளர்ச்சி பற்றி ஆய்வு மேற்கொண்டபோது "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கிணங்க இராஜகோபுரம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. இத்தேவை காலப்போக்கில் பூர்த்தி செய்யப்படுமென நம்புகின்றோம். ஓவியக்கலையைப் பொறுத்த வரை போதுமான வளர்ச்சி இங்கு காணப்படவில்லையென்றே கூறலாம். வெறுமையாகவுள்ள ஆலயச்சுவர்களில் முருகப்பெருமானுடன் தொடர்புடைய புராணக்கதைகளை வரைந்து மக்களுக்குச் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம். மற்றும் அருகி வரும் நடனக்கலையை வளம்படுத்த வேண்டியதேவையும் இருக்கின்றது. இங்கு வளர்ச்சியுற்ற ஆரம்பகால நடனக்கலை பற்றி போதிய தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. இவ்வாலயத்திற்குரிய மஞ்சம், சப்பறம் என்பனவும் ஆலயத்திற்குச் சொந்தமானதாக அமைக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் பரிபாலனசபையினரும், அர்மக்களும் சிறந்த அக்கறை காட்ட வேண்டும். சிறந்ததொரு ரதத்தை அமைத்துப்பெருமை பெற்றவர்கள் இத்தகைய தேவைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும்.

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலைப் பொறுத்தமட்டில் சிறந்ததொரு குருபாரம்பரியம் காணப்படுகின்றது. ஆலய வளர்ச்சியில் குருமார் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாததொன்றாகும். "அந்தணரென்போர் அறவோர்" என்பதற்கிணங்க இவர்கள் செயற்பாடு புனிதமானவையாக அமைய வேண்டும்.

இவ்வாலய பரிபாலனத்தைப் பற்றியும் இங்கு ஆய்வு நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இவர்கள் செயற்பாடு சிறப்பாக அமைந்தாலும் செயற்படுத்த வேண்டிய வேலைத் திட்டங்கள் நிறையவேயுள்ளன. பரிபாலனசபையினர் ஆலயம் தொடர்பான செயற்பாட்டிற்கும், அருகசேவைக்கும் போதிய நிதிவளம் இல்லை என்பதைக் காரணம்

காட்டுகின்றனர். ஆலயத்தை நிர்வகிக்கும் பாரிய பொறுப்பு இவர்கள் கைகளில் இருப்பதால் முயற்சியுடைய நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. செயற்படுத்தவேண்டியிருக்கும் வேலைத்திட்டங்களுக்கு உரிய முறைப்படி நிதித் தேவையை அளவீடு செய்து வெளியூர் அன்பர்களிடமிருந்து நிதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாகச்செயற்பாடுகள் எப்போதும் நிறைவானதாகவே இருக்க வேண்டும். காலங்காலமாக இவர்கள் செயற்பட்டால்தான் ஆலயம் படிப்படியான வளர்ச்சி நிலையெய்தியது என்பதையும் நாம் மறந்துவிடமுடியாது. சமுதாய மக்களும் இவ்விடயத்தில் முன்னின்று இந்துப்பண்பாட்டின் நிலைக்களனாக விளங்கும் ஆலயங்களை வளர்த்தெடுக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்கின்றார்கள். இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆலயம் தொடர்பான சேவை தேவையே. எனவே காலப்போக்கில் பரிபாலன சபையினதும், சமுதாய மக்களினதும் பாரிய பங்களிப்பால் இவ்வாலயம் புகழ்பூத்த ஆலயமாக மிளிரவேண்டும். இதற்கு எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திர வேலாயுதர் அருள்புரிவார்.

இறுதியாக 'அனுபந்தம்' எனும் தலைப்பில் எம்மால் ஊஞ்சற்பதிகம் மட்டுமே இணைக்கக்கூடியதாக இருந்தது. இவ்வாலயம் தொடர்பான பாடல்கள் விரல்விட்டு எண்ணக்கூடியதாக மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, ஸ்ரீ சித்திர வேலவப் பெருமான்மீது பாடல்களைப் பாடுவித்து நூல்வடிவாக்கி வெளியிடுவது ஆலயத்தோடு தொடர்பானவர்களின் பாரியபணி. வெள்ளி, மற்றும் விசேட தினங்களில் இப்பாடல்களைப்பக்தர்கள் படிப்பதன் மூலம் ஆத்மதிருப்தியடையும் வாய்ப்புக்கிட்டுகின்றது.

எனவே இவ்வாய்வானது கிடைக்கப்பெற்ற தரவுகளின்படியும் நாம் கோயிலில் அவதானித்த விடயங்களைக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டது. இது பூரணமானதும், சரியானதும் என்று கூறுவதற்கு ஆதித்தவரலாறோ கல்வெட்டுக்களோ கிடையாது. பலருடைய ஆராய்ச்சி மூலம் கிடைத்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டும் பெரியோர்களை நேர்கண்டு எடுத்த தரவுகள் அடிப்படையாகக் கொண்டும் இவ்வாய்வுக்கட்டுரையினைப் பூர்த்தி செய்துள்ளேன். சிறியேனது சிற்றறிவினைக் கொண்டு செய்த இச்சிறு முயற்சியில் ஏற்படும் சொற்குற்றம், பொருட்குற்றம், அனைத்தையும் கற்றோரும், மற்றோரும் பொறுத்தருளவேண்டும் என்று கேட்டு நிறைவுரையை நிறைவு செய்கின்றேன்.

## உசாத்துணை நூல்கள்


01) அருணாசலம்.கா., சைவசமயசிந்தாமணி, இந்து இளைஞர் மன்ற வெளியீடு, 1993

02) கலைவாணி இராமநாதன்., சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வெளியீடு, 1997.

03) கைலாசநாதக்குருக்கள்.கா., சைவத்திருக்கோயில் கிரியை நெறி, இந்து கலாபிவிருத்திச்சங்கம், 1963.

04) குமாரசாமி., மகோற்சவவிளக்கம், திருமயிலை, சே.வெ.ஜம்புலிங்கபிள்ளை பதிப்பித்தது, 1958.

05) குமாரசாமி.க.இ., கோப்பாய் - வரலாறு கூட்டுறவு, பாகம் 1, அரவிந்தவாசம், கோப்பாய், 1998.

06) குகபாலன்.க., யாழ்ப்பாண இடப்பெயர்வு, 1996.

07) சரஸ்வதி கனகரத்தினம், கோப்பாய்க்கிராம கல்வி அபிவிருத்தி, பட்டப்பின் கல்வி டிப்புளோமாத் தேர்வுக்கான ஆய்வுக்கட்டுரை, 1985.

08) சண்முகதாஸ்.அ., மனோன்மணி சண்முகதாஸ், ஆற்றங்கரையான், வாரவொல்லை வெளியீடு, 1989.

09) சிற்றம்பலம்.சி.க., ஈழத்து இந்து சமயவரலாறு பாகம் 1, பல்கலைக்கழக வெளியீடு, 1996.

10) தியாகராஜக்குருக்கள்.கு., மகோற்சவச்சிறப்பு, அருள்மிகு செல்லக்கதிர்காம கோவில், நீர்வேலி, 2001.

11) மங்கையற்கரசி லோகேஸ்வரன்., கோப்பாய்ப்பதியில் சைவமும் தமிழும், வெளியீ ஸ்ரீ சுப்ரமணிய கோட்டம் பழந்தெரு, கோப்பாய், 1990.

12) முத்தமிழ்விழா மலர், வலிகிழக்குப் பிரதேச கலாசாரபேரவை, 1999.

13) சித்தாந்தபானு. சோ.சுப்ரமணியக்குருக்கள் பாராட்டுவிழா மலர், 1971.

14) முருகன், கந்தசஷ்டிவிழா மலர், திருவாவடுதுறை ஆதீனம்,

15) நல்லைக்குமரன் மலர், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு, 1996, 1997, 2000.

16) பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள்.வி., "வடகோவைச் சித்திரவேலவர் ஊஞ்சற் பதிகம், சோ.சுப்பிரமணியக்குருக்களால் வெளியிடப்பட்டது. 1971.

17) சிவஸ்ரீ.சுப்பிரமணியக்குருக்கள்.சோ., அவர்களின் பாராட்டுவிழா சிறப்பு மலர், கோப்பாய் வடக்கு சனசமூகநிலைய வெளியீடு, 1998.

18) கந்தபுராணம்

19) கந்தரநுபூதி, கிருபானந்தவாரியார் உரை, திருப்புகழ் அமிர்தகாரியாலயம் சென்னை, 1970.

20) கந்தரலங்காரம், கிருபானந்தவாரியார் உரை, வானதி பதிப்பகம் சென்னை, 1978.

21) திருப்புகழ், அருணகிரிநாதர் அருளியது, அல்லயன் கம்பெனி, மயிலாப்பூர்,

22)

23) திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பனந்தாள், காசிமடம், 1957.

24) திருவாசகம். சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1938.

25) திருமூலர் திருமந்திரம், காசிமடம், திருப்பனந்தாள், 1951.

26) வடகோவை அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில், கோப்பாய், வெகுதானிய வருடம் "விசேட உபயங்கள், உற்சவங்கள்", 1998- 1999.

27) சைவநெறி தரம் - 10, தரம் - 11, கல்வி வெளியீட்டுத்திணைக்களம், 20(

## அநுபந்தம்

## வடகோவை ஸ்ரீ சித்திர வேலவர்

## திருவூஞ்சற் பதிகம்

### காப்பு

சீர்பூத்த செழுஞ்சாலி வளவேயாதி
    செறிதரு நல் வடகோவை திகழ்வதாகிப்
பார்பூத்த பயனுறுமுந் துவத்தையாகப்
    பகரிடமார் சித்திரவேற் பகவன்மீதாந்
தார்பூத்த தமிழூஞ்சற் கவிதைபாடச்
    சகலசரா சரமுயச் சார்ந்தேயோங்குங்
கார்பூத்த கரிமுகனைங் கரனாஞ்சித்திக்
    கணபதிதன் திருத்தாள்கள் காப்பதாமே.
    (உந்துவத்தை – இடப்பெயர்)

### பதிகம்

சீர்மேவும் அங்கமவை கால்களாகச்
    சிறந்ததரு மாதிகுத் திரமதாகப்
பேர்மேவும் இருஞானம் விட்டமாகப்
    பெருமைதரு நாதவிந்து விதானமாக
ஏர்மேவு மண்டபமொன் றிடையேவேத
    எழில்வடமார் பிரணவநற் பலகையேறிப்
பார்மேவு வடகோவைச் சித்ரவேலா
    பகருலகம் உயவிதா ஆடிரூஞ்சல். 1

சலசைநிகர் அம்மருவு தெய்வப்பெண்கள்
    தரளவொளி குலவுடந் தனைத்தொட்டாட்டப்
பலசதியும் நட்மடவார் பயிற்றி யாடப்
    பன்னிசையாழ் முனிதவோர் பணிந்துபாடக்
குலசயில நிகர்தடந்தோள் விபுதர்யாரும்
    குறைவில்மலர் மழைசொரிந்து குழுமிவாழ்த்தக்
கலசமுலை வள்ளியங்கா ஆடிரூஞ்சல்
    கதிதருசித் திரவேல ஆடிரூஞ்சல். 2

அருமறையின் முடிவாகி அநாதியாகி
    அப்பாலுக் கப்பாலாய் அறியொணாத
பொருவரிய பொருளாகிப் பூதமாகிப்
    பூதலத்தோர் வினைதீர்க்கும் புனிதமாகிப்
பெருமையுறு பிரணவமாய் நின்றவீசன்
    பிரசமலர் போல்நயனம் பிறங்கித்தோன்றித்
தரைபுகழும் சரவணவா வியில்வளர்ந்த
    சண்முகசித் திரவேலஆடிரூஞ்சல். 3
( - )

பங்கயமா மலர்ப்பீட முறைவோனாதிப்
    பண்ணவர்கான் பரியபரப் பிரமதேவே
தங்குமொரு நாற்புஜமுக் கோணத்து உ
    தகவுபெற அமர்வோனே சமயாத்தா
துங்கமிகுச் சுருவியா பகமேயாதி
    ஞா யவறு குணமாறு வதனமாக
அங்கயல்பாய் தருகழனிக் கோவைமேவி
    அருள்தருசித் திரவேல ஆடிரூஞ்சல். 4

நற்கீரனர்ச் சபையதனில் வழுவினோரா
நண்ணுமொரா யிரவர்தமை நாடிக்கூட்டிக்
கற்குகைவைத் தவரையெலாம் எண்ணும்பூதம்
கருதுதொகை தனிலொருவர் காணாநாளில்
சிற்பரனார் பூசைதனிற் புலமீத்தங்கட்
சார்தருவோ ரொழுமுறைநக் கீரன்றானும்
சொற்றுயர்நீத் துயப்பூதம் அறவேல்தொட்ட
மதிபுனைசித் திரவேல ஆடீருஞ்சல். 5

செந்தமிழின் வளர்வுதரு சங்கமேவித்
திகடருமக் கடறலிற் சிறந்தவாலகச்
சுந்தரமார் உக்கிரபாண் டியனேயாகித்
தொல்லுலகம் புரந்தருநற் றூயநாதா
சந்திரவேர் ஒளிவதனம் புயனே அன்பர்
தமதகமே குடிகொளுநற் சண்முகேசா
அந்திருமா நமர்தருநல் வடகோவைக்கண்
அமர்தருசித் திரவேல ஆடீருஞ்சல் 6

தற்பரனே சதுர்வேதம் தலைகாணத
சடட்சரனே அருள்வடிவே சாமிநாதா
சிற்சபைசேர் குருநாதன் அருள்வேலோனே
செந்தமிழ்சேர் சங்ககவி வாணர்நாதா
சற்குருவே பிரணவப் பொருளைவேதன்
தனைவினவிச் சிறையிருந் தனைமமேவும்
அற்புதனே அகிலமுய வடகோவைக்கண்
அமர்தருசித் திரவேல ஆடீருஞ்சல். 7

கருவிதரு மெய்ப்புலனுங் காட்டுவானுங்
காண்பவனுங் காட்சிதரு பொருளுமாகி
விரவுபொறி விடயங்கள் வினைகளாகி
வினைப்பயனை நுகர்விக்கும் இடைதாகிப்
பெருமையுறு தனக்குரிய பெருமைகாணாப்
பெற்றியனாய் நிட்களனாய் அத்தனாகி
அருமையுறு சகளவடி வினாக் கோவை
அமர்தருசித் திரவேல ஆடிரூஞ்சல். 8

சஞ்சிதமா தியமுற்றும் அகலவுற்றாச்
சாருமுயிர்க் கந்தநிலை தானேயாகிச்
செஞ்சொலுறு வேதசிவா கமங்கள் தாமும்
தெரிவரிய தாரகமெய்ப் பொருளுமாகி
வஞ்சிவடி வாங்கிரியா ஞானமோடு
மருவியளித் திடலாதி உந்துங்கொண்டே
மஞ்சுலவு மாடமொளிர் கோவைமேவி
வரமருள்சித் திரவேல ஆடிரூஞ்சல். 9

நான்மறைகள் வாழிசிவா கமமும் வாழி
நலம்பெறுநான் காச்சிரமம் புராணம் வாழி
மேன்மைபெறு மறையவர்யா காதி வாழி
விளம்புறுநற் சிவமுருகன் அடியார் வாழி
மான்விழியார் நிறைவுறுவா தென்றும் வாழி
மதிதொறுமும் மாரிபெயும் முகில்கள் வாழி
காண்மலிசீர் வடகோவைப் பதியோர் வாழி
கதியருள்சித் திரவேலர் வாழி வாழி. 10

## பராக்கு

துங்கமிகும் யானைமகள் துணைவா பராக்கு
சூரர்குல வேரறுக்குந் தோன்றால் பராக்கு
சங்கநிறை வயற்கோவை சார்ந்தாய் பராக்கு
தாவுமயில் வாகனத்திற் சார்வாய் பராக்கு
அங்குசமும் உந்துவத்தை அமர்வாய் பராக்கு
ஆகமரா லோதுபொருள் ஆனாய் பராக்கு
திங்களுதல் வள்ளிபுணர் செல்வா பராக்கு
திருந்துசித்ர வேற்கரத்துத் தேவே பராக்கு

## எச்சரிக்கை

சீரார்வயற் கோவைநகர் திகழ்வாய் எச்சரிக்கை
திளம்மாலயன் அரிநாடுந் தேவா எச்சரிக்கை
—அருள்தாராய் எச்சரிக்கை
வாரார்திரு வேலேந்திய மயிபா எச்சரிக்கை
வருதேவர்தஞ்சிறைமீட்டருள் வரதா எச்சரிக்கை
—திருமுருகா எச்சரிக்கை
ஏரார்தகர் ஏரும்பர மானாய் எச்சரிக்கை
எழிலார்தெய்வயானைவள்ளி கணவா எச்சரிக்கை
—குழந்தவே எச்சரிக்கை
காரார்குழல் உமையாள்தரு கந்தா எச்சரிக்கை
கருணாகர எனையாள்சிவ சுதனே எச்சரிக்கை
—சித்ரவேலா எச்சரிக்கை

### வாழி

பொன்னுலவு மான்மருக குமர வாழி
  பூட்கைமுக வற்கிளைய முருக வாழி
என்னுளமு ருக்கியருள் சாமி வாழி
  இமயகிரி மாதுசுத முருக வாழி
பன்னுபது மாசனற்கு போத வாழி
  பாலசிவ சுப்ரமண்ய ஈச வாழி
மின்னுலவு வேற்கரத்து விமலவாழி
  விவாகசித்ர வேலவற்கு வாழி வாழி.

### மங்களம்

நீலமயில் வாகனற்கு மங்களம் - நல்ல
  நித்ய வரோதயற்கு மங்களம்
பாலவடி வானவற்கு மங்களம் - எம்மைப்
  பாலனஞ்செய் வேலவற்கு மங்களம்
சீல அறு மாமுகற்கு மங்களம் - எவ்வில்
  சித்திதரு சண்முகற்கு மங்களம்
கோலசித்ர வேலவற்கு மங்களம் - இந்தக்
  கோவைநகர் மேவினற்கு மங்களம்.

முற்றிற்று.

திருத்தரு கோவைதன்னில் திகழுமுந் துவத்தைமேவி
அந்தியின் உயிர்கட்கென்றும் அருள்முதல் ஐந்தவான
கிருத்தியம் இயற்றிடுான கிரியையாஞ் சத்தியோடும்
கருத்தனாய் அமருஞ்சித்ர வேலவன் கழல்கள் போற்றி

சோதிமய மானசிவ சாமியருள் பாலா
  தோகைமயில் மீதுவரும் ஆறுமுகநாதா
மதநிரு வோர்தமை மணந்தருளும் ஏகா
  மங்கைசிவ காமியருள் எங்கள்குழ கேசா
பேதையடி யேனிமை வாவிடரு றாதே
  பேசரிய தீவினைகள் தீரவருள் செய்வாய்
காதன்மிகு கோவைநகர் மேவியுறை வோனே
  காமர்செழு சித்ரவடி வேற்குமரு கோனே.

சிவசுப்பிரமணிய தேசிகன் திருவடி வாழ்க.

# நூலாசிரியர் வரலாறு

சித்திரவேலவர் ஊஞ்சற்பதிகத்தை இயற்றிய ஆசிரியரான பிரம்ம ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயரவர்கள். கந்தரோடையில் கந்தர்கோவிலென வழங்கும் விநாயகராலயத்திற்குப் பரம்பரையர்ச்சக உரிமை பூண்டவரும் கௌணியர்குல திலகராய் விளங்கியவருமான விசுவநாத ஐயர் என்பவருக்குப் புதல்வராய்ச் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் தோன்றினார். அக்காலத்தில் சுன்னாகத்திற் பெரும்புலவராய் விளங்கியவரும் அ.குமாரசாமிப் புலவர் முதலிய பலருக்கு ஆசிரியராயிருந்தவருமான முருகேச பண்டிதரிடம் இலக்கிய இலக்கண சமய நூல்களைக் கற்றுப் புலமை பெற்றார்.

பின்பு வடகோவை சித்திரவேலாயுத சுவாமி கோவிற் பிரதிஷ்டாபகரான வேதக்குட்டிக் குருக்கள் அவர்களின் புதல்வியான இலட்சுமியம்மாளை மணஞ்செய்து இரு பிள்ளைகளைப் பெற்றார். மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவிற் பிரதம குருவாயிருக்கும் பிரம்மஸ்ரீ இரத்தினசாமிக் குருக்களும், கோப்பாய் பிரம்மஸ்ரீ சோ.சுப்ரமணியக் குருக்களின் தாயாரான காலஞ்சென்ற மீனாட்சியம்மா அவர்களுமே அவ்விரு பிள்ளைகளுமாவர்.

இப்புலவர் தென்னிந்தியாவில் தலயாத்திரை செய்து அங்குள்ள அறிஞர்களோடு தொடர்பு பூண்டார். கோப்பாயில் தமது இல்லத்தில் மாணவர் பலருக்கு நல்லாசிரியராயிருந்து கல்வியறிவூட்டிவருங்காலத்தில் நோய்வாய்ப்பட்டு நடுவயதிலேயே காலகதியடைந்தார்.

செல்லையர் என்னும் பெயரால் பலராலும் அறியப்பட்ட இவர் இவ்வூஞ்சற் பதிகத்தைவிட வேறு தனிப்பாடல்களும் பாடியிருக்கின்றார். இந்நூலில் வெளியிடப்பட்டிருக்கும் அத்தகைய இரு பாடல்களில் ஒன்றான சந்தப்புகழ்ப்பா முன்பு அச்சேறாதது. அவரது ஏட்டுப் பிரதியிற் கண்டெடுத்தது.